சிந்தாமணி

ஜனவரி 1927

## பொருளடக்கம்.


பக்கம்.

ஸ்ரீபோதராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்) ... 322
இந்தியப் பெண்களின் ஒப்பற்ற ஜீவனம் (பத்திராதிபர்) ... 323
விதவைக்குற்ற பந்து (ஸ்ரீமதி S. அம்புஜவல்லி) ... 324
எங்கள் சமாஜம் (ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்) ... 332
அர்ஜுனன் அல்லது பரத கண்டத்துச் சௌந்தரியக் கொடி (ஸ்ரீமதி பாகீரதியம்மாள்) ... 336
நாகரிகமா, சுதந்திரமா? (ஸ்ரீமான் ஆர். நாகராஜன்) ... 342
சாவித்ரி அல்லது தேசசரித்திரத்தை யொட்டி அதற்கேற்ப அமைத்த ஓர் கவிக்கதை (ஸ்ரீமதி சீதம்மாள்) ... 345
சத்போத வினா விடை (ஸ்ரீமதி P. மங்களாபாயி) ... 348
ஆரியாஸ்தமனம் (ஸ்ரீமதி R. கல்யாணி அம்மாள், 'சரஸ்வதி' பத்திராதிபர்) ... 351
சோம்பல் (குகப்[illegible]) ... 356
பர்வத குமாரி (ஸ்ரீமான் [illegible] குமார சர்மா) ... 357
ஆலயந்தொழுவது [illegible] (ஸ்ரீமதி செ. ராஜம்மாள்) ... 363
மார்க்கோ போலோவின் யாத்திரைகள் (ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்) ... 364
பாலிகா நாடக மஞ்சரி—மலர் I சுகன்யை சரித்திரம் (ஸ்ரீமதி குகப்ரியை) ... 368
மருந்தின்மை யென்னும் ஆரோக்கியத்தின் நுட்பம் (புதுச்சேரி, இயற்கை இல்லம், ஸ்ரீமான் கி. லக்ஷ்மண சர்மா) ... 372
மனோன்மணி அல்லது மாசற்ற காதல் சிறு கதை (ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்) ... 374
பலமணிக் கோவை (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.) ... 382



THE [illegible] OFFICE 11 MAR 1927


---

*M. R. Ry. K. V. Sesha Aiyangar Avl., M. A., B. L., High Court Vakil, 23, Nadu Street, Mylapore, writes under date 9th January 1927 :—*

**I have always looked forward to the next issue of the "Chintamani" with much interest and its articles have been read by myself and my friends with pleasure and instruction. Though perhaps primarily intended for ladies, its contents will amply repay perusal to gentlemen also. I have no doubt that the journal will grow in popularity and usefulness.**

# Some Select Opinions on "Chinthamani."

*The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—*

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani*. From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

***Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl.,* M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—***

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz. the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

***M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.***

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

## *Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—*

**Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the woman-hood of India is of great interest.**

**Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.**



## *Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.*

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTHIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

*Chinthamani* contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.— *West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

**The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.***



*The Hindu under date 11-4-'25 writes:—*

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows :—

**I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.**

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind. This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

# Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

*P. G. Naicker Esq., Durban; 25th April 1925.*

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearence of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

*Goonaruthinum, Esq., Durban, Natal; 14th March 1925.*

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.


# CHINTHAMANI.

**A HIGH CLASS TAMIL MONTHLY.**

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. III.] January 1927. [No. 6.


श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

# சிந்தாமணி

## சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY

SISTER V. BALAMMAL

DAUGHTER OF

*Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.*

*(All Rights reserved by the Authoress)*

सुबोधराम चरिते

॥ अरण्यकाण्डः ॥

भूषणानि तदा सीताविमुक्तान्यम्बरस्थलात् ।
महीध्रशिखरस्थस्य सुग्रीवस्यापतन्पुरः ॥ २७ ॥

सीताविमुक्तानि சீதையால் கழற்றி யெறியப்பட்ட भूषणानि ஆபரணங்கள் अम्बरस्थलात् ஆகாய வழியினின்றும் तदा அப்பொழுது महीध्रशिखरस्थस्य மலையுச்சியிலிருந்த सुग्रीवस्य சுக்ரீவனுக்கு पुरः முன்பாக अपतन् விழுந்தன ॥ २७ ॥

अशोकवनमासाद्य तत्र सीतां निवेश्य च ।
न्ययुङ्क्त तद्रक्षणार्थं रावणोऽसौ निशाचरीः ॥ २८ ॥

असौ அந்த रावणः ராவணன் अशोकवनं அசோக வனத்தை आसाद्य அடைந்து तत्र அவ்விடத்தில் सीतां சீதையை निवेश्य வைத்து तद्रक्षणार्थं சீதையைக் காவல் காக்கும்பொருட்டு निशाचरीः च அரக்கிகளையும் न्ययुङ्क्त நியமித்தான் ॥ २८ ॥

शिंशुपाद्रुमवेद्यन्ते तस्थौ सा राघवप्रिया ।
दशकन्धरवंशस्य दावानलशिखोपमा ॥ २९ ॥

सा அந்த மகிமை வாய்ந்த राघवप्रिया ஸ்ரீராமபிரானின் பத்தினியாகிய சீதாப்பிராட்டியானவள் शिंशुपाद्रुमवेद्यन्ते சிம்சுபா மரத்தின் அடியில் दशकन्धरवंशस्य ராவணனுடைய வம்சத்திற்கு (ராவணன் வம்சமாகிற மூங்கிற் புதருக்கு) दावानलशिखोपमा (सती) காட்டுத் தீ போன்றவளாக तस्थौ வீற்றிருந்தாள் ॥ २९ ॥

आगच्छन्नथ रामोऽपि स्वाश्रमं प्रति सत्वरम् ।
...ऽभिमुखमायान्तमपृच्छदनुजं तदा ॥ ३० ॥

अथ பிற்பாடு रामोऽपि ஸ்ரீராமரும் स्वाश्रमं प्रति தனதாச்சிரமம் குறித்து सत्वरं விரைவாக आगच्छन् (सन्) திரும்பி வருபவராக तदा அப்பொழுது अभिमुखं தனக்கெதிராக आयान्तं வந்துகொண்டிருக்கும் अनुजं தம்பியை दृष्ट्वा பார்த்து अपृच्छत् வினவினர் ॥ ३० ॥

*(To be continued.)*

207612

ஸ்ரீராமஜயம்.

# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] அக்ஷய—தை. January 1927. [இத

## இந்தியப் பெண்களின் ஒப்பற்ற ஜீவனம்.

(பத்திராதிபர்)

(260-வது பக்கத் தொடர்ச்சி)

இங்கிலாந்திலிருந்து பிரிந்து போயுள்ள அமெரிக்காவும் இன்றளவும் தன் தாய் நாட்டின் அனுஷ்டானத்தைக் கைவிடாது நடந்து கொள்வதினாலேயே கோடீச்வரர்கள் வசிக்கும் அளகாபுரி யென விளங்குகின்றதென்று சொல்லலாம். தீர்க்கதரிசனத்தின் மீதும் தீர்க்காலோசனையாலும் நிச்சய புத்தியாலுமே முன்னோர்கள் ஒரு வழக்கத்தை யேற்படுத்தியிருந்திருக்கவேண்டுமென்ற நம்பிக்கையுடன் நடப்பவர்களுக்கு அப்போதைக்கப்போது அவசியமாயேற்படவேண்டிய சீர்திருத்தங்களும் முன்னோர்களின் லட்சியத்தை மீறாததாகவே ஏற்படுமென்பதில் தடை யென்ன விருக்கிறது? இவ்வாறிருக்க இந்தியப் பெண்களின் ஜீவனமானது தொன்று தொட்டு இன்றளவும் கண்ணியம் வாய்ந்ததாக இருக்கும்போது பிற நாட்டு ஸ்திரீகள் என்ன செய்கிறார்கள், எவ்விதம் நடக்கிறார்கள் என்பதைப் பின்பற்றல் அவசியமே இல்லை. அயல் நாடுகளும் இந்திய ஸ்திரீகளின் பெருமையைப் பற்றியும் இவர்களின் நடையுடைபாவனைகளைப் பற்றியும் குடும்பவாழ்க்கையில் இவர்களுக்கிருக்கும் அந்தஸ்தைப் பற்றியும் சுக ஜீவனத்தைப் பற்றியும் புகழவாரம்பித்திருக்கின்றனவாயின் இந்திய ஸ்திரீகளின் ஜீவனத்தைப் பற்றி உயர்த்திக் கூறவும் வேண்டாம். இந்தியப் பெண் இளமையிலிருந்தே ஒரு குடும்பத்திற்குத் தலைவி என்ற நோக்கத்துடன் பெற்றோரால் வளர்க்கப்படுவதன்றி உத்தியோகம் வகிப்பதற்கென்றும் தங்கள் குடும்பத்திற்குப் பொருள் தேடி

வருவதற்கென்றும் நினைக்கப்படுவதில்லை. பெற்றோரால் தக்கவிடத்தில் விவாகிக்கப்பட்டு, கணவன் ஆதீனத்திலிருந்து அவன் தேடி வருவதைக் கோடி யென மதித்துக் குளிர்ந்த மனத்துடனும் மலர்ந்த முகத்துடனும் தன் வாழ்நாளைக் கழிக்கும் பாக்கியம் இந்தியப் பெண்மணிகளுக்கே வாய்த்திருக்கிறது. இம்மை, மறுமை இரு வழிக்கும் ஒப்பற்ற சாதனமாய் அமைந்துள்ள இல் வாழ்க்கையில் சகதர்மசாரிணி என்ற உயர் பதவி வகிப்பவள் இந்தியப் பெண்மணியே ஆவாள். பக்தி மார்க்கத்திலும் தத்துவ ஆராய்ச்சியிலும் சமமான உரிமை பெற்று கிருகஸ்த தர்மத்திலுள்ள ஆடவனுக்கு இவ்வழியில் உற்ற துணையாக ஏற்பட்டிருப்பினும் இம்மைக்குரிய போகபாக்கியங்களையும் மறுமைக்குரிய மோட்ச வழியையும் தன் கணவன் மூலமாகவே அடைய வேண்டுமென்ற நிச்சய புத்தியும் பணிவும் இந்தியப் பெண்ணிடமே குடிகொண்டிருக்கிறது. அக்னி சாட்சியாக மணந்த கணவனையோ அல்லது அவனுடைய அன்பையோ இழந்துவிடின் உலக வாழ்க்கையிலுள்ள சுக சந்தோஷங்களை அறவே ஒழித்துத் துறவிபோல் வாழக்கூடிய மனோதைரியமும் சலனமற்ற சிந்தையும் இந்தியப் பெண்ணிடமே காணலாகும். இந்தியாவில் அற்பமான வருவாயுள்ள ஆடவனும் தான் மணந்து கொண்டாள் உள்ளதைக்கொண்டு சுகமாகக் காலங் கழிக்கலாமென்று எண்ணுவதும் இந்தியப் பெண்ணின் சிறப்பிற்கு ஏற்ற அத்தாட்சியாகும். இத்தகைய உயர் வாழ்க்கையிலிருக்கும் இந்தியப் பெண்களுக்குத் தற்காலம் ஏற்படவேண்டிய சீர்திருத்தமும் முன்னேற்றமும் கல்வியும் அவர்களின் புராதனக் கொள்கைக்கு அணுவளவும் மீறியிருத்தல் கூடாதென்பதும் மீறியிருக்கவேண்டிய அவசியமில்லை என்பதுமே நமது சீர்திருத்த வாதிகளுக்கு நாம் பணிவுடன் செய்து கொள்ளும் வேண்டுகோளாகும்.

## விதவைக்குற்ற பந்து.

சிறு கதை.

(ஸ்ரீமதி S. அம்புஜவல்லி)

சுமதி ஓர் இளம் விதவை. வயது சுமார் 30 இருக்கும். அவளுக்குக் குழந்தைகள் ஐந்து. மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களுமாம். மூத்த பையன் இராமனுக்கு 16 வயது. அவ்வருடம்தான் பிரவேசப் பரீட்சைக்குப் போகுன். மற்ற இரு பிள்ளைகளுக்கும் முறையே 14, 12 பிராயம் நடக்கிறது. பெண் சசிலைக்குப் பத்தாம் பிராயம் நடக்கிறது. கடைசிப் பெண் கைக்குழந்தை.

சுமதிக்குக் கிட்டிய பந்து ஒருவரும் இல்லை. அவள் புருஷன் சென்னையில் ஒரு பெரிய கம்பெனியில் தலைமை குமஸ்தாவாக இருந்தான். மாத வரும்படி சுமார் 75 ரூபாய் இருக்கும். அவன் பிறந்த ஊர் குக்கிராமம். அங்கே ஓர் சிறு வீடும் சொற்ப நிலமும் அவனுக்குண்டு. அவர்களுக்குச் சிறு பிராயத்திலேயே விவாகமாய்க்குழந்தைகளும் பிறந்து சம்சாரம் பெருக்கவே குடும்பச் செலவு அதிகரித்து ஆபத்து சமயத்திற்காக ஒன்றும் சேர்த்து வைக்கக் கூடாமற்போயிற்று.

நம் கதை நடக்குங்கால் சென்னையில் "டெங்கு" என்ற கொடிய சுரம் எங்கும் பரவிப் பலரைத் தலைக்கிறையாக்கி அநேக குடும்பங்களை மீளாத்துயரத்தில் ஆழ்த்தி வந்தது. மேற்கூறிய குடும்பங்களில் நமது சுமதியின் குடும்பமும் ஒன்றாகும். முதன் முதல் குழந்தைகள் ஒவ்வொன்றாய் நோயின் வாய்ப்பட்டுப் பிழைத்தது புனர் ஜன்மமென ஆய்விட்டது. மருந்து, வைத்தியம் எனக் கையில் இருந்தவற்றில் பாதிக்குமேல் பணம் செலவாயிற்று. பிறகு சுமதியின் புருஷனே நோயுண்டு தன் மனைவி மக்களை எவருங்காப்பாரில்லாமல் தனியே பரிதவிக்கவிட்டுப் பரலோகப்பிராப்தியடைந்தான். அந்தோ! இனி இக்குடும்பத்தின் கதி யென்ன? அவ்வேழை விதவையின் புலம்பலுக்கு இனியோர் வரம்புண்டோ? எத்தனை நாள் அழுதென்ன?

> "ஆண்டாண்டுதோறு மழுதபுரண்டாலும்
> மாண்டார் வருவாரோ மானிலத்தில்"

என்றபடி அக்குடும்பத்தார் அழுதழுது கண்ணீரை ஆறப்பெருக்கியும் மாண்டவர் மீண்டுமுயிர் பெறவில்லை. தவரில்லாக் குடும்பம் தவிக்கலாயிற்று. பிறகு சுமதி மெள்ள மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு மேல் நடக்க வேண்டியவைகளைக் கவனிக்கலானுள். கையில் மிஞ்சி இருந்தவற்றைக்கொண்டு தன் கணவனுக்கு மாணச் சடங்குகளைச்செய்து முடித்தாள். கடைசி தினத்தன்று அவன் புருஷனுக்குத் தெரிந்த சிலரும் பிராமணர் பலரும் வந்து வயிறார உண்டு சென்றனர். அவ்வேழை விதவைக்கு உண்மையில் உதவி செய்ய முன் வந்தவர் ஒருவருமில்லை. ஆயினும் தங்களைக்கேளாவிடினும் பலர் பலவாறு யோசனை மட்டும் கூறிச் சென்றனர்.

சுமதிக்கு இவர்கள் கூறின புத்திமதிகள் ஒன்றும் மனதிற்கு சரி யென்று படவில்லை. அவர்களுக்கு ஊரில் உள்ள வீடு நிலமாகிய அந்த சிறு பூஸ்திதியையும் விற்று, காலட்சேபம் செய்து, பையன்களை மேல் படிப்புக்குப் படிக்க வைப்பதென்பதாவது, சிறிது கடன் வாங்கி வியாபாரம் செய்வதென்பதாவது, அல்லது வெளி நாடுகளுக்கெங்காவது சென்று ஏதேனுமொரு தொழில் தேடிக் கொள்வது என்பதாவது ஒன்றும் சுமதிக்கு யுக்தமாய்த் தோன்றவில்லை. சிலர் கூறியவாறு சென்னையிலேயே இருந்துகொண்டு, மூத்த பையன் இராமனை ஏதாவது குமஸ்தா வேலையில் அமர்த்தி வரும் சம்பளம்கொண்டு ஜீவிக்கலாமென்றாலோ அதுவும் கூடாத காரியமாய்த் தோன்றிற்று. ஏனென்றால் சாதாரணமாய் குமஸ்தா சம்பளமாகிய 20, 25 ரூபாயைக் கொண்டு, இப்பட்டணத்தில் இவ்வளவு பெரிய குடும்பத்தை எப்படி ரட்சிப்பது என்பது பெரிய யோசனையில் வந்து முடிந்தது. இவ்விதம் இவள் ஒருவித முடிவுக்கும் வாராமல் கலவரமடைந்தவளாய்த் தன் பையன்களை அழைத்து வைத்துக்கொண்டு என்ன செய்யலாமென்று யோசனை கேட்டாள்.

இராமனுக்குப் படிப்பில் சிறிதும் பிடித்தமில்லை. இது காறும் ஏதோ கட்டாயத்தின் மேல் ஏதோ கஷ்டப்பட்டுச் சிறிது படித்து வந்தான். மேலே போகப் போக, படிப்பு அவனுக்குக் கஷ்டமாய் இருக்கும்போல் தோன்றிற்று. அவனுக்குத் தான் படித்து நல்ல தேர்ச்சி பெருவோம் என்ற நம்பகமும் இல்லை. ஆற்றலுமில்லை. ஆகையால் இப்போது தன் படிப்பை இதுமட்டும் நிறுத்திவிட நினைத்தான். அவனுக்கு ஒருவர்கீழ் உத்தியோகம் பார்ப்பது என்பதும் பிடிக்கவில்லை. சுயேச்சையாய் இருப்பதைக்கொண்டு வசிக்க ஆசைபட்டான். அவன் தம்பி சின்னி கிருஷ்ணனுக்கும் அப்படியே படிப்பில் புத்தி ஓடவில்லை. ஏதாவது கைத்தொழில் செய்யவேண்டுமென்ற அவா அவனுக்கு அதிகமுண்டு. இவர்கள் விருப்பத்தைத் தெரிவிக்க, பின்பு யாவரும் கூடிப் பேசி, வேறு வழி காணுமல், தங்கள் ஊருக்குப்போய் நிலத்தைப் பயிரிட்டுச் சாப்பிடுவது எனது நிர்மா

னித்தார்கள். சுமதியின் கடைசிப் பையன் சுந்தரத்திற்குமட்டும் தான் படித்துத் தேர்ச்சிபெற வேண்டுமென்ற ஆவல் இருந்தது. ஆனால் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள மார்க்கம் காணாமல் அவர்களுடன் கிராமத்திற்கே செல்ல உடன்பட்டான்.

பின்பு தீர்மானித்தபடி கிராமம் செல்வதற்கான ஏற்பாடு செய்து கொண்டார்கள். சுமதியின் கணவன் வேலை செய்த கம்பெனிக்காரர்களிடமிருந்து இவர்களுக்கு 150 ரூபாய் நன்கொடையாய்க் கிடைத்தது. அதையும் சுமதி தான் அணிந்திருந்த ஒன்றிரண்டு நகைகளை விற்று வந்த பணத்தையுங்கொண்டு ஊர் வந்து சேர்ந்தார்கள். ஊர் வந்து சேர்ந்ததும், வீட்டைச் செப்பனிட்டு, வயலுக்கு வேண்டிய சில கருவிகளையும் மற்றும் வீட்டுக்கு வேண்டிய தட்டு முட்டு சாமான்களையும் வாங்கிக்கொண்டு, மிச்சத்தை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள்.

இவ்வித ஏற்பாடுகள் செய்து முடிந்ததும் இராமன் கூலி ஆட்களை வைத்துக்கொண்டு நிலத்தைப் பயிரிட ஆரம்பித்தான். கிருஷ்ணனும் அவனுக்குதவியாயிருந்து, ஒழிந்த நேரங்களில் அவ்வூர்த் தச்சனிடம் வேலை கற்று வந்தான். சுந்தரனை மட்டும் கிராமப் பள்ளிக்கு அனுப்பினார்கள். சுமதி தன் பெண் சுசீலையுடன் வீட்டு வேலைகளைப் பார்த்து வந்தாள். இப்படி இருக்க அவ்வூருக்கு வந்ததில் அக்குடும்பத்தாருக்கு எல்லாம வெகு கஷ்டமாயிருந்தது. இராமனுக்கு விவசாய அனுபவம் போதாததால் அவ்வருஷம் அறுவடை பலன் தரவில்லை. கிருஷ்ணனுக்குத் தச்சத் தொழிலில் தேர்ச்சி பெற வசதி கிடைக்கவில்லை. முக்கியமாய் வண்டிச் சக்கரங்களையும், இரிசுகளையும், கோடாலிக் காம்பு முதலிய முரட்டு வேலைகளைச் செய்வதும் செப்பனிடுவதுமே அங்கு ஏற்பட்ட தொழிலாய் இருந்தது. ஆகையால் அத்தொழிலையே கொண்டு யாதொரு நிரந்தரமான லாபத்தைப் பெற முடியாது என்பதைச் சின்னி அறிய, வேறு என்ன செய்தால் லாபகரம் என்பதை உணராமல் வருந்தினான். சுந்தரத்திற்குக் கிராமப் பள்ளியில புகட்டப்படும் படிப்பு போதாமல் இருந்தது. மேலே படிக்க அங்கோர் வசதியுமில்லாததால் பழயபாடத்தைப் படிக்கவேண்டியிருந்தது. சுமதிக்கோ தன் கணவனை இழந்த துக்கம் ஒருங்கே பாதிக்க, இக்குழந்தைகளை வைத்து எப்படிக் காப்பாற்றப்போகிறோமென்ற ஏக்கம் ஒரு பக்கம் பிடித்து வாட்டிற்று. இவ்வாறிருக்க வரும்படி ஒன்றுமே இல்லாமல், குடும்பச் சிலவுகள் மட்டும் அதிகரித்துக்கொண்டே வந்தன. எப்படி எனில் பட்டணவாசத்தால் உண்டான பல கெட்ட பழக்கவழக்கங்களை விடாமல் அனுசரித்துக் காலை உப்புமா காப்பி சாப்பிடுவது முதலியவைகளைச் செய்து வந்ததால் இவர்களுக்கு அதிகப் பணச்சிலவு ஏற்பட்டது. மேலும இவர்கள் கிராமத்திற்குப் புதியவர் ஆகையால், அக்கிராமத்தார் இவர்களைச் சற்று அவநம்பிக்கையுடன் நடத்த, இவர்களும் தாங்கள் பட்டணத்தார், நாகரிகத் தேர்ச்சி பெற்றவர் என்ற கர்வங்கொண்டு அவர்களை அலட்சியமாய் நடத்தி வரவும், பரஸ்பரம் மனஸ்தாபம் ஏற்பட்டு, பலவிதத்திலும இவர்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டன.

இந்த நிலைமையில் இவர்கள் கையில் வைத்திருந்த ரொக்கப பண முழுமையும சிலவாய் விட்டது. சாப்பாட்டுச் சிலவிற்கு இனி வழி இல்லை. கடன் வாங்கவேண்டியிருந்தது. நிலத்தை அடமானம வைத்துச் சிறிது பணம் கடன் வாங்கினார்கள்.

நிற்க, முதல் வருஷத்தைக்காட்டிலும் 2 ஆம் வருஷம் அறுவடைசிறிது அதிகம்பலன் கொடுத்



தாயினும், இவர்கள் வீட்டுச் சிலவிற்கு போதவில்லை. அத்துடன் முன் இவர்கள் வாங்கிய கடன் அடைபடாமல் வட்டியும் முதலுமாய் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவ்வூரில் ஒரு பெரிய மிராசுதார் இருந்தார். அவர் பெயர் நாராயண சாஸ்திரி. வயது சுமார் 50 இருக்கும். அவருக்கு இரண்டு தாரம் தவறி விட்டது. குழந்தைகள் பிறந்திருந்தும், இன்னொரு முறை விவாகம் செய்துகொள்ள இச்சித்தார். ஆனால் அவ்வூரார் ஒருவரும் அவருக்குப் பெண் கொடுக்க ஒப்பவில்லை. என்ன செய்வார் பிராமணர்? எங்கடா பெண்ணகப்படும் என்று தேடி யலைந்தார். இவர்தான் நம் இராமனுக்கு அவன் நிலத்தின் மேல் கடன் கொடுத்தவர். ஆகையால் அவன் குடும்ப விவகாரங்கள் எல்லாம் நன்குணர்ந்திருந்தார். அவனுக்கோர் தங்கை விவாகத்திற் கிருக்கிறாள் என்று அறிந்து அவளை மணக்க நிச்சயித்தார். இராமனிடம் இதை மெள்ள வெளியிட்டு, தான் பெண்ணுக்கு அதிக நகை போடுவதுமல்லாமல், அவர்கள் கடனையும் பைசல்செய்து விடுவதாய்க் கூறினார். இராமனுக்கு இதற்குச் சம்மதிக்க சற்றும் மனமில்லை. ஆனாலும் அவரை நேரில் விரோதித்துக் கொள்ளக்கூடாது என்று, யோசித்துக் கூறுவதாய்ச் சொல்லி விட்டான். இதை சுமதி அறிய அவளும் அதற்கு சற்றும் சம்மதிக்கவில்லை.

ஒரு நாள் இராமன் வீட்டு வரவு சிலவுகளைக் கணக்குப் பார்த்துவிட்டு, வெகு சலிப்புடன் தன் தாயைப் பார்த்துப் பின் வருமாறு "அம்மா! என்னதான் முயன்று பார்த்தும் வரவிற்குச் சிலவு கட்டிவந்த பாடில்லை. வாயிதாத் தொகை கட்டி மீறுவது சொற்பமே. ஏதாவது மாதம் நாலு ஐந்து ரூபாய் கையில் மேன்சிலவிற்குக் கிடைத்தால் ஒருவாறு காலந்தள்ளலாகும். இப்போதிருக்கிற மாதிரியில் கடனும் வட்டியுமே விஷம்போல் ஏறுகிறது, எத்தனை நாள் இப்படி நடக்க முடியும்?" என்று சலித்து கூறினான். இதைக்கேட்ட சுமதிக்குப் பெருத்த கவலையாய் விட்டது. பலகால் யோசித்தும் ஒரு வழியும் புலப்படவில்லை. கடைசியில், தன் பெண் சுசீலையை நாராயண சாஸ்திரிக்கு மணம் செய்வித்துக் கொடுப்பதே தன் குடும்பத்தைக் காப்பாற்றும் மார்க்கமென நிச்சயித்தாள்.

50 வயது கிழவனுக்குத் தன் இளம் பெண்ணைக் கொடுக்கத் துணிந்தோமே என்று தன்னைத் தான் நிந்தித்துக்கொண்டாள். ஆனால் என்ன செய்வாள்? ஒரு பக்கம் பார்த்தால் குடும்பமே அதோகதியாய் விடும்போலிருக்கிறது. மேலும் சுசீலைக்குச் சீக்கிரம் விவாகம் செய்யும் திசை வந்து விடும். இவர்கள் தற்காலம் இருக்கும் நிலைமையில் வேறு யார் பெண் கொள்ள முன் வருவார்கள்? இதை எல்லாம் யோசித்தே இந்த முடிவுக்கு வந்தான்.

அதிருஷ்டமிருந்தால் தன் பெண் மாங்கல்யம் வளரப்பெற்று சுகப்படுவாள் என்றும் நினைத்தாள்.

பின்பு ஒரு நாள் இராமனிடம் இதை மெள்ளப் பிரஸ்தாபித்து அவனுக்குப் பல காரணங்களை எடுத்துக் காட்டி தன் எண்ணப்படியே அவனையும் இணங்கும்படி செய்தாள். அவனும் வேறு வழி காணாது அதற்கு ஒத்துக்கொண்டு அன்றே தான் சாஸ்திரிகளைக் கண்டு பேசி முடித்துவருவதாய்க் கூறிச் சென்றான்; ஆனால் நல்ல வேளையாய் இவன் சென்றபோது சாஸ்திரியார் ஊரிலில்லை. திரும்பி வர இரண்டு வாரம் செல்லுமென அறிந்தான். அன்று மாலை ஊர்க் குட்டிகளுடன் விளையாடச் சென்ற சுசீலை வீட்டிற்கு வந்ததும், சுமதி தன் பெண்ணைக் கிட்ட அழைத்து நடந்த சங்கதியை உரைத்தாள். பேதை சுசீலைக்குத் தன்னை ஓர் கிழவனுக்கு மணம்

செய்விக்கப் போகிறார்கள் எனத் தெரிய வெகு துக்கம் வந்து விட்டது. ஆனாலும் தன் தாயின் விருப்பத்திற்கு மறுத்துக்கூற இயலாதவளாய் மௌனமாயிருந்து விட்டாள். மேலும் இதனால் தங்கள் குடும்பக் கஷ்ட திசை நீங்கி சுகப்பட இயலுமென்பதை அறிவாளன்றோ? பிறகு அன்று மாலை யாவரும் ஒன்று கூடி இதைப்பற்றிப்பேசிச் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். சுமதி தன் பெண் முகத்தை நோக்குந்தோறும் மனம் புழுங்கி "தெய்வமே! வேறு வழி காட்டாயோ!" என உள்ளுக்குள்ளே உருகிக் கடவுளைப் பிரார்த்திப்பாள். அப்போது சுந்தரன் அன்று தன் வாத்தியாரிடமிருந்து வாங்கி வந்த "சுதேசமித்திரன்" என்னும் பட்டணத்துப் பேப்பரை உரக்கப் படிக்கவாரம்பித்தான். அதின் தலையங்கத்தில் முதல் நாள் பட்டணத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் யாரோ ஒரு மகான் கதரைப் பற்றியும் கைராட்டினத்தைப் பற்றியும் விஸ்தாரமாய் எடுத்துக் கூறியுள்ள உபன்னியாசம் வந்திருந்தது. மேலும் அம்மகான் கிராமங்கள் தோறும் சென்று கதரபிவிருத்தியைப் பற்றிப் பேசப் போகிறார் என்றும் வருகிற வாரத்தில் இவர்களிருக்கும் ஊருக்கு அடுத்த பெரிய ஊரில் ஒரு நூற்கும் ஆலயமும் தேசியப் பாடசாலையும் திறந்து வைக்கப்போகிறார் என்றும் கண்டிருந்தது. இதைப் படிக்கக் கேட்ட சுமதி மனதில் திடீர் என்று ஓர் புதிய எண்ணம் உதித்தது. தன் பையன்களைப் பார்த்து, "பசங்களா! எனக்கோர் யோசனை தோன்றுகிறது" என்றாள். "அது என்ன?" என்று அவர்கள் கேட்க அதற்கு சுமதி—"குழந்தைகாள், நாம் ஏன் மகாத்மா காந்தி கூறுகிறபடி நடந்து நூல் நூற்று வரக்கூடாது? இராமா! உனக்கு வயலை பார்த்துக் கொள்வதில் போது சரியாய் விடும். சின்னனுக்கும் சுந்தரத்திற்கும் அவரவர்கள் ஜோலி இருக்கிறது. ஆனால் நானும் சுசீலையும் வீட்டு வேலை நேரம்போக மற்றப் போது சும்மா இருக்கிறோம். ஏன் நாங்கள் நூற்கக் கூடாது? ஒருவர் தினம் 4 மணி தேச காலம் நூற்றால் குறைந்தது 1 அணாவாவது கிடைக்குமென்று அம்மகான் கூறியுள்ளாரே. நானும் சுசீலையுமாய் சேர்ந்து நூற்றால் மாதம் 4, 5 ரூபாயாவது சம்பாதிக்க இயலுமே" என்றனள். இதைக் கேட்ட மற்றவரும் இது நல்ல யோசனை தான் என்று ஒத்துக்கொண்டார்கள். இதற்குள் சின்னனுக்கும் ஓர் எண்ணம் உதித்தது. "அம்மா! நான் நெசவுத் தொழில் கற்றுக் கொள்ளுகிறேன். நீங்கள் நூற்கும் நூலை ஒருவரும் வாங்கிக்கொள்ளாவிடில் நாமே துணி நெய்து கொள்ளவாவது இயலும்" என்றான் அப்படியே செய்வதென்று தீர்மானித்து மறுவாரம் எப்போது வருமென்று எல்லாரும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

மறுவாரம் வந்தது. காந்தி மகான் குறிப்பிட்ட ஊருக்கு விஜயம் செய்து மேற் கூறியவாறு நூற்கும் ஆலயம், தேசியப் பாடசாலை இவைகளைத் திறந்து வைத்தார். மாலையில் பொதுஜனங்களுக்கோர் உபன்னியாசம் செய்தார். அதில் "கிராம வாழ்க்கை மேம்படுவதற்கு இராட்டினம் அத்தியாவசியம் என்றும், எப்படி அது குடும்பச் சிக்கன விஷயத்திற்கு உதவுகிறது என்றும், குடும்ப ஸ்திரீகள் ஒழிந்த நேரங்களில் நூற்பதைக் கையாண்டு எப்படி ஆபத்து காலத்தில் தங்கள் தலைவர்களுக்கு உதவி புரியலாமென்றும் எடுத்துக் கூறினார். இன்னும் டாம்பீகமற்ற பரிசுத்தமான கிராம வாழ்க்கையைப் பற்றியும் அதனைச் செல்வனே நடத்தும் விதமும், காப்பி, டீ, மதுபானம், சிற்றுண்டி முதலியவற்றின் கெடுதல்களையும் அவைகளை விலக்கி விடுவதால் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய நன்மையைப் பற்றியும் விஸ்தாரமாய் எடுத்தோதினார்.



நடையில் சமத்துவம், சுதேசியம், தேசபக்தி முதலியவை பற்றிக் கூறி, நூற்பது குடிசைத் தொழிலாய் ஏற்பட்டு நாடெங்கும் பரவி வந்தால் தேசத்தின் ஏழ்மை நீங்கிப் பிரஜைகள் சுகப்பட ஏதுவாகும் என்றும் சொன்னார்.

இந்தப் பிரசங்கத்தை உன்னிப்பாய்க் கேட்டு வந்த சுமதி இராமன் முதலியோரும் மனதில் புதிய புதிய உணர்ச்சிகள் உதிக்கப்பெற்று வேறு பிறப்புகளை அடைந்தவர்கள் ஆனார்கள். அவர்கள் வாழ்க்கை நோக்கத்தில் பெரியதோர் மாறுதல் ஏற்பட்டுப் புதியதோர் லட்சியத்தை உடையவர்களாய் ஆனார்கள் சுமதி, சுசீலை இருவரும் நூல்நூற்று அதற்குக் கிடைக்கும் கூலியைக்கொண்டு குடும்ப மேன்சிலவிற்குப் போடுவதென்றும் கேவலம் தேவையைக்காட்டிலும் மேம்படியான செலவுகளை மட்டுப்படுத்திச் சிக்கனமாய் இருந்து வந்து நாளடைவில் மெள்ளக் கடனை அடைத்து விடுவது என்றும் சுசீலையை நாராயண சாஸ்திரிக்குக் கொடுக்காமல் நல்ல வயது வந்த பிறகே யுக்தவரனுக்கு விவாகம் செய்து கொடுப்பது என்றும் தீர்மானித்தார்கள்.

இராமன் மகாத்மாவை நேரில் தரிசித்து, தற்காலமிருக்கும் தங்கள் குடும்ப கஷ்ட திசையைப் பற்றிக் கூறி, தன் தங்கையும் தாயாரும் நூற்று அதற்குப் பரிகாரம் தேட உத்தேசித்திருப்பதைப் பற்றியும் சொன்னான்.

அதைக் கேட்டு, காந்தி மகான் சந்தோஷப்பட்டு, பிரியத்துடன் சில புத்திமதிகள் கூறி, 2 இராட்டினமும் நூற்பதற்குச் சிறு பருத்தியும் தந்து, அதை நூற்றதும் நூற்கும் ஆலயத்ததிகாரியிடம் கொடுத்து அதற்கான கூலியைப் பெற்றுப் போகும்படி உத்திரவிட்டார். இராமன் இராட்டினங்களைத் தாயாரிடம் தந்து நடந்தவைகளைச் சொன்னான். சுமதியும் சுசீலையும் அன்று துடங்கி நூற்க ஆரம்பித்தார்கள். சின்னன் நெசவுத்தொழில் கற்கஆலயத்திற்குச் சென்று வந்தான். சுந்தரனும் கிராமப் பள்ளியை விட்டுத் தேசிய பாடசாலையில் சேர்ந்து தேச பாஷையில் தேர்ச்சி பெற முயன்று வந்தான். மேலும் அக்குடும்பத்தார் யாவருமே காந்தி மகானைத் தங்கள் குருவாய்க் கருதி மெள்ள ஒவ்வொன்றாய் அவர் கொள்கைகளை அனுஷ்டிக்க முயன்று வந்தார்கள்.

சுமதி, சுசீலை இவர்கள் காலையில் வீட்டு வேலைகளை முடித்துச் சாப்பிட்டு ஆனதும், பகல் நேரம் சுமார் 4, 5 மணி தேச காலம் நூல் நூற்று வந்தார்கள். இவர்கள் யாவருமே காலைக் காப்பி, உப்புமா உண்பதை நிறுத்தி, வடித்த நீர்க்கஞ்சி, பழையது இதுகளையே சாப்பிட்டு வந்தார்கள். மாலை யாவரும் ஒன்றாகக் கூடி இருந்து ஒவ்வொருவர் ஒரு வேலை செய்து வருவார்கள். மறு நாளுக்கு வேண்டிய பருத்தியைப் பின்னிப் பட்டை போடுவது, கண்டியிருக்கும் நூலைச் சட்டத்தில் இடுவது இவை போன்றவைகளைச் சுமதி செய்வாள். இராமன் முதலியவர்கள் இராமாயணம், பாரதம் முதலியன வாசிப்பதும், தங்கைக்குப் பாடம் கற்பிப்பதும், சிற்சில சமயங்களில் தாங்களும் நூல் நூற்பதுமாயிருப்பார்கள்.

முதலில் சிலகாலம் இவர்கள் நிலைமை வெகு கஷ்டமாகவே யிருந்தது. சுமதிக்கு நூற்பது வெகு கஷ்டமான வேலை போலவும், பலனற்றது போலவும் தோன்றிற்று. என்னதான் கஷ்டப்பட்டு நூற்றாலும் நூல் பெருமனாக் கோணி நார்போல் வந்தது. ஒரு வாரம் பூராவும் நூற்றும், 1 அணாக் கூலி பெறும்படியான நூல் காணவில்லை. ஆலயத்து அதிகாரியோ "இந்தக் கோணி நூலை நாங்கள் வாங்கி என்ன செய்வோம்! ஜமக்காளம் பின்னக் கூட உதவாது. மெல்லியதாய் நல்ல முறுக்கேற்றப்

பட்டதாய் நூற்று வாருங்கள். பிறகுதான் நாங்கள் வாங்கிக் கொள்ளுவோம்" என்று கூறி விட்டார். சின்னனுக்கும் நெசவுத் தொழிலைக் கற்பது வெகு கஷ்டமாயிருந்தது. மொத்தத்தில் அவர்களுக்கெல்லாம் காலை உப்புமா, காப்பி இல்லாதது வெகு கஷ்டமாயிருந்தது. சுந்தரத்திற்குப் பலமான தலை வலி வந்து விடும். இப்படி இருக்க, போதாத குறைக்கு அக்கிராமத்துப் பிராமணர் சிலர் "இவர்கள் காந்தி கொள்கைப்படி ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் பள்ளி பறையனையும் சமமாய்ப் பாவித்து நடத்துகிறார்கள்; சேணியர்போல் நூற்று நெசவுத் தொழில் புரிகிறார்கள்" என்றும் இட்டி ஏளனம் செய்து பல இடைஞ்சல்கள் விளைவித்தார்கள்.

ஆனால் மொத்தத்தில் அக்கிராமத்து ஜனங்கள் வெகு நல்லவர்கள். சுமதி முதலானோர் முன்போல் தாங்கள் பட்டணத்தார், நாகரிகத் தேர்ச்சி பெற்றோர் என்று கர்வங்கொண்டிராமல் எல்லாருடனும் சமமாய்ப் பணிவாய் நடந்து வந்ததினால் நாளடைவில் அவர்கள்பால் அன்பு பூண்டு வலுவில் அவர்களுக்கு உதவி புரிய வந்தார்கள். அவ்வூர் சேணிய ஸ்திரீகள் சுமதிக்கு நன்றாய் நூற்பதற்கும், பருத்தியைப் பட்டை போடுவதற்குமான நூற்கும் விஷயங்களை யெல்லாம் நன்கு சொல்லிக் கொடுத்தார்கள். இதனால் சுமதியும் சுசீலையும் சீக்கிரத்தில் நூற்பதில் நல்ல தேர்ச்சியுடையவர்கள் ஆனார்கள். அவர்கள் நூற்கும் நூல் நல்ல முறுக்கேறினதாய் அதன் நம்பரும் உயர்ந்து வரவே, அதற்கு ஏற்றதுபோல் கூலிக் கிரயமும் அதிகம் கிடைத்தது. சுமதியும் சுசீலையும் சேர்ந்து இப்போது தினம் 4 அணாக் கூலி பெறுமான நூல் நூற்று வந்தார்கள். இப்பொழுது அவர்கள் நூலுக்கு ஆலயத்து அதிகாரி ஆவலுடன் எதிர் பார்த்திருந்து, அது கிடைத்ததும் அதைப்போல் தனக்கு நூல் கிடைப்பது அரிது என்று புகழ்ந்து கூறலுற்றார். சுமதி இம்மூலமாய்த்தான் பெறும் திரவியங்கொண்டு குடும்ப மேல் செலவுகளைக் குறைவில்லாமல் நடத்தி வந்தாள். ஆகவே குடும்பக் கஷ்டம் சற்று நிவர்த்தியாய் மேலும் மேலும் கடன் வாங்குவதும் நின்றது. இது நடுவில் அக்கிராமத்தார் உதவியைக்கொண்டு இராமனும் சின்னனும் தங்கள்பால் சிறிது திரவியம் சம்பாதிக்கலானார்கள். ஓர் தனிகக் குடியானவன் இராமனை ஒழிந்த நேரங்களில் தன் நிலவருமானத்தின் கணக்கு வழக்குகளைச் சரிவரப் பார்த்து வரும்படி நியமித்து அதற்கென்று ஏதோ திரவியம் கொடுத்து வந்தான். இராமனிடத்தில் கூலி ஆட்களுக்கெல்லாம் வெகுப் பிரியமும் மதிப்பும் ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் அவன் எப்போதும் அவர்களுடன் அன்பாய்ப்பேசி நியாயப்பிரகாரம் நடந்து வந்தான். அதனாலே அவர்களும் அவனையழைத்தவுடன் வந்து மற்றவர்களுக்குவிடக் குறைந்த கூலிக்கே வேலை செய்து வந்தார்கள். இன்னும் அவ்வூர்க் குடியானவர்களில் பெரும்பான்மையோர் தங்களுக்காக வேண்டிய தச்ச வேலைகளைச் சின்னனிடமே கொடுத்து வந்தார்கள். அவனும் விடுமுறை நாட்களில் அவைகளைச்செய்து முடித்துக் கூலி பெற்று வந்தான். இவ்விதம் இவ்விருவரும் சம்பாதித்த திரவியங்கொண்டு மெள்ள மெள்ளக் கடனை அடைத்து வந்தார்கள். மேலும், இராமன் தன் நிலத்தின் ஓர் பாகத்தில் சிறிது பருத்தி பயிரிட இவர்கள் குடும்பத் துணிகளுக்கு வேண்டிய பருத்திகிடைத்தது. அதை சுமதி, சுசீலை இவர்கள் நூற்று நூலாக்கி வைக்கவும், சின்னன்வீட்டில் ஓர் சிறு தறி போட்டு ஒழிந்தநேரங்களில் அவைகளை வீட்டிற்கு வேண்டிய ஆடைகளாய் நெய்து கொடுத்தான்.



மேற் கூறிய வண்ணம் இவர்கள் வருமானம் அதிகரித்து, காப்பி, உப்புமா இல்லாமை, துணிமணிகள் வாங்காமை இவைகளின் செலவும் குறையவே, எளிதில் இவர்கள் கடன் பூராவும் அடைந்து விட்டது. சுசீலை பட்டணத்துப் பெண், கற்றவள் என்று அவள் பேரிலேயே கண்ணாயிருந்த நாராயண சாஸ்திரி அவர்களும் ஏமாந்து போய்விட்டார். கடன் தொல்லை ஒழியவே வருமானத்தில் சிறிது மீதம் சேர்த்து வந்தார்கள். தொகை அதிகம் சேர்ந்ததும், இராமன் கூட சில காணி நிலம் வாங்கினான். இதற்குள் சின்னனும் நெசவுத் தொழிலில் பூரண தேர்ச்சி பெற்று, அந்த ஆலயத்திலேயே தொழிலாளர்களுக்குத் தலைவனாய் இருக்கும் ஸ்தானத்தைப் பெற்றான். ஒன்றிரண்டு வருடத்தில் சுந்தரனும் தன் படிப்பை முடித்துக்கொண்டு, தேசியப் பாடசாலையிலேயே ஓர் உதவி உபாத்தியாயனாய் அமர்ந்தான். காலாந்தரத்தில் இவர்கள் நிலைமை மேலும் மேலும் உயரவே இராமனுக்கு ஓர் தனிக மிராசுதார் தன் பெண்ணைக் கொடுத்து விவாகம் செய்து வைத்தார். சின்னனுக்கு ஆலயத்து அதிகாரி பெண்ணே மனைவியாய் வந்தாள். சுசீலையைத் தேசியபாடசாலைத் தலைமை உபாத்தியாயர் பிள்ளைக்குக் கொடுத்து விவாகம் செய்யப்பட்டது. சுந்தரம் படித்த ஓர் பட்டணத்துப் பெண்ணைப் பார்த்து மணந்து கொண்டான். சுமதி இப்பொழுது கூலி பெறுவதற்காக நூல் நூற்று வாராமல் ஏழை எளியவர்களுக்கு இலவசமாய் ஆடை அளிப்பதற்காக நூற்று வந்தாள். பார்ப்பவரிடமெல்லாம் "விதவைக்கு உற்ற பந்து" என்று தன் இராட்டினத்தைச் சுட்டிக் காட்டுவாள். அக்கிராமத்து ஸ்திரீகளுக்கெல்லாம் சுமதி ஓர் தலைவி போலானாள். நல்ல குணசாலி, கல்வி அனுபோகம் பெற்றவள் என மதித்து யாவரும் அவளிடம் யோசனை கேட்க வருவார்கள். சுமதியும் அவரவர்கட்கு வேண்டியதைச் செய்து வந்தாள். யாதொரு பிகுவும் பண்ணிக் கொள்ளாமல் சிறுமிகளுக்கு வேண்டியமட்டும் தையல் பூனூல் முதலிய வேலைகளைக் கற்றுக் கொடுப்பாள்.

இக்குடும்பத்தார் மேன்மை பெற்ற விதம் கண்டு, அக்கிராமத்தார் எல்லோரும் இவர்கள் நடத்தையைப் பின்பற்றலானார்கள். சுமதி தன்னைச் சுற்றியும் ஐம்பது பேர்களை இராட்டினத்துடன் உட்காரச்செய்து, அவர்களுக்கெல்லாம் நூற்கக் கற்றுக்கொடுத்தாள். இராமன் ஓர் பஞ்சாயத்து சபையும், சுந்தரன் குடியானவர்களுக்காக ஓர் இராப்பள்ளிக்கூடமும் நடத்தி வந்தார்கள்.

இவ்விதம் இவர்களுடைய நலமான செல்வாக்கினால் கிராமத்தார் நிலைமை உயர்ந்தது மல்லாமல், அந்தக் கிராமமே சிறந்த மேம்பாட்டை அடைந்தது. காலப்போக்கில் நூற்கும் நெசவுத் தொழில்களுக்கும் பெயர் போனதாய் நாடெங்கும் அதன் கதராடையின் சீர்த்தியை விளங்கச்செய்வதாய் இருந்தது.

ஓம் ததசத்.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

# எங்கள் சமாஜம்.

(ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்)

நாங்கள் மத்தியான வேளைகளில் எங்கள் வீட்டுப் புருஷர்கள் அவரவர்கள் வேலைக்குச் சென்றதும் ஓர் சிறு சபை கூடுவது வழக்கம். என் வீடு எல்லாருடைய வீடுகளைக்காட்டிலும் சிறிது பெரிதாயும், கட்டிடம் குறைவாயும் இருப்பதால், பெரும்பான்மையும் அச்சபை என்வீட்டிலேயே நடைபெறும். இவ்வுலகின்கண் நடைபெறும் ஒவ்வொரு சீர்திருத்தங்களையும், புதிதாய்ப் பிறப்பிக்கப்படும் கொள்கைகளையும் எங்கள் சிறு சபையில் சீர்தூக்கி ஆராய்ந்து அதன் பலா பலன்களைத் தீர்மானம் செய்வது வழக்கமாதலால் அதே விதம் சென்ற வாரத்தில் ஒரு நாள் எங்கள் வீட்டு ஆடவர்கள் வெளியிற் சென்றதும் சபை கூட்டப்பட்டது. சாதாரணமாய் மத்தியானம் 12 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையில் அதை நடத்துவோம், மத்தியான வேளையில் காலத்தைக் கழிக்க இது ஒரு பொழுது போக்காய் அமைந்திருந்தது. தற்சமயம் வீட்டுப் பெரியவர்கள் தைப் பூசமாடுவதற்குத் திருவிடைமருதூர் போய் இன்னும் திரும்பி வாராதபடியால் எங்கள் சபை வழக்கத்தைவிட அன்று சீக்கிரமே தொடங்கி நடை பெறலாயிற்று.

நான் போஜனமருந்தி, வெற்றிலைத் தட்டுடன் என் வீட்டுக் கூடத்தில் வந்து அமர்ந்தேன். நம்மவர்களுக்குள் கூடத்தான் "டிராயிங் ரூம்" ஆக உபயோகப்படுத்தப்படுவதால் அக்கூடமே எங்கள் வீட்டு "டிராயிங் ரூமாக" அமைக்கப்பட்டது. அது விசாலமாயும், வழவழப்பான செங்கற்களாற் பதிப்பிக்கப்பட்டுமிருந்தது. வெள்ளைச் சுவர்களில் நான்கு புறமும் அழகிய சித்திரப் படங்களும், நம நாட்டின் தற்காலம் கொண்டாடப்படும் தேசபக்தர்களின் உருவங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன. கீழே ஒரு புதுச்சேரிப் பாய் வட்டமாய் விரிக்கப்பட்டிருந்தது. நான் அதில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொள்ள ஆரம்பித்ததும் என் அடுத்தகத்துக்காரி ரங்கம் அப்பொழுதுதான் போஜனமருந்திக் கையில் வெற்றிலைச் சுருள்பிடித்த வண்ணமவர, நான் "என்னம்மா ! வெற்றிலைகூடக் கையில் கொண்டுவர வேண்டுமோ? என்னுடன் இவ்விடமே போட்டுக் கொள்ளக்கூடாதோ? உங்கள் ஜாதிக் கட்டுப்பாட்டை அது கெடுத்து விடுமோ? நான் என்ன உங்களைப்போல் வேதமோதும் ஜாதியிற் பிறக்கவில்லையா?" என்று பரிகாசமாய்க் கேட்க, அவளும் "என்னவோ அம்மா! 'பனைமரத்தின்கீழ் நின்று பாலை அருந்தினாலும் கள் என்று தானே கூறுவார்கள்' என்ற அச்சந்தான். நான் அடிக்கடி வருவதே என்னைச் சேர்ந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை. போன வாரம் எங்கள் சம்பந்தி அம்மாள் இவ்விடம் இரண்டு நாள் இருந்து போவதற்குள் ஊருக்குப்போய், 'சம்பந்தி என்ன, முழு ஸ்மார்த்தச்சியாய் விட்டான்! எப்பொழுதும் அடுத்தகத்துக் கல்யாணி வீட்டில்தான் வாசம். அவர்கள் வீட்டில் சாப்பிடவில்லையே அது ஒன்றுதான் பாக்கி' என்று புகார் சொன்னாளாம். எல்லாம் வெளி வேஷத்திற்குத் தான்" என்றதும் இருவரும் வயிறு குலுங்க நகைத்துத் தாம்பூலம் போட்டுக்கொண்டோம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் என் பாலியம் முதல் விளையாடி வந்தவளான என் தோழி ருக்மணி மிகுந்த முக வாட்டத்துடன் வந்தாள். எங்கள் சபையை அலங்கரிக்கச் சபையின் மற்றைய அங்கத்தினர்களான விசாலாக்ஷி, கமலம் இருவரும் வந்துசேர்ந்தார்கள்.

அவர்கள் சற்று தூரத்தில் வசிப்பதால் வெய்யிலில்வந்தது முகம் சிவந்து, நிறைய முத்துக்கள் போன்ற வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. நான் உடனே மின்சார விசிறியைத் திருப்ப அது அதிவேகமாய் அவர்கள் சிரமத்தைத்தணிப்பதில் ஊக்கமாய்ச்சுற்றியது. நூதனநாகரிகத்தைச் சிலாகித்துக் கொண்டாடுவதில் சிறிது நேரம் செல்ல என் சிநேகிதை ருக்மணிமட்டும் முகமலர்ச்சியுடன் எங்களுடன் சேராமல் இருந்ததைக் கண்டு அவள் விசனத்தின் காரணத்தை வினவ, அவள் "என்ன சொல்வது! எல்லாம் சம்சாரத்தின் தாபந்தான்; திரும்பத் திரும்ப அக்கவலையேதான் நம்மை மீளா சாகரத்தில் அழுத்தி விடுகின்றது. அதைத் தாண்டியவர்கள்தான் நித்தியமான சுகத்தையும் ஆநந்தத்தையும் அடைவார்கள்" என்றனள்.

"ருக்மணி! இவ்வரிய வேதாந்தம் எங்கு கற்றுணர்ந்தாய்? மிகுந்த ஞானியாய்த் தோன்றுகிறாயே! உன் அகத்துக்காரர் நவீன நாகரிகத்தைச் சார்ந்தவராய்க் காணப்படுகிறாரே ஒழிய பழைய காலத்து மனிதராய்த் தோன்றவில்லையே. திடீரென்று உனக்கெங்கிருந்து வந்தது இவ்வளவு வேதாந்தமும்?" என்றோம்.

"அந்தப்புதுநாகரிகத்தின் தொல்லைதான் என் மனதை வேதாந்த முறையில் திருப்புகின்றது. என் மூத்த பெண்ணுக்கு இந்த வருடம் கலியாணம் செய்யவேண்டுமென்று நான் சொல்லிக் கொண்டிருப்பதுதான் உங்களுக்கெல்லாம் தெரியுமே. 'தைமாதம் பிறந்துவிட்டதே, குழந்தைக்கு 11-வயது வருகிற பங்குனியுடன் முடிந்து 12-ம் பிராயம் தொடங்கலாயிற்றே, சும்மாயிருக்கலாமா?' என்று நேற்றிரவு என் அகத்துக்காரரைக் கேட்டேன். அவர் சொல்வதைக் கேட்க என் மூளையே கலங்கிவிடும்போல் இருக்கின்றது" என்றாள்.

நான் "ஆம், அவர் இரண்டுநாட்களுக்கு முன்புகூட ஆசார சீர்திருத்த சபையில் ஓர் பெரிய உபன்யாசம் செய்தாராம். எல்லாரும் நிரம்ப நன்றாய் இருந்ததென்று கூடச் சொல்லிக் கொண்டார்கள். அப்படியிருக்க அதன்படி நடக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாரோ என்னவோ?" என்று மொழிந்தேன்.

"அதெல்லாம் வாயால் சுலபமாய்ப் பேசிவிடலாம். நீயும் என்னைப்போல் சம்சாரியாய் இருந்தால் அந்தக் கஷ்டம் உனக்குத் தெரியும். 'இது ஒரு பெண் தானா, இன்னும் இரண்டு குழந்தைகளுக்குக் கலியாணமாகி க்ஷேமமாய் வாழ்ந்திருக்க வேண்டாமா? இப்படி வாயை மூடிக்கொண்டிருக்கலாமா?' என்று கேட்டேன். 'எல்லாம் எனக்குத் தெரியும்; அவளுக்குப் பதினொன்று கூட ஆகவில்லை. அவள் இன்னும் எவ்வளவோ வாசிக்கவேண்டும். அதற்குள் விவாகம் வேண்டும் என்கிறாயே. அதற்குள் விவாகம் செய்தால் படிப்பிற்கு இடையூறாய் முடிந்து விடும்' என்றார். ஸ்திரீகளின் கல்விக் குறைவினால்தான் நம்முடைய தேசம் இதர நாடுகளைப்போல் முன்னேற்றம் அடையவில்லையாம். நேற்றுப் பத்திரிகையில்கூட யாரோ எழுதியிருக்கிறாராம். ஆசார சீர்திருத்த சபை முனபோல் நடை பெறுவதில்லை என்று. மத பேதம் நீங்கி எல்லோரும் ஒரே பந்தியில் போஜன மருந்தி, ஏற்றத் தாழ்வற்று ஒருவருக்கொருவர் சம்பந்தமும் செய்து கொண்டால் தான் தேச நன்மையும் சுய அரசாட்சியும் உண்டாகுமாம். அவ்விதமேதான் மகாத்மா காந்தியும் கூறுகின்றாராம். ஆகையால் ஆசார சீர்திருத்த சபையில் அங்கத்தினராய் இருந்து தான் அதற்கு மாறாக

நடப்பது கொள்கைக்கு விரோதமும் பேச்சுக்கு இடமுமாகுமென்று என்னகத்துக்காரர் சொல்லுகிறார். மேலும் கல்விப் பயிர்ச்சியில்லாமல் என் போன்ற நாட்டுப்புறத்துப் பெண்களை விவாகம் செய்து கொண்டதினால்தான் தான் எண்ணியபடி நடத்த இடையூறாய் இருக்கிறதாம். நானும் கல்வி பயின்றிருந்தால் தற்காலம் நடைபெறும் சுயராஜ்யப் போரையும் நமது தேசத்தின் தாழ்ந்த நிலைமையையும் உணர்ந்து அதற்குத் தக்கவாறு நடக்க என் மனது இடந்தருமாம். இன்னும் எவ்வளவோ சொல்லுகிறார். என்னை விட என் பெண் வித்தையில் சிறப்படைவது மனதிற்கு அருவருப்பை அளிக்கின்றதாம். அவளும் என்னைப்போல் மூடமாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேனும். பெண்களுக்கு லக்ஷணம் நல்ல கல்வி பயின்று, புருஷர்களுக்கு உற்ற துணையாய் நின்று, நாட்டின க்ஷேமத்திற்காக அவர்கள படும் கஷ்டங்களைப் பகிர்ந்து இதர தேசத்தவர்களுக்கு முன்பு நம்முடைய தேசத்தைச் சிறப்புற்று விளங்கச் செய்யவேண்டுமோம். சில நாட்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் மனையாட்டியார் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களைத் தவிர்த்துச் சாதாரணப் பருத்தி புடை உடுத்து, 'நம் தேசத்தின் முன்னேற்றத்திற்கு நாம் தடையாய் நின்றோம் என்ற வசைச் சொல்லை நம்முடைய செவிகள் கேட்காவண்ணம் நடந்துகொள்ளுங்கள்' என்று உபன்னியாசம் செய்தாராம். அதெல்லாம் நன்றாய் வாசித்திருந்தாலல்லவோ எனக்கு புரியப் போகிறது என்று சொல்லுகிறார். அவருக்கென்ன குடும்ப சிரமமே உரைக்கவில்லை. குழந்தைபோல் பேசுகிறார். என் மாமியாரும் இந்த வருஷம் குழந்தைக்குக் கல்யாணம் செய்யாவிட்டால் தான் திரும்ப இவ்வூர் வருவதில்லை என்று கோபித்துக்கொண்டு பூசத்திற்குப் போனவர் இன்னும் ஒரு வரி கூட க்ஷேம சமாசாரத்திற்கு எழுதவில்லை. இப்படிக்கெல்லாம் இப்புதிய நாகரிகம் தலை தெரியாமல் கூத்தாடச் செய்து நம்முடைய பண்டை கால வழக்கங்களைப் பாழாக்குகின்றது. எனக்குப் பதில் ஒன்றும் சொல்லவே தோன்றவில்லை" என்றாள். அவளுக்கு துக்கம் நெஞ்சடைத்துக் கண்களில் நீர் ததும்பி நின்றது.

"எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நீங்களாச்சு, உங்கள் பெண்ணாச்சு, உங்களைப் பெற்ற தாயாரையும் கொண்ட பெண்டாட்டியையும் துன்புறுத்த உங்கள் நவீன தர்மம் புகட்டுகிறாப்போல் இருக்கின்றது. நானே படிக்கவில்லை என்று வருந்தும் போது என் குழந்தைகளுக்கு வேண்டாம் என்பேனா! படிப்பென்றால் நல்ல வழியில் இருக்கவேண்டும். நம்முடைய மதாசாரங்களைக் குழந்தைகளுக்கு நன்றாய்ப் புகட்டவேண்டும். தேச சரித்திரத்தையும் கூடுமான வரை கற்பிக்கவேண்டும். நல்லொழுக்கம், குடும்ப போஷணைக்கு வேண்டிய சுகாதார நூல்களையும், குடும்ப பாரத்தை வகிக்க வல்ல புத்திவன்மையும், சரிவர நடத்த வேண்டிய முறையையும் கற்பிக்காமல், ஆங்கில பாஷை மட்டும் பயிலுவதால் என்ன வரப்போகின்றது தாயுமானவர் பாட்டு, ஒரு திருக்குறள் ஏதாவது குழந்தைகளுக்குத் தெரியுமோ. வெறும் கூத்தாடித்தனத்தைத் தவிர வேறொன்றும் அவர்கள் கற்கப் போவதில்லை. புராதன வழக்க ஒழுக்கங்களையும், சிக்கனத்தின் பெருமையையும் இழக்க நேர்வதைத் தவிர அடையப்போவதொன்றுமில்லை. கீதையில் கிருஷ்ண பகவான் கலிகாலம் முற்ற ஜாதி வர்ணாசிரமங்கள் நழுவி விடுமென்றும், கற்பின்மை செழித்தோங்கிப் பாபங்கள் விருத்தி அடையுமென்றும் கூறியுள்ளார். கடவுள் வாக்குப் பொய்யாகுமோ. அதற்குத் தான் நீங்கள் எல்லாரும் இப்படிக் கிளம்பி யிருக்கிறீர்கள்" என்று கூறிவிட்



டுச் சமையலறைக்குள் போய்விட்டேன். நான் சொன்னது மனதில் பட்டதோ என்னவோ. பதில் ஒன்றும் கூறாமல் யோசனையில் ஆழ்ந்திருந்தார். இரண்டு நாட்கள் பொறுத்து மறுபடியும் கலியாணத்தைக் குறித்துப் பேசலாம் என்று நினைக்கிறேன். இது தான் என் கவலைக்குக் காரணம்" என்று கூறி முடித்தாள்.

உடனே என் தோழி ரங்கம், "நானாக இருந்தால் இன்னும் நன்றாய்ப் பதிலுரைத்திருப்பேன். சில மாதங்களுக்கு முன்பு ஒரு பத்திரிகையில் அமெரிக்கா ஆடவர்கள் தங்கள் மனையாட்டிகள் வீட்டு வேலைகளைக் கவனிக்காமலும், குழந்தைகளின் பாதுகாப்பைத் திரஸ்கரித்தும், கணவர்களையும் கொஞ்சமேனும் மதியாமலும் நடந்து வரும் கஷ்டங்களைப் பொறுக்க முடியாமல் ஓர் நியாயாதிபதிக்குத் தங்கள் குறைகளை விசாரித்து அவர்களை அடக்க ஓர் புதிய சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்று முறையிட்டு மனுக்கொடுத்திருப்பதாய்ப் பிரசுரம் செய்யப்பட்டிருந்ததை இவர்கள் கவனிக்கவில்லைபோலும். அப்படியே நமது தேசமும் சீரழிய வேண்டுமென்று இவர்கள் விருப்பம் என்று தோன்றுகிறது. இவர்களைப்போல் நாமும் பி.ஏ, எம்.ஏ. பட்டங்கள் பெற்றுப் பலவாறான உத்தியோகங்களில் அமர்ந்து விட்டால் இவர்கள் பிண்டம் பெருங்காயம் தான். ஏதோ பெரியவர்கள் சென்ற வழியிலேயே செல்லவேண்டு மென்றும், அது தான் ஸ்திரீகளின் பிராசீன தர்மமென்றும் இவர்கள் சொல்லுக்கடங்கிக் குடித்தன முறைமையை வழுவாது செலுத்திவருவது இவர்கள் உணர்ந்தார்கள் இல்லை. ஓர் ஆங்கிலேய நூலாசிரியர் இந்தியா இதர தேசங்களைப் போல் ஒரு காலத்திற் செழித்து மற்றொரு காலத்தில் நிலை குலையாமல் ஒருநிலையாய்நிற்பது இந்தியர்களின் சீலமும் அவர்கள் மாறாது கடைபிடித்திருக்கும் ஆர்ய தர்மத்தின் மகிமையுமே என்று வியந்து கூறியுள்ளார். வயதாய் விவாகம்செய்துகொள்வதில் என்னசுகம் ஏற்படப்போகின்றது? ஸ்திரீ தர்மத்தையும் வழுவாக் கற்பின் மகிமையையும் நம்முன்னோர்களும், புராணங்களும் முறையிட்டிருப்பதின் பயனென்ன? நமது கற்பை ஆசார சீர்திருத்தத்திற்கு இரையாக்கி நம்முடைய அச்சிறந்த ஆபரணத்தைப் பிறர் நகைக்கும் வண்ணம் இழந்து விடுவோம் என்பதைத் தவிர வேறொரு நலமும் நாம் அடையப் போவதில்லை. எப்பொழுதும் ஸ்திரீகளின் சரீரமானது பாதுகாப்பில் இருக்கவேண்டுமென்பது நம் முன்னோர்களின் கொள்கை. பால்யத்தில் பிதாவும், யௌவனத்தில் கணவனும், முதிர்ந்த வயதில் புதல்வனும் காக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பிறருடைய ஆசாரங்களைக் கைக்கொள்வதில் நமக்கு இழிவைத் தவிர பெருமை உண்டாகப் போவதில்லை" என்று கூறிமுடித்தாள்.

"பேஷ், நன்றாய் உரைத்தாய். ஏது, பெரிய உபன்னியாசம் செய்வாய் போல் தோன்றுகிறதே! இதுகாறும் உனக்கு இவ்வளவு தெரியுமென்று எங்களுக்குப் புலப்படவில்லை" என்றுபுகழ்ந்து, எனக்கும் அப்படியேதான் தோன்றுவதாயும் இப்பொழுது நடைபெறும் வழியில் நம் சிறுமிகளுக்குக் கல்வி புகட்டுவது நம்தேசத்திற்கும் குடும்பத்திற்கும் செழிமையை அதிகரிக்கச் செய்யாதென்றும், நம்முடைய ஆர்யதர்மத்தையும் ஆசாரங்களையுமே பெரும்பான்மையும் கற்பிக்க வேண்டுமென்றும் அவர்கள் இருவர் சொன்னதையும் ஆமோதிக்க, அச்சிறு சபையில் ஸ்திரீகளின் கல்வி முறையைப்பற்றி இவ்விதம் முடிவு செய்யப்பட்டது.

என் சிநேகிதை விசாலாக்ஷி "இன்னொரு விஷயம் கேட்டீர்களோ! இந்தவருஷம் ஸ்திரீ

களுக்கு வோட்டுக்கொடுக்கும் உரிமைகள் அளித்ததின் பயனாய் அவர்கள் எல்லாரும் புருஷர்களுக்கே வோட்டளித்துவிட்டார்களாம். பார்லிமெண்டு சபையில் சென்ற வருஷத்தில் அங்கத்தினராயிருந்த அதே சீமாட்டி ஒருத்திதான் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டாளாம். அவ்வுரிமைகளுக்காக இவர்கள் எவ்வளவோ காலமாய் இங்கிலாந்தில் பாடுபட்டும் கிடைத்தவுடன் அதற்குரியவர்கள் ஆடவர்களே என்று அவர்களுக்குத் தங்கள் வோட்டுக்களை அளித்துவிட்டார்கள் போலும்" என்றனன்.

"இல்லாவிடில் ஸ்திரீகள் புருஷர்களாய் விளங்க முடியுமோ, நமக்கு உரித்தான மிருதுத் தன்மையையும் புருஷர்கள் அன்பிற்குப் பாத்திரமாய் இருந்துவருவதையும் இழந்து தம் நிலைமையைக்கண்டு பச்சாதாபங் கொள்வார் இல்லாமல் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிவிடுவோம். வெகு காலமாய் இருவகுப்பினருக்கும் ஏற்பட்டிருக்கும் தன்மைகளை மாற்றுவது மதியீனமே" என்றுரைத்து, என்தோழி ருக்மணியையும் "உன் புருஷர் விளையாட்டாகக் கூறி இருப்பாரே ஒழிய, இந்த வருஷம் ஆனி மாதத்திற்குள் நிச்சயமாய் உன் பெண்ணுக்குக் கல்யாணம் ஆகிவிடும்" என்று சமாதானம் செய்தேன்.

அவளும் "ஏதோ, நான் கூறுவதுபோல் நடந்தேறினால் கற்பகாம்பாவுக்கு ஓர் புடவை வாங்கிச் சாத்துகிறேன். அவள்தான் அவர் புத்தியைத் திருப்பி என்னைக் காக்கவேண்டும்" என்று மனதைத் தேற்றிக்கொண்டாள். இதற்குள் கடியாரத்தில் டிங், டிங் என்று மணி நான்கு அடிக்க, எங்கள் சபை கலையலாயிற்று. நானும் நடந்த சம்பாஷணையைச் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, சூரியன் தன் ரதத்தை மேற்குப் புறமாய்த் திருப்பித் தன்செங் கிரணங்களை ஆகாய முழுவதும் பரப்ப, அவன் மேற்குப்புறத்தில்மறையுமுன், நித்திய மங்கள ஸ்வரூபியான ஜகன்மாதாவைத் தரிசித்து வரவேண்டுமென்று கோயிலுக்குச் சென்றேன்.

# நூர்ஜஹான் அல்லது பாரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

(296-வது பக்கத் தொடர்ச்சி)

## பத்தொன்பதாவது அத்தியாயம்.

வழக்கப்படி அக்பரது தர்ம சபையில் நியாய சம்பந்தமாய் அத்தியந்த மகத்தான விஷயத்தைக் குறித்து ஓர் நாளிரவு வாதமேற்பட்டது. சபைக்கு ஆதாரமாய் விளங்கி வந்த பைஜி இரவு முழுதும் அங்கே இருப்பானென ஒற்றர்களாலறிந்த அவனது மனைவி இளவரசனைத் தன் வீட்டிற்கு வரும்படி ஏற்பாடு செய்திருந்தனள். எப்படிப்பட்ட உத்தம ராஜ்யத்திலும் சில அயோக்கியர்களும் அநியாயஞ் செய்பவர்களு மிருப்பார்கள். அவ்வண்ணமே அக்பரது ராஜ்யத்திலும் அபவாதத்திற்கிடமில்லாதிருக்கவில்லை. இளவரசன் தன் கையின் கீழிருப்பதால் ரஜியா ராஜ்ய லக்ஷ்மியாக வேண்டுமென்ற ஆசை கொண்டனள். இவள் அக்பர் பாதுஷாவையே கைதியாக்கவும், அவரைக் கொல்லவும சதியாலோசனை செய்து வந்தனள். இக்கெட்ட காரியத்தைச் சாதிக்கப்



பல துஷ்டர்களைத் தன் பக்ஷஞ் சேர்த்திருந்தனன். அக்பரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புதிய மதத்திற்கு விரோதமாயிருக்கும் மகமதியர்களையும் மற்றுஞ் சில தருணர்களையும் தன் வலையிற் சிக்க வைத்திருந்தனள்.

இரவு சுமார் மணி பன்னிரண்டிருக்கும். வீட்டிலுள்ள வேலையாட்கள் யாவரும் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருக்குஞ் சமயம் சந்தடி யாதுமின்றி எங்கும் நிச்சப்தம் நிறைந்திருந்தது. ரஜியா தன் அந்தரங்க தாசியை யழைத்து, அரண்மனையின் பின்புறக் கதவைத் திறந்து வைக்கும்படி ஆக்ஞாபிக்கவே, அவ்வண்ணமே அவளுஞ்செய்து தன் யஜமானியிடம் வந்து சேர்ந்தனள். கொஞ்ச நேரத்திற்குள் கருப்பு வஸ்திரத்தால் தன்னை முழுதும் மறைத்திருந்த ஒரு தருண புருஷன் தனக்கு முன் நிற்கக் கண்டனள். அத்தருணனும் தான் போர்த்திருந்த கருப்பு வஸ்திரத்தை யகற்றி நிதமுங் காணப்படும் ராஜ வேஷத்துடன் தோன்றவே, ரஜியா அவனை இன்னானென அறிந்து தைரியமடைந்தனள். அவன் வேறெந்த அன்னிய புருஷனுமல்லாது தன் பிரியகரன் சலீமாயிருக்கக் காணவே, மிக்க அவசரமாகத் தன் ஆசனத்தை விட்டெழுந்து அவனிடஞ் சென்று அவனது கரத்தைப் பற்றி அழைத்து வந்து, ஆசனத்திலமரச் செய்து, தானும் அவனருகி லுட்கார்ந்தாள். இருவரது மனமும் படபடவென அடித்துக்கொண்டிருந்தது. இருவரது வாய்களும் திறவாது மிக்க நேரம் மூடபட்டிருந்தன. கடைசியாக ரஜியா தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, "பிரியா! தாம் எதைக் குறித்து யோசிக்கின்றீர்? இவ்வண்ணம் நாம் எவ்வளவு நாட்கள்தான் பீதிகொண்டு வாழ்வது? சுதந்திரம் என்பது நமமிடங் கிஞ்சித்தேனுமில்லையே!" என்றனள்.

சலீம்:—"கண்மணி! அல்லும் பகலும் நானுமிதைக் குறித்தே யோசித்து வருகின்றேன். இப்பொழுதுதான் கொஞ்சங்கொஞ்சமாய்க் காரியங் கை கூடி வருகின்றது. தைரியத்தைக் கை விடாதே!"

இதைக் கேட்டவுடன் ஆனந்தத்தாற் பொங்கி யெழுந்த ரஜியா அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டு "நானுமந்த அப்துல் காதரை நமது பக்கஞ் சேர்த்துள்ளேன். மகமதிய மதத்தை நசுக்க உத்தேசித்து இந்துக்கள் அக்பர் பாதுஷாவை இவ்வாறு தூண்டி வருகின்றார்கள் என்ற சங்கதி மகமதிய சர்தார்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இப்பொழுது புலப்படவே அவர்களும் பாதுஷாவைத் துவேஷிக்கத் தலைப்பட்டு விட்டார்கள்" என்றனன்.

சலீம்:—"சபாஷ்! ரஜியா, சபாஷ்! உன் யுக்தியே யுக்தி! மகமதிய சர்தார்களையும் சிற்றரசர்களையும் நமது பக்கஞ் சேர்த்துக் கொண்டாலொழிய நமது காரியங் கைகூடுவது கடினமே. இவர்கள் மனதைப் பாதுஷாவிற்கு விரோதமாய் மாற்ற நீ ஏற்பாடு செய்து வருவதால், உனது யுக்தியே சரி யென்பதில் தடையுமுளதோ? அப்துல் காதரை அடிக்கடி நீ ஸ்துதி செய்துகொண்டே வருவாயாகில் எப்படிப்பட்ட காரியத்தையும் செய்ய அவன் பின்வாங்கான்."

ரஜியா:—"அக்காரியமெல்லாம் என்னைச் சேர்ந்தது. ஆனால் நான் என் சாகசத்தைப் பூர்த்திக்குக் கொண்டு வருவதற்குமுன் தங்களிடம் என் மனதை வெளியிட்டுப் பேச வேண்டியிருக்கிறது. இச்சங்கதி வெளியில் வாராமல் மாத்திரம் நீர் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்."

சலீம்:—(ஆச்சரியமுற்று) "ரஜியா! நீ யென்ன என்னை விளையாடி வரும் பையனெனவோ

கருதியுள்ளாய்? நமது காரியத்தைக் குறித்து ஏதாயினும் வெளி வந்துவிடில் நான் என் முகத்தைத் தைரியத்துடன் வெளிக் காட்ட முடியாதென அறிந்துள்ளேன். ஆனால் நீ என்னைக் குறித்து சங்கை கொள்ளக் காரணம் யாது?"

ரஜியா:—(கொஞ்சம் கோபித்த முகத்துடன்) "அதைப் பற்றி உங்கள் மனதையல்லவோ விசாரிக்க வேண்டும்? இன்று நான் தங்களிடம் கொண்டிருந்த விசுவாசமெல்லாம் பறந்து போய்விட்டது."

சலீம்:—"காரணமோ?"

ரஜியா:—"ஸ்திரமில்லாத உமது மனமே!"

சலீம்:—"எக்காரியத்தைக் குறித்து நீ யிவ்வாறு பகருகின்றாய்?"

ரஜியா:—"பல—."

தான் மேஹராது வலையிற் சிக்கியுள்ள சங்கதி இவளது காதுகளுக்கெட்டி யிருக்க வேண்டுமென சலீம் எளிதில் அறிந்தனன். ஆயினும் ஒன்று மறியாதவன்போல் அபிநயித்து "இவ்வண்ணம் மறைத்துரைப்பதிற் பலன் யாது? சங்கதியை வெளியிட்டுச் சொல்" என்றனன்.

ரஜியா:—"என் வாயிலிருந்தே வரச் செய்கின்றீரல்லவா? உமது மனதிற்கே தெரியும். உமக்கிச்சையிருக்கும் பட்சத்தில் நானதற்கு துணையுறவாய் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய மாட்டேனா? நீங்கள் என்ன செய்தபோதிலும ஜனங்களுக்குக் கண்களில்லையா?"

சலீம்:—(கோபங் கொண்டவன்போற் பாசாங்கு செய்து) "எனக்கு உன் வார்த்தைகளொன்றும் புலப்படவில்லை. வெளிப்படச் சொல்."

சலீமின் வார்த்தையைக்கேட்டு ரஜியா மிக்க கோபங் கொண்டவளாய்த் திடீரென எழுந்திருந்து இடுப்பில் ஒரு கையை வைத்துக்கொண்டு "அன்று யமுனா தீரத்தில் தாங்கள் ஒரு தருணியுடன் தனித்திருந்ததை நானறியாதவளல்ல. நீர் உமது மனதை வேறொருத்தி பாற் செலுத்தியுள்ளீர். நானோ உம்மை நம்பி மோசம் போனேன்" எனப் பகர்ந்த வண்ணம் தலையிலடித்துக்கொண்டு அழத்தொடங்கினாள். சலீம் அவளது கபடத்தினுண்மையை யறியாதவனாய் மனமிரங்கி அவளது கண்களைத் துடைத்து அவளைச் சமாதானப்படுத்தினான். அவளும் தன்னழுகையை நிறுத்தி மௌனமாயிருந்தனள். இளவரசன் அவளைத் தழுவி "பிராணேச்வரி, ரஜியா! நீயென்ன இச்சமயத்தில் இப்படிச் செய்கின்றாய்? உன்னிடமே மிக்கப் பிரீதி வைத்துள்ளேனென்பதற்கறிகுறியாய் நான் சிம்மாதனமேறிச் சக்ரவர்த்தியானவுடன் உன்னையே என் முக்கிய பேகமாய்ச் செய்வதாக முன்னாலேயே வாக்களிக்கவில்லையா? நீ இதற்குள்ளோ அதை மறந்துவிட்டாய்?" என்றனன்.

'முக்கிய பேகம்' என்ற வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் ரஜியா முகம் ஜ்வலிக்கப் புன்னகை புரிந்து "போதும் போதும், உமது வேடிக்கை யெல்லாம்! நான் தங்களை தூஷிப்பதாக நினைக்கக் கூடாது. மன்றாடிக் கேட்டுக் கொள்ளுவது யாதெனில்—" என்று சொல்லி முடிப்பதற்குள் சலீம், "உனக்குச் சேவை புரிய இந்த தாசன் தயாராயிருக்கின்றான். சொல், நான் என்ன செய்யவேண்டும்? ஜ்வலிக்கும் அகண்ட அக்கினியிலுங் குதிக்க இந்த சலீம் தயாராயிருக்கின்றான்" என்றனன்.

ரஜியா:—"உமது சுகத்தைக் கருதி, நாம் எக்காரியத்தைச் செய்ய நிச்சயித்துள்ளோமோ அக்காரியம் கைகூட வேண்டுமென தமக்கு இச்சையிருக்குமேயாயின்



இப்பொழுது தாம் நேசித்து வரும் அத்தருணியை உமது மனத்தினின்றும் விட்டு விலக்கவேண்டும். உமது சுபாவமோ சொல்லவேண்டியதில்லை. இக்காலத்துப் பெண்களை நீர் நம்பவே கூடாது. உமது மனதிலுள்ளவற்றைக் கிரகித்துக்கொண்டு, உமது கழுத்திற்கும் கத்தியைக் கொணர அவர்கள் பின் வாங்கார்கள். பிறகு நமது அந்தரங்கங்களெல்லாம் வெளி வந்து நாம் வனவாசத்தையடைய வேண்டி வரும். தாம் எத்தருணியின் நிறத்தைக் கண்டு மயங்கியிருக்கின்றீரோ அவள் யாருடைய புதல்வி? அக்பாது பூர்ண விசுவாசத்திற்குப் பாத்திரனாயுள்ள அயாஸ் பெக்கின் புதல்வியன்றோ? பாதுஷாவின் தர்பாரில் தன் தந்தையின் பதவி அதிகரிக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் தம்மை பொத்த அரசகுமாரர்களைத் தன் வலையிற் சிக்க வைக்கக் கருதியுள்ளாள். ஆகையால் கிருபை கூர்ந்து அவளுடைய சகவாசத்தை விட்டொழிக்க வேண்டும்."

சலீம்:—"ரஜியா! சரி. நீ மிக்க புத்தி சாதுரியமுள்ளவளே! நமது எண்ணத்தை சித்திக்குக் கொணர வேறு யாது செய்ய வேண்டியிருக்கிறது?"

ரஜியா:—"இஃதென்ன சாதாரணமானதா? நீங்கள் முதலில் இவ்விஷயத்தைக் குறித்து ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களையும் உமது கையில் வைத்துக்கொள்ள வேண்டும்."

சலீம்:—"இக்காரியம் நடந்து கொண்டேயிருக்கிறது. திரவிய லோபிகளான உத்தியோகஸ்தர்களை என்னைக் கண்டவுடன் வாலையாட்டும்படி செய்துள்ளேன். ஆனால் பாதுஷாவின் பிரீதிக்குப் பாத்திரமாயிருக்கும் அபுல் பாசல், பைஜி என்ற இருவரும் நமது வசப்படுவது கடினமே! வழியிலிருக்கும் இந்த இரண்டு முட்களையும் விலக்கினாலொழிய நமக்குக் கஷ்டமே. இவர்களைத் தொலைத்து விட்டால் பின்னாற் சுலபந்தான்."

ரஜியா:—"நானும் இவர்களைக் குறித்தே பீதியடைகின்றேன். இவர்களாலன்றோ என் காலிலும் விலங்கு மாட்டியிருக்கின்றது."

சலீம்:—"ஆனால் இவ்விரு சகோதரர்களையுந் தொலைக்க ஏதாயினுமொரு உபாயமுண்டோ?"

ரஜியா:—"நான் இரவும் பகலும் இந்த விசாரத்துடனேயே காலத்தைக் கழித்து வருகின்றேன். நமது முக்கிய எண்ணங் கைகூடிவிட்டால் அதற்கெவ்வளவு நேரம்? நாளை செய்ய வேண்டியதை இன்றே முடித்து விடலாம்."

இவ்வார்த்தைகள் அவளது வாயினின்றும் வெளி வந்த மாத்திரத்தில், பின்புறக் கதவு திறக்கப்படும் சப்தம ரஜியாவின் காதில் விழ அவள் திடுக்கிட்டு நின்றாள். "தாங்கள் வரும்பொழுது கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்தீர்களா?" என்று சலீமை விசாரிக்க, அவன் "கதவைத் தாளிட்டுதான் வந்தேனென நினைக்கின்றேன். நிச்சயமாய்ச் சொல்ல முடியாது" எனப் பதிலளிக்கவே, ரஜியா அதிகமாய்ப் பீதி கொண்டனள். கூக்குரலிட்டுத் தன் தாசியை யழைத்தனள். ஆனால் அவளது தாசியோ அருகிலோர் அறையில குறட்டை விட்டு நித்திரை செய்து கொண்டிருந்ததால், தன் யஜமானியின் கூக்குரல் அவளது காதில் ஏன் விழப்போகின்றது? அன்னியாது வீடுகளிற் புகுந்து, அடிக்கடி பரஸ்திரீகளைக் கொள்ளை கொண்டு போகும் சண்டாளனான சலீமும் பீதி கொண்டானாயினும் அதை வெளிக் காட்டாது ரஜியாவை நோக்கி

'கண்ணே! ஏனிவ்வாறு கலங்குகின்றாய்? அடீ! இந்த சலீம் உன் சந்நிதானத்திலிருக்கும்பொழுது உனது ரோமத்திற்குந் தீங்கிழைக்க யாருக்கும் தைரியமுண்டாகாது. காற்றால் கதவு அடித்துக் கொள்ளச் சப்தமுண்டாயிருக்கும். பயமேன்?" என்றனன். இவ்விதமான தைரிய மொழிகளைக் கேட்ட ரஜியா தன் பீதியை யகற்றி, மறுபடியும் அவனருகிலுட்கார்ந்தனள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு சலீம் அவளது முகத்தையுற்று நோக்கி, "இப்பொழுது இந்த இரு சகோதரர்களையுந் தொலைக்க யாது செய்வதெனச் சொல்" என்றனன். இப்பயங்கரக் கேள்வியைக் கேட்டு ரஜியா கண்கள் சிவக்கத் தன்னாசனத்தை விட்டெழுந்து ஆவேசங் கொண்டவளாய், "இஃதென்ன, இதைக் குறித்து இன்னும் யோசித்துட்கார்ந்திருக்கின்றீர்? ஏராளமான திரவியங்களைக் கொடுத்து ஆட்களை அமர்த்தி, இந்த இரு சகோதரர்களையும் மிக்க சுலபமாய்க் கொலைசெய்து விடலாம். பணத்தைக் கொண்டு என்னதான் செய்ய முடியாது? பாதுஷாவின் தர்ம சபையை விடுத்து இரவு வெளிக்கிளம்பும்பொழுது இக்காரியத்தை எளிதிற் சாதிக்கலாம். கால தாமதஞ் செய்தால் சத்துருவின் பக்கம் பலப்பட்டு வருமென்பதை நீர் மறக்கலாகாது" என்றனள்.

இத்துஷ்ட வார்த்தைகள் ரஜியாவின் வாயினின்றும் வெளி வந்த மாத்திரத்தில், தடித்துயர்ந்திருந்த ஓர்புருஷன் புலியைப்போல் திடீரென அவ்வறைக்குட் பாய்ந்து, அவர்களுக்கு முன் நின்று, மிக்க உரத்த குரலில் "அடீ ராக்ஷஸி ரஜியா! அடே சண்டாளா சலீம்! உங்கள் சதியாலோசனையையும் யுக்திகளையும் கேட்டு நான் சமீபமாகவே நின்றிருந்தேன். அடே! உங்கள் இச்சை பூர்த்தியாகு முன் இதோ உங்களைத் துண்டு துண்டாக வெட்டி நாய் நரிகளுக்கெறிகின்றேன்" எனப் பகர்ந்து இடுப்பில் தொங்க விட்டிருந்த தன் வாளை உறையினின்றும் சரேலென உருவி சலீமின் சமீபமாக நின்றிருந்த ரஜியாவைக் கீழே தள்ளி அவளது கழுத்தைக் காலால் மிதித்துக் கொண்டே சலீமின் கழுத்தை இடது கரத்தாற் பிடித்துத் தன் வாளை வீச ஆரம்பித்தனன். அச்சமயம் ஒரே வீச்சில் அவ்விருவரையும் அவர்களது பாபத்திற்குப் பிராயச்சித்தமாக வெட்டி வீழ்த்தியிருப்பான். குரோதாக்கினியின் ஜ்வாலை பூரணமாயிருந்தபோதிலும், மந்திரிப் பதவியின் விவேகம் அவனிடந் தங்கி யிருந்ததால், பின்னாலேயே கொஞ்சங் கொஞ்சமாய் நகர்ந்தான். இவன் ரஜியாவின் கணவனான பைஜி யென நமது வாசகர்களுக்குப் பகர வேண்டியது அனாவசியமே. தனது அரண்மனையின் பின் புறக் கதவு வழியாக உள் நுழைந்து, மறைந்திருந்து, நன்றி கெட்ட தன் மனைவியும் காம வெறிகொண்ட இளவரசனும் பேசி வந்த வார்த்தைகளைக் கேட்டு வந்தான். பிறகு தன்னையும் தன் சகோதரனையும் கொலைபுரியச் சூழ்ச்சி செய்த மாத்திரத்தில், அடங்காக் கோபங் கொண்டவனாய் அவர்கள் மேற் பாய்ந்தனன். இளவரசன் தலையினின்று பாதம் வரை வியர்வையால் நனைந்து நின்றான். ரஜியா கர்ப்பங் கலங்கிப் பிரேதத்தைப் போல் ஒரு புறத்தில் மூர்ச்சித்துக் கிடந்தனள். ஒரு கரத்தால் அவனது கழுத்தை இறுகப் பிடித்து மற்றொரு கரத்தில் உருவிய வாளையேந்தி நின்ற பைஜியின் பயங்கர ரூபத்தைக் காண்பவருக்குப் புண்ணியத்திற்கு முன் பாபம் திரணமே யெனத் தோற்றும். டில்லிக்கதிபதியின் ஜேஷ்ட குமாரன்—இந்துஸ்தானத்தின் பாதுஷாவாக வேண்டியவன்—மற்றும் இவனது பட்ட ராணியாக இச்சை கொண்டிருக்கும் ரஜியா பேகம்—இவர்களுக்கோ இத்துர்த்திசை! நீதி தேவதையின் முன் இராஜ்ய லக்ஷ்மி எம்மாத்திரம்?



இலங்காபுரி மன்னனாகிய இராவணன் நீதி தேவதையே உருவாய் வந்த ஜானகியினிடம் அபிலாஷை கொண்டதாற் சம்பலாயினன். இவர்களுக்கு முன் இச்சலீமும் ரஜியாபேகமும் எம்மாத்திரம்? விவேகம், அவிவேகம் இவ்விரண்டிற்கும் மத்தியிலகப்பட்டு விழிக்கும் பைஜி பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டு, "அடே நிர்லஜ்ஜையே! யாதடா செய்வேன்? பரம பூஜ்ஜிய பாதுஷாவின் உதரத்தில் சண்டாளனாகிய நீ உதித்திராவிடில் இந்த க்ஷணமே இவ்வாளால் உன்னைத் துண்டு துண்டாக வெட்டி, வயிறு நிரம்பும் வரைக்கும் நாய் நரிகளுக்கு உணவாக அளித்திருப்பேன். என்ன புண்ணியத்தைச் செய்திருந்தனையோ எனது வாளை உறையிலிடவேண்டி வந்தது. பாதுஷாவின் களங்கமற்ற கீர்த்தியை யழிக்க வந்த கோடரிக் காம்பே! நீ யேனடா ஜனித்தாய்? நீ உனது கர்மத்தால் பிரேதத்தை ஒத்திருக்கின்றாய். பிரேதத்தின்மேல் வாளை வீசுவதில் என்ன புருஷார்த்தம்! உன் மேல் என் அஸ்திரத்தைப் பிரயோகிக்க எனது கை கிளம்பவில்லை. செல்! இதை விடுத்துச் செல்! இன்று நடந்த சங்கதியை நினைத்து, இனி மேலாவது உன் அக்கிரமங்களை யொழித்து, சன்மார்க்கத்திலிருந்து, பாதுஷாவின் கீர்த்தியை ஜ்வலிக்கச் செய். இதை விடுத்துச் செல்" எனப் பகர்ந்த வண்ணம் வாளை உறைக்குள்ளிட்டுத் தன் வேலையாட்களைக் கூவியழைத்தான். உடனே உருவிய வாட்களுடன் நாலைந்து தடித்துயர்ந்த பட்டாணியர்கள் தலை நிலத்திற் படும்படி சலாம்செய்து அவனுக்கு முன் நின்றார்கள்.

ஒரு புறம் இந்துஸ்தானத்தின் சக்கரவர்த்தியாக வேண்டியவன் சிறைபட்டவன்போல் தன் கர்ம பலத்தால் தலையைத் தொங்கவிட்டுத் தரையை நோக்கி நின்றிருந்தான். சமீபத்தில் ஸ்திரீகளின் முக்கிய பூஷணமாகிய சௌந்தரியத்தை யிழந்த ரஜியா லஜ்ஜைகொண்டு பிரேதக்களையுடன் நின்றிருந்தனள். இச்சமயத்தில் இவ்விருவர்களையும் கண்ணுற்ற பைஜி, பாபமே உருவாகி வந்த இரு கற்சிலைகளோவெனக் கருதிக் கோபங்கொண்டவனாய், ஆவேசத்துடன் சலீமை நோக்கி, "சண்டாளா! உடனே இதை விடுத்துச் செல். அகோர பாதகத்தைச் செய்துள்ள உன் முகத்தை ஓர் க்ஷணமேனும் நான் பார்க்கச் சகியேன். உன்னைக் காண என் மனங் கொதித்து வருகின்றது. ஓடிப்போ இதை விடுத்து! போ சீக்கிரம்!" என்று சொல்லிக்கொண்டே அவனது கழுத்தைப் பிடித்து அவ்வறைக்கு வெளியில் தள்ளினான். சலீம் அச்சமயம் கீழே விழுந்தருவாயிலிருந்த போதிலும், சமாளித்துக்கொண்டு சில அடிகள் சென்று மெதுவாக "இந்த நீசனைக் கொல்ல அதிக நேரமாகாது. ஆயினுமிருக்கட்டும். மனமே! அதைரியப் படாதே. இன்னுஞ் சில நாட்களில் பைஜியை இந்த உலகத்தை விடுத்துத் தொலைத்து விடுகின்றேன்" எனப் பிரமாதமாகத் தனது சொற்கள் தன் காதுகளுக்குங் கேட்காத வண்ணம் மெதுவாக பைஜியைத் தூஷித்துக் கொண்டே சென்றனன்.

இளவரசன் தன் கண்களை விட்டு மறைந்த பின் பைஜி ரஜியாவை நோக்கி, "அடீ சண்டாளி! என்னையும் என் சகோதரனையுங் கொலை செய்து பெரிய பேகமாகப்போகின்றாயல்லவா? ஆயினும் அல்லாவிற்கல்லவோ அக்கவலை? எங்களை பலிகொடுத்து இளவரசனை யடைவதற்கு முன் உனக்கே காலஞ் சமீபித்துவிட்டது. யாரடா அங்கே? கொண்ட கணவனையே கொன்று பெரிய பதவியை யடைய இச்சிக்கும் இத்துஷ்ட சண்டாள ராக்ஷஸியை இருட்டறையில் தள்ளி வாருங்கள்" என்றனன்.

இவ்வாறு பைஜியின் ஆக்ஞை பிறக்கவே, தடித்துயர்ந்த வாட்களைக் கரத்திலேந்தி அவளி

ருந்த நான்கு பட்டாணியர்களும் ரஜியாவைச் சூழ்ந்து நின்று அவளை இருட்டறைக்கு அழைத்துச் சென்றனர். உடனே ரஜியாவின் உரத்த அழுகைக் குரல் நிச்சப்தமான அவ்வேளையில் எங்கும் வியாபித்தது. ஆனால் யைஜி அதைக் கொஞ்சமேனும் கவனியாது தன்னறையை நோக்கி நடந்தான்.

கொண்ட கணவனையும் அவனது சகோதரனையுங் கொன்று இளவரசனது பட்டாணியாக வேண்டுமென அபிலாஷை கொண்ட ரஜியா—ஆயிரக் கணக்கான தாசிகளால் பேகம், பேகம் எனவழைக்கப்பட்டு வந்த ரஜியா—வித்தை, சன்மார்க்கம், குணம் இவைகளுருவாயும் அக்பாது பிராணனுக்குப் பிராணனாயும் விளங்கி வந்த இரண்டு சத்புருஷர்களது இரத்தத்தைச் சிந்த உத்தேசித்த ரஜியா—சூரியனது கிரணம் கிஞ்சித்தேனுமில்லாத பயங்கரமான இருட்டறையில் சர்வ சுகபோகங்களையும் மண்ணிற் கவிழ்த்துத் தன் கர்மத்தை நினைந்து நினைந்து அழுது கொண்டிருந்தனள்.

(தொடரும்.)

# நாகரிகமா, சுதந்திரமா?

(ஸ்ரீமான் ஆர். நாகராஜன்)

தற்காலம் நம் இந்திய சகோதரிகள் அனுஷ்டித்து வருவதைக் கண்ணுற்ற எவரும் சங்கை கொள்வாரென்பது திண்ணம். மேல் நாட்டாரின் நாகரிகத்தில் ஈடுபட்டு அதே சிறந்ததென்றெண்ணிக் கையாண்டு வருகின்றனர்கள் போலும்! நல்லது படிய நாட்செல்லும், கெட்டது கண்டதட்சணமே என்பது இவர்கள்பால் நன்கு விளங்குகின்றது. ஸ்திரீகளுக்கு அநேக சுதந்திரங்களளிக்க வேண்டுமெனறெண்ணி வரும் இந்நாளில் அத்தகைய சுதந்திரங்கள் நன்மையைப் பயக்குமாவென்பது தற்காலத்தில் சந்தேகிக்கக் கூடியதே. ஸ்திரீகளுக்கு இன்றியமையாததான அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு என்ற இந்நான்கினுள் இறுதியாகக் கூறப்படும் பயிர்ப்பு தினே தினே விருத்தியாகி வருவது பாராட்டத் தக்கதே. "கண்ணில்லாள் வனப்பின்னு" என்றபடி அழகே ஒருங்கு சேர்ந்து உருவெடுத்து வந்திருப்பினும் கண் இல்லாதவர்களுக்கு இவ்வழகு சிறப்பிக்காததுபோல், மங்கையர்களுக்குரித்தான மற்ற மூன்று அணிகளும் இல்லாவிடில் அப்படிப்புப் பிரகாசிக்காது. பெண்களுக்கழகு நாணமே. ஸ்திரீ ரத்னங்களுக்கு ஆபரணமாயுள்ள நாணமிருக்குமாயின் மற்றவைகள் தாமே வந்தெய்தும். மேல் நாட்டார் நாகரிகத்தைப் பேணி வருவதாலும் முற்கூறிய முதல் மூன்று அம்சங்களும சற்று குறைந்து விடுமென்பதிலையமில்லை. இந்தியர்களின் கோட்பாடுகளுக்கும், மேல் நாட்டாரின் விதிகளுக்கும் அநேக வேறுபாடுகளுள்ளன. ஸ்திரீகளுகுத் தனியே சுதந்திர மளிக்கப்பட்டு வரவில்லை. "சாண் பிள்ளை ஆயினும் ஆண் பிள்ளை" என்றமொழிதோன்றுதொட்டுவழங்குகின்றதேயன்றி ஸ்திரீகளைக் குறித்ததாகக் காணோம். ஸ்திரீகள் கொஞ்ச காலம் பெற்றோர்கள் ஆதீனத்திலும், பிறகு கணவனுக்குள்ளும், இறுதியில் பிள்ளைகளாலும் போஷிக்கப்பட வேண்டுமென்பது முன்னோர்கள் கொள்கை. இதுவே விதி. ஏன்? ஸ்திரீகள் தங்களைக் காத்துக்கொள்ளப் போதுமான மன உறுதியும், சரீர வலிமையும் இல்லாததே இதற்குக் காரணம். இவைகளை நிரூ



பிக்கவேண்டியே புராண சரிதைகள் ஏற்பட்டுள்ளன. பெரியோர்களின் துணையின்றி விடப்பட்ட சகுந்தலை வேட்டைக்கு வந்த துஷ்யந்தனையும், பதி சிசுருஷைக்காக அமைக்கப்பெற்ற சுபத்திரை துறவி வேஷம் பூண்ட அர்ச்சுனனையும் மணக்க நேர்ந்தது. மேலும் தனிமையில் விடப்பட்ட தமயந்தி, சீதை, இவர்கள் பட்ட கஷ்டங்களும் போதுமான சான்றாகும். "துணையோடல்லாது நெடுவழி போகேல்" என்பதின் கருத்தை அறியாது பிரார்த்தனையின் நிமித்தம் தனியே சென்ற சகோதரி ஒருவள் தான் சென்ற மோட்டார் ஓட்டுபவனால் அடைந்த துன்பத்தைப் பற்றி கொஞ்ச காலத்திற்கு முன் திருநெல்வேலிக்கு சமீபத்தில் நடந்த விஷயத்தைப் பத்திரிகைகளின் வாயிலாய் அறியவில்லையா? தன்னைக் காத்துக்கொள்ள வலிமை இருந்ததா? தெய்வச் செயலாய் உயிருடன் இரா முழுவதும் கிணற்றிலிருந்ததால் மறு நாள் உதவிகொண்டு வெளி வர நேர்ந்தது. இவைகளை அறிந்துள்ள சகோதரிகள் தனித்து வெளிச் செல்வது அபாயத்திற்கிடமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா?

இதத்தைக் கோரி நல் வழியைப் போதித்து வருபவர்களின் வார்த்தைகள் சில சகோதரிகளுக்கு விஷமாகத் தோன்றுகின்றன. தற்காலம் சிரிக்கச் சொல்லுபவர்கள் வாழ் நாட்களை இன்புறச் செய்யும்படி போதிப்பார்களா? தேசாசாரத்தை விடுத்து அயல் நாட்டாரின் ஒழுக்கைப் பின்பற்றிச் செல்லும் சிறுமிகளினால், கல்வியால் வந்த கேடு என்றென, என்றும் அழிவில்லா மாணிக்கமாகிய கல்விக்கு ஒரு பழியைச் சுமத்தி வைக்கக் காரணமாகின்றது. "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம" என்று மொழிந்த ஔவையின் நீதியை உணரவில்லையா? கானலை நீரென்றெண்ணி அலைவதுபோல், போலி நாகரிகத்திற் கலந்துகொண்டு அல்லற்படுவது என்று தீருமோ? தொடங்குங்கால் இன்பமாகத் தோன்றி இறுதியில் அநேக கஷ்டங்களை விளைவிக்கக் கூடியது இந்நாகரிகமென்பதை உணர்வார்களா?

சுதந்திர மென்பது ஸ்திரீகளுக்கும் ஆடவர்களைப்போல் எல்லா விஷயங்களிலும் சம உரிமை இருக்கவேண்டு மென்பதேயன்றி, அவர்களுடன் தாராளமாகப் பழகுவதல்ல என்பது சகோதரிகள் அறிந்ததே! நாணமின்றிப் பழகுவதும் சுதந்திரமென்பதில் அடங்கி உளதென்றுரைப்பதானால், ஸ்திரீகளுக்காகத் தனிக் கல்லூரியும், அல்லது மாணவர்கள் கல்லூரியில் தனிப்பட்ட ஸ்தானங்களும் ஏற்படுத்தப்பட்டிருப்பது அவசியமில்லை. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பதினால் இளமையில் எது பிடிபடுகின்றதோ அதே முதிர்வடைந்த பிறகும் வளர்ந்து வருவதால், நல்வழக்கத்தைப்பால்யமுதற்கொண்டே அப்பியசித்து வரவேண்டுமென்பது பெரியோர்களின் துணிபு. ஸ்திரீகளின் பெரும்பான்மையான குற்றங்களுக்கு ஆடவர்களே மூல காரணமென்பதும் யாவருமறிந்த இரகசியமே. கண்ணாற் கண்டது எளிதிற் படியும் இளம் பிராயத்தில் இவ்விதம் கலக்கச் செய்வது தவறன்றோ? இளம் பருவமுள்ள ஸ்திரீ புமான்களைத் தடையின்றிப் பழகச் செய்வது மெழுகையும் அனலையும் சேர்த்து வைத்தது போலாகுமென்று அறிஞர்கள் உரைக்கின்றார்கள். இயற்கையாயுள்ள குணங்கள் சேர்க்கையால் மாறலாமன்றோ? தகாதவர்கள் கூட்டுறவு தீங்குகளை விளைவிக்கக் கூடியதென்றெண்ணியே "சேரிடமறிந்து சேர்" என்ற வாக்கியமுளது. புராதன நாகரிகத்தை அனுஷ்டித்து வருபவர்கள் கூட நம் சகோதரிகள் மனப்போக்கின்படி தற்காலம் இருந்து வருவதைக் கண்டு ஆசைகொண்டு, நவீன நாகரி

கத்தைத் தழுவ ஆவல்கொள்ளுகிறார்கள். ஐயோ! இஃதென்ன விந்தை! "காக்கை அன்ன நடை நடக்கப்போய்த் தன்னடையும் ஒழியலாச்சு" என்றபடி மாசற்ற பழய நாகரிகத்தை விட்டுப் போலி நாகரிகத்தைப் பின்பற்ற முயல்வதினால், இரண்டாட்டில் கட்டிய குட்டிபோல் தவிக்க நேரிடுகின்றது. அக்கரை பச்சையாகத் தோன்றி நவீன நாகரிகத்தை அனுஷ்டித்து வரும் சகோதரிகள் தாம் கெட்டதுமன்றி சந்திர புஷ்கரணியையும் கெடுப்பது போலாகுமென்பதை அறிவார்களா?

கல்வி விஷயமும் பயனற்ற நாகரிகம் போலவேயே இருந்து வருகின்றது. தற்காலமிருந்து வரும் வித்தியா திட்டமானது மாணவர்களுக்குக்கூட பயன் தரத்தக்கதாக இல்லை என்பது யாவருமறிந்ததே! பயனற்ற இத்திட்டத்தை அனுஷ்டித்துப்படித்துத் தேர்ச்சிபெற்று வெளிவந்தாலும், வேலையில்லாத் திண்டாட்டம் அநேகரை வருத்தி வருகின்றது. இத்தகைய இடையூர்களுக்கிடையில் சகோதரிகள் அன்னிய பாஷையை மட்டும் ஆவலுடன் கற்பதில் பயனென்ன! "ஆளில்லா மங்கைக் கழகு பாழ்." ஸ்திரீயாக ஜனித்த ஒவ்வொரு சகோதரிகளும் ஒரு புமானை மணந்து இவ்வாழ்க்கையில் இருந்து வரவேண்டுமென்பது யாவருமறிந்ததே. "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்ற அமிர்த வசனத்துக்குத் தக்கவாறு நடப்பவளன்றோ உண்மையான பத்தினி ஆகிறாள். குடும்பத்தை நடத்துவதற்கு இன்றியமையாததான விஷயங்களைக் கற்பதோடு, பாலர்களைப் பரிபாலித்துப் போதிக்கும் விஷயத்தையும் ஆடம்பரமின்றி சிக்கனத்தைக் கைக்கொண்டு வாழும் வாழ்வை அறிவதோடு, கைவேலைகள், தையல், ராட்டினம் சுற்றல் முதலான விஷயங்களை அப்பியசித்துவந்தால் தங்கள் வாழ்க்கைக்கு இவைகள் துணையாக இருக்குமன்றோ? பெண்களுக்குக் கல்வி சிலையிலெழுத்து. ஆதலின் எவைகளும் இளமையிலேயே படியவேண்டும். அதி பால்யமான சிறுமிகள் கல்லூரிக்கு வெளியிற்கூட நண்பர்களுடன் வார்த்தையாடும்போது ஆங்கிலேயத்தையே உபயோகிக்கின்றார்கள். இதுவோ நம் வாழ்வு! ஏன்? இதிலும் சகவாச தோஷமல்லவா! வித்தியா திட்டத்தில் தாய்பாஷையின் அபிவிருத்திக்கான வழியைத் தேடாததே இத்தகைய விபரீதங்களுக்குக் காரணமல்லவா? நம்மைப் பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ், தாலாட்டித் தூங்கவைத்ததும் தமிழ் என்று தமிழின் பெருமையைப் பற்றி வரைந்துள்ளதை இவர்கள் அறிந்திருப்பார்களா? அருமையான அநேக நீதி நூற்களை இயற்றி இன்புறச் செய்யும் ஔவை ஒரு ஸ்திரீதான் என்பதை மறந்தார்களோ? ஏன்! வெகு தூரம் செல்வானேன்! சித்ராமணிப் பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமதி சகோதரி பாலம்மாள் கற்றுள்ள தமிழ், சமஸ்கிருதம் இவைகளை இதர சகோதர சகோதரிகள் பயன் பெறுமாறு உழைத்து வருவது போற்றத் தக்கதல்லவா? இவ்விரு பாஷைகளிலும் இவ்வம்மணிக்கிருக்குமா வைசயோடு சகோதரிகளின் முன்னேற்றத்தில் ஆவல்கொண்டிருப்பது பாராட்டக்கூடியதே! இவர்களைப் போல் இன்னும் அநேக சகோதரிகள் முன்வரின் நாட்டிற்கே சிறப்புண்டாகுமெனச்சொல்லவும் வேண்டுமோ? வித்தியா திட்டத்தின் குறைவே நம் சகோதரிகள் தாய் பாஷையின் சிறப்பையும் நாட்டின் பெருமையையும் அறியாதிருக்கச் செய்வது.

தன் பதிவிருதா தர்மத்தால் கூற்றுவனிடம் அகப்பட்ட தன் நாதன் உயிரை மீட்டு வந்த உத்தமி சாவித்திரி பிறந்தநாடு, கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன் என்பதை நினைத்து கொடிய பிணியால் பிடிக்கப்பட்ட



தன் புருஷனிடம் சற்றும் வெறுப்புக் காட்டாது பதிசிசுருஷையில் ஈடுபட்டுவந்த பத்தினி நளாயினி தோன்றியநாடு, அயலாரின் பராக்கிரமத்தால் வெளிவர மதியாது, தன் கணவர் வீரம் வெளிவர வேண்டிய ஆவல் கொண்டு, அனுமானுடன் வர மறுத்த சீதாப்பிராட்டியார் அவதரித்த நன்னாடு, திருமூர்த்திகளின் பத்தினிகளால் முடியாது தன் பதிவிருதா தர்மத்தால் இரும்புக் கடலைகளை வருத்து நாதருக்கீந்த நாரீமணியான அனசூயை உதித்த நாடு, தன் நாதனைக் காணும்வரை எச்சுகத்தையும் நாடுவதில்லை என்ற வைராக்கியத்தோடிருந்து, கணவனைக் கண்டவுடன் பாதித் துகிலோடும், மாசுபடிந்த சரீரத்தோடும் அன்னவரின் கால்களில் வீழ்ந்து தன் கண்ணீரால் அவர் உபய பாதங்களையும் கழுவிய உத்தமி தமயந்தி பிறந்த நாடு, இத்தகைய ஸ்திரீ ரத்னங்கள் தோன்றிய இப்பாரத நாட்டிலோ மேல் நாட்டார் நாகரிகம் தவழ்ந்து விளையாடுவது! இவ்வுத்தம நாடு பெற்றிருக்கும் மகிமை குறையாவண்ணம் இனியேனும் சகோதரிகள் நடந்து வருவார்களாக.

# சாந்த்பீபி அல்லது தேச சரித்திரத்தையொட்டி அதற்கேற்ப அமைத்த ஓர் நவீனக் கதை.

(ஸ்ரீமதி சீதம்மாள்)

(285-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணி சாந்த்பீபியானவள் பெரிய மண்டபத்தில் யதாப்பிரகாரம் சித்திரங்களெழுதி நன்று அலங்கரிக்கப்பட்ட ஜன்னலின் பக்கத்தில் தனது பெரிய நாற்காலியில் பிரபுக்களும் ஸ்திரீகளும் புடைசூழ வீற்றிருக்கும்பொழுது அவ்வரசியின் உத்தியோகஸ்தர்களிலொருவன் உட்புகுந்தான்.

அவன் இராணியை வணங்கி ஒரு விண்ணப்பம் செய்துகொண்டான். அதாவது—"பகைவர்களுடைய சைனியத்திலிருந்து எங்களிடம் ஒரு வாலிபன் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான். அவனைத் தங்கள் சமூகத்திற்கு அழைத்துவர அனுமதியளிக்கவேண்டும்" எனக்கெஞ்சினான்.

இராணி சரி என்று சொன்னவுடன் அவன் போய்விட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் உயரமாயும் மிகுந்த அழகோடும் கூடின ஒரு வாலிபனை இரு பாராக்காரர்கள் காவல் செய்ய அவனை முன்னிட்டுக்கொண்டு முன்வந்த உத்தியோகஸ்தன் பிரவேசித்தான்.

அவ்வாலிபன் அஞ்சாத நெஞ்சமும் ஆண்மையும் உள்ளவனென்று பார்ப்போரனைவரும் எண்ணினார்கள். இன்னும் அவனுடைய மயிர் கன்னங்கரேலென்றும், கண்கள் விசாலமாய் நீல நிறத்தோடு கூடியும், தோள்கள் உருண்டு திரண்டும், மார்பு அகன்று விசாலமானதாயும், நீண்ட கால்களும், கைகள் முழங்கால்கள் வரையில் நீண்டும் இருந்தன. அவனை அந்த உத்தியோகஸ்தன் இராணிமுன் கொணர்ந்து நிறுத்தினான். சாந்த்பீபி அவனை வைத்த கண்வாங்காமல் பார்த்துவிட்டு "இவனை எங்கிருந்து பிடித்துக் கொணர்ந்தீர்கள்?" என்று தனது உத்தியோகஸ்தனைப் பார்த்துக் கேட்டாள்.

உடனே உத்தியோகஸ்தன் சொல்லலுற்றான்: "நேற்று விடிய ஜாமத்திற்கு இவன் நமது கீழ்க் கோட்டை வாயிலின் பக்கம் வந்தான். இவனை நாங்கள் விசாரித்தபொழுது

எனதரசனை ஆலி ஆதல்ஷாவினுடைய கோபத்திலிருந்து தன்னைக் காக்கும்படி கேட்டுக்கொண்டான்."

அரசி:—"ஆனால், இவன் சைனியத்திலிருந்து தப்பி ஓடி வந்தவனா?" என்று புருவத்தை நெறித்துக்கொண்டு கேட்டாள்.

உத்தியோகஸ்தன்:—இவன் எங்களிடம் ஒன்றுமே சொல்லவில்லை. நாங்கள் எத்தனை கேட்டும் 'எனது சமாச்சாரத்தை உங்களுடைய இராணியின் சமுகத்தில்தான் தெரிவிக்க முடியும்' என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டான்.

அரசி:—"சரி, அவனைப் பேசச் சொல்லு" என்று சொல்லிவிட்டு, தனதருகிலிருந்த ஒரு ஸ்திரீயினிடமிருந்த ஒரு மயிலிறகு விசிறியை வாங்கி அதனால் தனது முகத்தைக் கொஞ்சம் மறைத்துக்கொண்டு மந்தஹாஸமாக உட்கார்ந்திருந்தாள்.

உத்தியோகஸ்தன் "ஓ கைதியே, என்ன சொல்லவேண்டுமோ அதை சமுகத்தில் தெரிவி" என்றான்.

புதிதாய் வந்தவன்:—"நான் கைதியாயிருந்தால் அது என்னுடைய இஷ்டமே. எனக்கு உங்களரசியினுடைய கருணையைத் தவிர வேறு வழியில்லாமையினால் வந்து உங்களிடம் அகப்பட்டுக் கொண்டேன். ஆனால், நான் வஞ்சித்து ஏமாற்றுபவனல்ல. எனதரசனுக்கு ஒரு விதமான கெடுதலும் நினைப்பவனல்ல; எனக்கு யஜமானனாயிருக்கிற அரசன் ஆலி ஆதல்ஷாவிற்கு எப்பொழுதும் நன்மையையே கோருபவன்......"

"அப்படியானால், உனதரசனை எங்களை இவ்விடம் அமைதியாயிருக்க விட்டுத் தன் தேசத்திற்குப் போகும்படி பிரார்த்தித்துக் கொள்" என்றாள் இராணி. சபையிலிருந்த பிரபுக்களெல்லோரும் சிரித்தார்கள். ஸ்திரீகளெல்லோரும் உட்சிரிப்புக் கொண்டார்கள். இவைகளையெல்லாம் அவ்வாலிபன் இலட்சியம் செய்யவேயில்லை; அரசியினால் சொல்லப்பட்ட வார்த்தையைக் கூட இலட்சியம் செய்ததாகத் தோன்றவில்லை. அவன் மேலே சொல்லலுற்றான்:—

"நான் அரசனுடைய அந்தரங்க யோசனை முதலியவைகளுக்குப் பாத்திரனாயிருந்தேன்; நான் மிகவும் புத்தி கூர்மையுள்ளவனென்று எனதரசன் எண்ணியிருந்தார். தனக்குத் தெரியாதது எதுவாயிருந்தாலும் என்னால் அறிந்து கொள்ளப்படுகிறதெனச் சொல்லுவார். எனக்குத் தெரியாதது ஒன்றுமில்லையென்பது அவரது எண்ணம். என்ன கஷ்டமான கேள்விகளாயிருந்தாலும் என்னால் அறிய முடிகிறதென்று சொல்லுவார்.

"எனதரசர் இந்த மூன்று தேசங்களையும் படையெடுத்து ஜயித்து வெற்றி மாலை சூடிய பொழுதெல்லாம் நான் அவருக்குப் பக்கலிலேயேயிருந்தேன். அதற்குப் பிறகு இந்த ஊருக்கு என்னைக் கூட்டிக்கொண்டு வந்தார். என்னுடைய சௌரியத்தினாலும், யோசனையினாலும் நிச்சயமாகத் தான் இந்நகரையும் கைப்பற்றி விடலாமென்று உறுதியாயிருந்தார். அது இம்மாதிரியான தோல்வியை யடையுமென்று அவர் சிஞ்சித்தும் எண்ணினாரில்லை. நான் இப்படியெல்லாம் சொல்லித் தன்னைத்தானே தற்புகழ்ச்சி செய்து கொள்வதாக நீங்கள் எண்ணுகிறீர்கள்:—

" தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் "

என்ற நன்னெறி வாக்கியத்தை நான் நன்குணர்வேன். எனதரசன் என்னைப் பற்றி பகிரங்கமாகவும், தனிமையாகவும் சொன்னவைகளைத் திரும்பிச் சொன்னேனேயொழிய வேறில்லை."



உடனே சாந்த் பீபி, "உன்னைப் பற்றி ஒருவனாவது அளவு கடந்து மதித்தானல்லவா? இரண்டாவதாக நானும் அப்படியே எண்ணுகிறேன்" என்றாள்.

மறுபடியும்பிரபுக்களெல்லோரும் நகைத்தார்கள். ஸ்திரீகளெல்லோரும் பரிகாசநகைப்புக்கொண்டார்கள். அதற்கும் அந்த மனிதன் அசையவில்லை. அவன் ஒன்றையும் கவனியாதவனாய், அதே மெதுவானகுரலில் இன்னிசைநடையில் கேட்போர் காதுக்கு இனிமையையும் வருத்தத்தையும் தரும்படி சொல்லலுற்றான். அவன் சொன்ன வார்த்தைகளினுடைய உருக்கத்தினால்சபையோர்கள் தாங்கள் சிரித்ததைப்பற்றி வருந்தினார்கள். அவன் சொன்னதாவது:— "இது நிற்க; தங்களால் அனுப்பப்பட்ட விடுகதையைத் தூதுவன் கொண்டு வந்தான். அது என்னுடைய உயிருக்கே உலை போலாகி விட்டது. ஏனெனில், அதற்கு அர்த்தம் என்னைக் கேட்டபொழுது நான், "மதிற் சுவற்றைக் கடக்கு முன் 'கோட்டை'யை எப்படித் தூக்க முடியும்" என்ற கேள்வியை இலட்சியம் செய்ய வேண்டாமென்றும், இது வீண் டம்பப் பேச்சென்றும் சொன்னேன்; அரசரும் நான் சொன்னதை நம்பி மும்முறை போர் தொடங்கி விருதாவாகப் போயிற்று. வீணில் மிகுந்த தைரியமான வீரர்கள் மடிந்தார்கள். திரும்பவும் தங்களிடம் தூது அனுப்பித்த பொழுது அதே கேள்வி வந்தது. மறுபடியும் அரசன் என்னைக் கூப்பிட்டுக் கேட்டபொழுது நான் 'அரசே, இது தங்களைத் திரஸ்கரித்து அவமானம் செய்வதற்காகச் சொன்ன செய்தி' என்று சொன்னேன். அப்பொழுதும் நான் சொல்லுவதை நம்பி யுத்தம் செய்து விருதாவாகப் போய் விட்டது. அப்பொழுதும் பல தைரியமான வீரர்கள் விண்ணுலகேகினர். பிறகு மூன்றாந் தடவை தங்களிடம் தூது அனுப்பித்ததற்கும் அதே சமாச்சாரம்வந்தது. அரசன் திரும்பவும் என்னை யழைத்து 'இந்தக் கேள்விக்குச் சரியான விடை யென்ன?' என்று அழுத்திக் கேட்டார்.

"எனக்கு அந்த விடுகதையினுடைய அர்த்தம் சரியாகப் புரியாததினால், நான் ஏதாவது சொன்னால் இன்னும் சாவுகள் வீணாக நேரிடுமேயெனப் பயந்து அரசன் முன்னிலையில் எனக்கு அந்தக் கேள்வியின் விடை தெரியவில்லை யென்பதை ஒப்புக்கொண்டேன்."

உடனே அரசி, "இவ்வளவு நஷ்டத்திற்கும், சாவுக்கும் பிறகாவது தங்களுக்குப் புத்தி வந்ததே" என்றாள்.

வந்த மனிதன் சொல்ல ஆரம்பித்தான்: "நான் மேற் கூறிய வார்த்தைகளைச் சொன்னதும் அரசன் என்னை மூடனென்றும், மடையனென்றும், இன்னும் அநேக விதமான வசைச் சொற்களைச் சொல்லி—அதிகம் சொல்லுவானேன்—'இத்தடவை இந்த விடுகதையை விடுவிக்கா விட்டால் உன்னுடைய சொந்த தேசத்திற்குப் போகவோ அல்லது பந்து ஜனங்களைப் பார்க்கவோ முடியாது; இந்த நகரினுடைய எல்லையில் இழிவாக இறக்க நேரிடும்' எனச் சொல்லி விட்டார். சாவு என்பதில் மனிதர்களுக்கிருக்கும் இயற்கையான பயத்தினால் அரச சபையிலிருந்து நழுவித் தங்களுடைய கீழக் கோட்டை வாயிற் காப்போனிடம் வந்து சேர்ந்தேன்" என்றான்.

"நீ எங்களிடமிருந்து என்னதான் அபேட்சிக்கிறாய்" என்றாள் அரசி.

"இந்த விடுகதையினுடைய தாத்பரியத்தைச் சரியாகத் தெரிந்துகொண்டு மறுபடியும் அரசனிடம் போய் அவருடைய தயவை அடையலாம்—"

"அது முடியாமற்போனால்?" என்று சாந்த் பீபி சிரித்துக் கொண்டே கேட்டாள்,

புதிய மனிதன் "இவ்விடம் என்னை நீங்கள் மறைந்திருக்க விட்டால் எனது சுய புத்தியைக்கொண்டு எப்படியாவது அவ்விடுகதையின் தாத்பரியத்தை அறிந்து கொள்ளலாமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்றான்.

பிரபுக்களெல்லோரும் சிரித்துக் கொண்டே மெதுவாக நிந்தித்தார்கள்; ஆனால் ஸ்திரீகள் அந்த வாலிபனுடைய ரூபத்தையும், வாக்கு சாதுரியத்தையும் கண்டு, "ஐயோ, பாவம்! இவ்வளவு தைரியமும் முகவசீகரமுமுடைய மனிதனுக்கு இந்த அற்ப வார்த்தைக்காக இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே" யென்று வருத்தத்தோடு பெருமூச்சு விட்டார்கள். சாந்த்பீபியோ தலையைக் குனிந்து கொண்டு யோசனையிலிருந்தாள். அவள் தலையை நிமிர்ந்து பார்த்தபொழுது அவ்வாலிபன் தன் மீதே பார்வையைச் செலுத்தியிருப்பதைப் பார்த்தாள். இருவர்களுடைய கண்களும் சந்தித்தன. இருவருடைய கண்களிலிருந்தும் பளீரென்று ஒரு விதமான ஒளி வீசிற்று.

உடனே சாந்த்பீபியினுடைய கன்னத்தில் ஒருவித மங்கலான சிவப்பு வர்ணம் உண்டாயிற்று—அது ஒரு வேளை பக்கத்து ஜன்னலின் வர்ணத்தில் வெளிச்சம் விழுந்து அரசியின் முகத்திற் பட்டதால் இருக்கலாமோ, என்னமோ?

சாந்த்பீபி அவனைப் பார்த்துச் சொல்லலுற்றாள்:—"நீ ஒரு வாரம் இவ்விடம் தங்கியிருக்கலாம். ஆனால் இன்றைய எட்டாநாட் காலையில் என் வேலைக்காரர்கள் உனதரசனிடம் உன்னைக் கொண்டுபோய் விட்டு விடுவார்கள். நீ இந்த நிபந்தனைக்கு உட்பட்டால் ஒரு வாரம் இவ்விடம் தங்கியிருக்கலாம். நீ அதற்குள் சரியான விடையுடன் உனதரசனிடம் போகாவிட்டால் உனது உயிருக்கே முடிவு நேரிடும்; என்ன சொல்லுகிறாய்?" என்றாள்.

"சரி, நீங்கள் சொன்ன நிபந்தனைக்கு உட்படுகிறேன்" என்றான் வாலிபன்.

"சரி, அப்படியே," என்று சொல்லி விட்டு எழுந்து சென்றாள் இராணி.

(தொடரும்)

# சற்போத வினா விடை.

(ஸ்ரீமதி P. மங்களா பாயி)

(ஸ்ரீயுத தாமோதர கிருஷ்ண காந்தீகர் அவர்கள் மனோரஞ்சன் சஞ்சிகையில் எழுதியதன் மொழி பெயர்ப்பு).

ஒரு பழைய காவியத் திரட்டைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அதில் விமலன் என்ற நாமதேயமுள்ள ஜைன கவியின் ஒரு சிறிய நூல் அகப்பட்டது. அதில் 29 சுலோகங்கள் வினாவிடை ரூபமாக விருந்தன. அவைகள் சற்போதத்தைத் தரக்கூடியனவா யிருக்கின்றனவென்று தோன்றினமையால் மொழி பெயர்த்து மனோரஞ்சன் வாசகர்களுடைய முன்னிலையில் வைக்கிறேன்.

வினா:—அங்கீகரிக்கத் தகுதியானது எது?
விடை:—குருவின் வசனம்.

வினா:—தியாகம் செய்யத் தகுதியானது எது?
விடை:—அகாரியம்.

வினா:—யாரை குரு என்று சொல்ல வேண்டும்?
விடை:—எவர் தத்துவப்பிராப்தி படைத்து பிராணி மாத்திரத்தின் நன்மைக்காக சதா காலமும் பாடுபடுகின்றனரோ அவரை.



வினா:—வித்துவானான புருஷன் எதை துரிதமாய்ச் செய்யவேண்டும்?
விடை:—சம்சார விஸ்தாரத்தின் நாசத்தை.

வினா:—மோட்ச மென்னும் விருட்சத்தின் விதை எது?
விடை:—கிரியையுடன் கூடிய நல்ல ஞானம்.

வினா:—சத்தியகாமானது எது?
விடை:—தர்மம்.

வினா:—மடியுடனிருப்பவன் யார்?
விடை:—சுத்தமான மனதை யுடையவன்.

வினா:—பண்டிதன் யார்?
விடை:—விவேக முள்ளவன்.

வினா:—கடினமானவர் யார்?
விடை:—ஆதரிக்கப்படாத குரு.

வினா:—சம்சாரத்தில் சாரம் எது?
விடை:—தீர்க்கமாக யோசித்துப் பார்த்த பிறகு தெரிய வருவதாவது, சுய நன்மைக்காகவும் பிறருடைய நன்மைக்காகவும் தன் ஜீவியத்தைச் செலவழிப்பதே (ஈடுபடுவதே.)

வினா:—மதுவைப்போல் மோகத்தை உண்டு பண்ணக் கூடியது எது?
விடை:—சிநேகம்.

வினா:—கள்ளன் யார்?
விடை:—சிற்றின்பம்.

வினா:—சம்சாரத்தின் கொடி எது?
விடை:—ஆசை.

வினா:—சத்துரு யார்?
விடை:—சோம்பல் அல்லது உத்தியோகமின்மை.

வினா:—எதனால் பயம்?
விடை:—மரணத்தினால்.

வினா:—குருடனை விடக் குருடன் யார்?
விடை:—காமார்த்தன் (சிற்றின்ப இச்சையால் கண் தெரியாமற் போனவன்).

வினா:—சூரன் யார்?
விடை:—ஸ்திரீகளின் கடாட்சமென்னும் அம்பிற்கு வசமாகாதவன்.

வினா:—செவி என்னும் அஞ்சலியால் (கையால்) அமிருதத்தைப்போல் அள்ளியள்ளிக் குடிக்கத் தகுதியானது எது?
விடை:—நல்ல உபதேசம்.

வினா:—மதிப்பு விருத்தியாவதற்குக் காரணம் எது?
விடை:—யாரிடத்திலும் ஒன்றும் யாசியாமலிருத்தல்.

வினா:—ஆழ்ந்தது எது?
விடை:—ஸ்திரீ சரித்திரம்.

வினா:—புத்திமான் யார்?
விடை:—ஸ்திரீ சரித்திரத்தினால் பீடிக்கப்படாதவன்.

வினா:—தரித்திரம் என்றால் என்ன?
விடை:—சந்தோஷ மின்மை.

வினா:—இழிவைத் தரக் கூடியது எது?
விடை:—யாசித்தல்.

வினா:—உண்மையான ஜீவியம் எது?
விடை:—நிந்திக்கப்படாத ஜீவியம்.

வினா:—ஜாட்டியம் என்றால் என்ன?
விடை:—கெட்டிக்காரத்தன்மையை அப்பியசிக்காமலிருப்பது.

வினா:—விழிப்புடனிருப்பவன் யார்?
விடை:—யோசிக்கப்பட்டவன்.

வினா:—தூக்கமென்று எதற்குச் சொல்ல வேண்டும்?
விடை:—பிராணியின் மூடத் தன்மைக்கு.

வினா:—தாமரை இலையிலிருக்கும் தண்ணீர்த் துளியைப்போல் நிலையற்றது எது?
விடை:—யௌவனம், தனம், ஆயுள் இவைகள்.

வினா:—சந்திர கிரணங்களின் ஸமூகத்தை அனுபவிப்பவர், செய்யப்பட்டவர் யார்?
விடை:—ஸஜ்ஜனர்கள் மாத்திரமே.

வினா:—நரகம் எது?
விடை:—பராதீனம்.

வினா:—சௌக்கியம் எது?
விடை:—ஸர்வஸங்கத்தின் முடிவு.

வினா:—உண்மை என்றால் என்ன?
விடை:—பிராணி மாத்திரத்தின் ஹிதம்.

வினா:—பிராணிகளுக்குப் பிரியமானது எது?
விடை:—பிராணன்.

வினா:—நிஜமான தானம் எது?
விடை:—பிரதிபலனை இச்சியாது செய்யும் தானம்.

வினா:—நண்பன் யார்?
விடை:—எவன் பாப கர்மத்தினின்றும் விலக்குகிறானோ அவன்.

வினா:—நிஜமான பூஷணம் எது?
விடை:—சீலம்.

வினா:—வாக்கின் பூஷணம் எது?
விடை:—உண்மை பேசுதல்.

வினா:—அனர்த்தத்தைத் தரக்கூடியது எது?
விடை:—ஸங்கமில்லாத மனம்.

வினா:—சுகத்தைத் தரக்கூடியது எது?
விடை:—சிநேகம்.

வினா:—சகல துன்பங்களையும் நாசம் செய்யக்கூடியது எது?
விடை:—தியாகம்.

வினா:—குருடன் யார்?
விடை:—அகாரியத்தைச் செய்யப் பின் வாங்காதவன்.

வினா:—செவிடன் யார்?
விடை:—ஹிதமான போதனையைக் கேட்காதவன்.

வினா:—ஊமை யார்?
விடை:—தக்க சமயத்தில் பிரியமாகப் பேசத் தெரியாதவன்.

வினா:—மரணம் எது?
விடை:—மூர்க்கத் தன்மை.

வினா:—விலை மதிக்க இயலாதது எது?
விடை:—நல்ல தருணத்தில் கொடுத்தல்.

வினா:—ஆயுள் உள்ள வரையில் அம்பைப் போல் மனதை உறுத்துவது எது?
விடை:—இரகசியமாகச் செய்யும் அகாரியம்.

வினா:—எதற்காக முயற்சி செய்ய வேண்டும்?
விடை:—வித்யாப்பியாசம், நல்ல ஔஷதம், தானம் இவைகளைச் செய்ய.

வினா:—எதைத் திரஸ்கரிக்க வேண்டும்?
விடை:—துஷ்ட மனிதன், பிறருடைய மனைவி, பிறருடைய தனம் இவைகளை.

வினா:—இரவும் பகலும் எதைப் பற்றி சிந்திக்கவேண்டும்? எதைப் பற்றி சிந்திக்கலாகாது?
விடை:—சம்சாரத்தின் அசாரத்தைப் பற்றி சிந்திக்கவேண்டும். ஸ்திரீகளைப் பற்றி சிந்திக்கலாகாது.

வினா:—எந்த வஸ்துக்கள் பேரில் பிரியம் வைக்கவேண்டும்?
விடை:—கருணை, தாட்சண்யம், சிநேகம் இவைகள் பேரில்.

வினா:—பூஜிக்கத் தகுதியுள்ளவன் யார்?
விடை:—நன்னடக்கையுள்ளவன்.

வினா:—தனமில்லாதவன் யார்?
விடை:—நிச்சயமான நடத்தையில்லாதவன்.

வினா:—இவ்வுலகத்தை ஜயித்தவன் யார்?
விடை:—பொறுமையுள்ளவன்.

வினா:—தேவர்களிடத்திலிருந்தும் கூட நமஸ்காரத்தைப் பெறுகிறவன் யார்?
விடை:—தயை என்னும் குணத்தை முக்கியமாக உள்ளவன்.



வினா:—நல்ல புத்தியுள்ள மனிதன் எதை வெறுக்க வேண்டும்?
விடை:—சம்சார மென்னும் கானகத்தை.

வினா:—சகலப் பிராணிகளும் எவனுக்கு வசமாகின்றன?
விடை:—சத்தியமாகவும், பிரியமாகவும் பேசும் நற்குணமுள்ளவனுக்கு.

வினா:—மின்னலைப்போல் சபலமானது எது?
விடை:—துர்ஜனர்களுடைய சகவாசமும், ஸ்திரீகள் சித்தமும்.

வினா:—கலி காலத்திலுங்கூட பருவதத்தைப் போல் அசைவற்றவரும், திடசித்தமுள்ளவரும் யார்?
விடை:—சற் புருஷர்.

வினா:—எதற்காக துக்கிக்க வேண்டும்?
விடை:—வைபவம் இருக்கும்பொழுது கிருபணனாயிருப்பதைக் கண்டு.

வினா:—பிரசஸ்தமானது எது?
விடை:—ஏழையாயிருந்தும் உதார குணமிருப்பது—அவ்வாறே அதிகாரியாயிருந்தும் பொறுமையாயிருப்பது.

வினா:—இவ்வுலகத்தில் சிந்தாமணியைப்போல் துர்லபம் எது?
விடை:—சதுர் பத்திரம்.

வினா:—சதுர் பத்திரமென்றால் என்ன? எதை வித்துவான்கள் விசேஷமாய்ச் சதுர் பத்திரம் என்கிறார்கள்?
விடை:—பிரிய வசனத்துடன் கூடிய தானம், கர்வமில்லா ஞானம், பொறுமையுடன் கூடிய சௌரியம், தியாகத்துடன் கூடிய தனம் இந்நான்கும் சதுர் பத்திரமாம். தற்காலத்தில் இந்த சதுர் பத்திரந்தான் துர்லபமாயிருக்கிறது.

# சூரியாஸ்தமனம்

(ஸ்ரீமதி R. கல்யாணி அம்மாள்)
("சரஸ்வதி" பத்திராதிபர்)

மேவாடின் சூரியனாகிய ராணா பிரதாபனின் சரித்திரத்தை அநேகர் அறிந்திருக்கக்கூடும். இவனாளுகையின் கடைசி காலத்தில் சில ராஜத்துரோகிகளான ஜனங்கள் மகமதியர்களின் பக்கம் சேர்ந்து இவன் ராச்சியம் நசிப்பதற்குக் காரணமானார்கள். ராணா பிரதாபன் மகமதியர்களில் சம்பந்தம் விளைவிப்பதை எவ்வளவுக் கெவ்வளவு வெறுத்து வந்தானோ அவ்வளவுக் கவ்வளவு அச்சம்பந்தம் விசேஷம் வாய்த்ததென்று தீர்மானித்த ராஜபுத்திரர்களும் இருந்தனர். அவர்களில் இக்கதையில் கூறப்படும் ராஜா மான்சிம்மனும் ஒருவன். தன் தங்கையாகிய ஜோதிபாயை அக்பருக்கு விவாகம்செய்து கொடுத்து அதனால் சக்கரவர்த்தியின் தயவைப்பெற்றிருந்தான். ஒரு நாள் சூரியாஸ்தமன வேளையில் இவன் தனிமையாக ராஜஸ்தானமாகும் ஆராவலி மலையின் அடிவாரத்திற் தனது சௌரியப் பிரதாபங்களைத் தானாகவே புகழ்ந்துரைத்த வண்ணம் உலாவிக் கொண்டிருந்தான்.

"மான்சிம்மா, இப்பொழுது உன் நிலைமை மெத்த யோகத்திலிருக்கிறது. நீ சக்தியுள்ளவனென்று மதிப்புற்றிருக்கிறாய். உனது தோள் வலியின் கீர்த்தியானது காபூலிலிருந் [illegible] வரை வியாபித்திருக்கிற [illegible] மொகல் சக்ராதிப [illegible] கு நீ ஆதாரத் தூண் போலிருக்கி [illegible]. உனது உன்னத நிலை கண்டு மொகல் [illegible]க்கரவர்த்தியும் பயப்படு

207612

கிறான். பிரசித்தி பெற்ற உன் பெயர் எல்லோராலும் உச்சரிக்கப்படுகின்றது. இவ்வளவு வைபவங்களைக் காட்டிலும் வேறு உனக்கென்ன வேண்டும்? நீ இன்னும் வேறு எதை அபேட்சிக்கின்றாய்? ஆகா! இன்னமெவ்வளவோ அபேட்சையிருக்கின்றதே. உன்னாசைக்கு முடிவேகிடையாது. இன்னமும் நாளுமிடத்தில் உன்னை ஜனங்கள் அவமதிக்கின்றார்கள். மொகல் மன்னனுக்குத் தங்கையை விவாகித்துக் கொடுத்தேனென்று ஜனங்கள் கைதட்டிக் கேலிசெய்கின்றார்களே. பிரதாபா! பிரதாபா! இன்றில்லாவிடினும் நாளையேனும் உன் புகழ் அழியப்போகிறது நிச்சயம். என் பெயரைக் கெடுத்தவன் நீயே அன்றோ. என் கீர்த்தியாகிற சந்திரனை விழுங்கும் ராகு போன்றவனாவாய். நான் தலை குனியும்படி செய்ய நீயே முக்கிய காரணம். ஆனால் இதற்கேற்ற பலனை நீ வெகு சீக்கிரத்தில் அனுபவிக்கப் போகின்றாய்" என்றிவ்வாறு தனக்குள் பேசி முடித்துத் தலை நிமிர்ந்து நோக்கினான். எதிரில் ஒரு ஸ்திரீ ரத்னம் வருவதைக் கண்டான்.

"இந்த ரமணி யார்? இவள் அடிகள் செழுமையாக வளர்ந்து பனியில் தோய்ந்து அருகம்புல்லின்மேல் பெருங்காற்றினாலடிபட்டு விழுந்தப்படும் புஷ்ப ராசிபோன்று மிக மிருதுவாயிருக்கின்றனவே. இவளின் மெல்லிய நடை சேனாவீரர்களின் முரட்டு அடிகளினால் கிளரப்பட்டிருக்கும் இக்கானகப் பாதைக்கு மெத்த அழகைத் தருகின்றதே. இவள் என்னைக் குறித்தே நடந்துவருவதாகத் தெரிகின்றது. இதென்ன ஆச்சரியம்! இல்லை. இல்லை. ஒரு [illegible] இவ்வனதேவதையோ! பின் யாராயிருக்கக்கூடும்? இவள் விசனத்திற்கே இருப்பிடமானவளாகக் காணப்படினும் இவள் மனத்துள்ள துயரமே இவளின் அழகை இன்னம் அதிகரிக்கச் செய்கின்றதென்பதில் தடை என்ன?" என்றிவ்வாறு யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவ்வநிதா ரத்னமும் எதிரில் வந்து நின்றாள்.

மான்ஸிம்மன்—அம்மா! அருகில் வா. நானொரு ரஜபுத்திரன். ஸ்திரீகளை எவ்விதம் கௌரவிப்பதென்பதை ரஜபுத்திரன் நன்கறிவான். ஆகையால் நீ சிறிதும் அச்சப்பட வேண்டியதில்லை.

ஸ்திரீ:—இச்சொல் முழுப் பொய்.

மான்:—என்ன! அதிகப்பிரசங்கியான பெண்ணே! என்ன சொன்னாய்? மான்ஸிம்மனைப் பொய்யனென்று தைரியமாய்ச் சொல்வாயா?

ஸ்திரீ:—இவ்வளவு மாத்திரமா! இதினும் அதிகமாகவே சொல்வேன்.

மான்:—உன் தைரியங் கண்டு எனக்களவற்ற வியப்புண்டாகின்றது. மான்ஸிம்மனின் வாள் ஸ்திரீகளின் தேகத்தைப் பரிசிக்காதன்றோ. அதனால் உனக்கு ஆபத்தில்லாது நீ உயிர்த்திருக்க ஏதுவுண்டு.

ஸ்திரீ:—ஆயின் உடன்பிறந்தானின் இரத்தம் அதினும் தாழ்ந்ததோ? உன் வாளானது சகோதர ரத்தத்தினால் கறைபட்டிருக்கவில்லையா?

மான்—மாதே! நீ ஏதோ புதிர்ப் போடுகிறாயே. இதன் அர்த்தம் என்னவென்று தெரிந்துகொள்ளக் கூடிய சாமர்த்தியம் என்னிடத்திலில்லை.

ஸ்திரீ—(வீராவேசத்துடன்) உன் வாள் களங்கமுறவில்லையா? உன் வாளை உன் சகோதரர்களான ரஜபுத்திரர் மீது நீ உபயோகிக்கவில்லையா? மேவாட் ராச்சியத்தின் சூரியனும் பாரத மக்களால் பரிசுத்தனென்றும் பூஜிக்கத் தக்கவனென்றும் விளங்கும் பிரதாபனுக்கு விரோதமாக மொகலாயருடன் நீ சேர்ந்திருக்கவில்லையா? இதைக் காட்டிலும் வேறென்ன வேண்டுமென்கிறாய்?



மான்:—அவன் பெயரை இனி ஒரு முறை என் முன்னிலையில் உச்சரிப்பாயானால் நீ பெண்பால் என்பதைக் கூட மறந்து விடுவேன். தெரியுமா? ஜாக்கிரதையாய்ப் பேசு.

ஸ்திரீ:—(சிரித்து விட்டு) இதில் சற்றும் ஆச்சரியமே இல்லை. தாய் நாட்டின் துரோகிக்குப் பெண் வதையில் அச்சமேது.

மான்:—நிறுத்து, நிறுத்து. என் கோபத்தை உன் சொற்களால் அதிகப்படுத்தாதே. (உறையிலிருந்து வாளை உருவுகிறான்.)

ஸ்திரீ:—உன் உடைவாள் என்னைப் பயமுறுத்தக் கூடிய சக்தி வாய்ந்ததன்று. பளபளவென்று மின்னும் உன் வாளை உற்று நோக்கு. ஐயோ! அதில் படிந்திருக்கும் உன் அன்னையின் ரத்தக் கறை சிறிதும் அழியாமலிருக்கின்றதே.

மான்:—மூடமே! பைத்தியக்காரி! என்ன சொன்னாய்?

ஸ்திரீ:—என்ன சொன்னேனென்றா கேட்கிறாய்? இதைத் தான் சொன்னேன். மொகலாயர்களுக்காக நீ காட்டும் சூரத்தன்மை ஒவ்வொன்றும், செய்யும் உபகாரமனைத்தும் உன் ஜன்ம பூமிக்கு நீ காட்டும் கொடுமைகளன்றோ? இந்நன்றி மறந்த பாதகனை தேச மாதா என்றேனும் மன்னிப்பாளோ? மறந்து விடுவாளோ?

மான்:—பெண்ணே, வாயைமூடு. உன் அழகு உன் உயிரைக் காப்பாற்றுதென்பதைத் தெரிந்து பேசு. உன் அழகைக் கண்டு மயங்கி உன்னை சிட்சியாமல் விடுவதற்கு நான் யவனனல்ல.

ஸ்திரீ:—(ஆச்சரியத்துடன்) என்ன! நீ யவனர்களை வெறுக்கிறாயா? அவ்விதமாயின் உன் தங்கையை யவனனுக்கு ஏன் விவாகம் செய்வித்தாய்? மொகலாயர்களுக்கேன் சகாயம் செய்தாய்?

மான்:—இவை பெல்லாம் என் நாட்டில் ரத்த ஆறு பெருகாதிருப்பதற்கே.

ஸ்திரீ:—பிரதாபன் உனக்குச் செய்த துரோகம் என்ன? அவனை ஏன் பகைக்கின்றாய்? உன்னிடம் நிலைத்துள்ள கபடமும் துரோகசிந்தையும் அவனிடமில்லாமையால் நீ இவ்வாறு செய்கிறாய் போலும்.

மான்:—(வாளை உருவிய வண்ணம்) பெண் பேயே! உயிரிழக்கத் தயாராக இரு. இனியும் உன் கடுஞ் சொல்லைச் சகிக்க மாட்டேன்.

ஸ்திரீ:—(தைரியத்துடன்) ரஜபுத்திரப் பெண் மரணத்திற்கு ஒரு நாளும் பயப்படவே மாட்டாள்.

மான்:—(வியப்புடன்) என்ன! நீ ரஜபுத்திரியா!?

ஸ்திரீ:—ஆம். ஒரு காலத்தில் களங்கமற்ற ரஜபுத்திரப் பெண்ணாகவே நானிருந்தேன்.

மான்:—இருந்தேன் என்றால்? இப்போதும் நீ ரஜபுத்திரப் பெண் தானே. உன் அதிகப்பிரசங்கத்தனத்தை மன்னித்து விட்டேன். ரகசிய நிலைமையிலுள்ள உன் முகத்தைப் பார்ப்போம். வெளிச்சத்தில் வந்து நில். உன் குரல் எனக்கு முன் பழகியதாகத் தோன்றுகிறது. டில்லி பாதுஷா மொகலாய சக்கரவர்த்தி அக்பர் கூட அஞ்சும் மான்ஸிம்மனை மிரட்டிப் பேசக் கூடிய ஸ்திரீ ரத்னமாகிய நீ யார்?

ஸ்திரீ:—என்ன! அப்படிக்கல்ல, அப்படிக்கல்ல. "அக்பரும் துவேஷிக்கக் கூடிய மான்ஸிம்மன்" என்று சொல்.

மான்:—அவனுக்கவ்வளவு தைரியம் ஏது? அவனுடைய சிங்காதனத்திற்கு ஆதாரம் நானே

என்பதை அவன் நன்கறிவான். இவ்விதமிருக்க அவன் என்னைக் கண்டு அஞ்ச வேண்டியது தானே.

ஸ்திரீ:—ஐயோ! உன் புத்தி இவ்வளவுதானா! ஜயமடைந்த அரசன் தான் ஜயித்ததாகப் பெருமை பாராட்டுவானன்றி ஜயிக்கச் செய்தவனை மதிக்கவே மாட்டான். தன் வாளுக்கு அஞ்சித் தப்பித்தவனை கௌரவ புத்தியுடன் நோக்குவானென்று நீ நினைப்பது முழுத் தவறு. அக்பர் உன் முதுகைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தபோதிலும் வீரனும் தேசாபிமானியும் பௌருஷம் வாய்க்கப் பெற்றவனும் சுய மதிப்பை இழக்கச் சகியாதவனும் ஆகிய எதிரியையே (பிரதாபனையே) அவன் தன் மனதில் புகழ்ந்து கௌரவிக்கின்றான்.

மான்:—(ரோஷத்துடன்) நில், நில். மனிதனின் பொறுமைக்கு எல்லையுண்டு. நீ உன்மையில் பிரதாபனால் அனுப்பப்பட்டிருக்கும் வேவுகாரி என்பதில் தடையில்லை. க்ஷத்திரிய தர்மப்படி நீ தண்டிக்கத் தக்கவன்தான்.

(என்றிவ்வாறு கர்ச்சித்து வாளை யுருவிக்கை ஓங்கும்போது ஸ்திரீயானவள் தன் மீது போர்த்திருந்த போர்வையை எடுத்தெறிகிறாள்.)

மான்:—(திடுக்கிட்டு) என்ன, என்ன! ஜோதிபாய்! என் தங்கை! இதென்ன நான் காண்பது! கனவா நினைவா? அல்லது வனதேவதையின் மாயையோ?

ஸ்திரீ:—கனவல்ல. ஆம், உன் தங்கை ஜோதிபாய் நானே.

மான்:—தங்காய்! எனதன்புள்ள சகோதரீ! பாரத கண்டத்து எதிர்கால சக்ரவர்த்திக்கு அன்னாய்! என்னை மன்னித்து விடு. நான் செய்த பெரும் பிழையைப் பொறுத்துக் கொள். நிற்க. நீ துயரப்படுபவளாகக் காணப்படும் காரணம் யாதோ?

ஜோதிபாய்:—ரஜபுத்திர வீரனாகிய உனக்கு நான் துயரடையும் காரணம் தெரியாதது தானோ?

மான்:—தங்காய்! உன் மொழிகள் எனக்குத் திகைப்பை விளைவிக்கின்றனவே. எவளின் ஆக்ஞா சக்கரத்தினால் இப்பாரத வர்ஷம் சுழன்று வருகின்றதோ, எவள் மிகமிகுந்த ஐசுவரியம், சுகம், போகம், பாக்கியம் இவைகளாகிற பெருங் கடலில் ஆழ்ந்தெழுந்து கொண்டு வருகின்றனளோ அத்தகையவளின் வாயினின்றும் துயரமென்ற சொல் புறப்படுமாயின் நான் திடுக்கிடமாட்டேனா!

ஜோதி:—உன் சுயநலப் பேய்க்கு என்னைப் பலியிட்டு விட்டாய்.

மான்:—படபடக்காதே, தங்காய்! மனதைச் சாந்தப்படுத்திக் கொள். உன் மனம் கவலை கொண்டிருக்கிறது. சமாதானப்படுத்திக் கொள். உன் சொற்கள் எனக்கு விளங்கவே இல்லையே. எனக்கர்த்தமாகும்படி கூறு.

ஜோதி:—விளங்கவில்லையா! சொல்லுகிறேன் கேள். என்னைப் பிறமதத்தினனுக்கு ஏன் விவாகம் செய்து கொடுத்தாய்?

மான்:—என்னுடன் பிறந்தவளின் க்ஷேமத்தை நான்தானே கோரவேண்டியவனாயிருக்கிறேன். இதை யனுசரித்து நீ சக்கரவர்த்தியின் மனைவியாய் அகண்ட ஐசுவரியத்தில் அளவற்ற போகபாக்கியங்களுடன் சுகமாக வாழ்வதன் பொருட்டே உன்னை இவ்வாறு மணக்கச் செய்தேன்.

ஜோதி:—(கோபத்துடன்) நான் சுகமாக வாழ்வது என் புருஷனின் அன்பினாலும் எனது நற்குணத்தினாலுமன்றி உனது நிலைமையை முன்னேற்றமடையச் செய்வதற்காகவேன்றோ இக்கலியாணத்தை நீ நிச்சயப்படுத்தவில்லையா?



மான்:—தங்காய்! நீ இவ்வாறு என்னை தூஷிக்கலாமா?

ஜோதி:—நீ உன் சுய நலத்தை மட்டும் கவனித்தாயன்றி உன் ஏழைத் தங்கையின் சுகம்பற்றி நீ சிறிதேனும் சிந்தித்துப் பார்த்தாயா?

மான்:—(பரிகாசத்துடன்) ஐயோ பாவம்! டில்லியின் அரசி மெத்த ஏழையன்றோ?

ஜோதி:—எல்லாவற்றினும் ஐசுவரியமே முக்கியமா? அவ்விதமாயின் அத்தகைய போதனையை எனதிளமைப் பருவமிருந்து எனக்கேன் உபதேசிக்கவில்லை? ஐசுவரியத்தை மதியாத ஹிந்து குலத்தில் நான் ஏன் பிறந்தேன்?

மான்:—தங்காய், எல்லா மதங்களுடைய சாராம்சமும் முடிவில் ஒன்றே. மொகல் சக்கரவர்த்தியே சுயமாக இக்கொள்கையையனுஷ்டித்து நடத்துகிறானன்றோ.

ஜோதி:—நான் மாணாக்கியல்ல. இது பற்றி உன்னுடன் சர்ச்சை செய்ய நான் விரும்பவுமில்லை. எனது இளமைப் பருவத்திய சிந்தனைக்குத் தற்கால நிலைமை சிறிதும் ஒவ்வாததாயிருக்கின்றது. நீ என்னை உன் ராஜ்யத்திலுள்ள ஓர் ஏழை ரஜபுத்திரனுக்கு ஏன் அளித்திருக்கக் கூடாது? உனது சுயநலத்தைப் பெரிதென மதித்துத் தங்க நாணயங்களுக்காக என்னை விற்று விட்டாய். இவ்விசனம் என்னை இராப்பகலாக எவ்வாறு வருத்துகிறதென்பதை நீ எங்ஙனம் அறிவாய்?

மான்:—தங்காய், எனக்கிப்பொழுதே ஞானோதயமாயிற்று. இது பற்றி நீ முன்னதாகவே ஏன் சொல்லாதிருந்தாய்?

ஜோதி:—பெற்றோரளிக்குமிடத்தில் மணந்து, கணவனுக்குக் கீழ் பணிந்து, கிடைத்தது கொண்டு ஒருவாறு சமாதானத்துடன் காலங் கழித்தலே பாரதப் பெண்களின் தர்மமாகும். இப்பொழுதேனும் உன் பாபத்திற்குப் பச்சாத்தாப மடைந்து மன்னிக்கும்படிக் கடவுளை வேண்டிக்கொள்.

மான்:—அன்னாய்! என்னை மன்னித்து விடு. மன்னித்து விடு. நான் செய்த பெரும் பிழையை மன்னித்து விடு (முழந்தாளிட்டு வேண்டுகிறான்.)

ஜோதி:—நான் என்னவோ உன்னை மன்னித்தே இருக்கிறேன். ஆனால், உன் ராஜ்யலக்ஷ்மி உன்னை மன்னிப்பாளா?

மான்:—(கண்ணீர் விட்ட வண்ணம்) அப்படிக்காயின் நான் இனி என்ன செய்வேன். இவ்வளவு பாடுபட்டும் நான் என் பெயரை மணலின் மீது வரைந்துள்ளேன் போலும்.

ஜோதி:—ஆம். ஆம். சுய நலக்காரனாகிய உன் பெயர் மணல் மீதும் தாய் நாட்டுத் தொண்டனாகிய பிரதாபனின் பரிசுத்தப் பெயர் ஒவ்வொரு கற்பாறைகள் மீதும் வரையப்பட்டுள்ளன.

மான்:—(தலை மீது கை வைத்து மெத்த மன வருத்தத்துடன்) ஐயோ! பாழும் விதியே! என் ஒப்பற்ற காரியங்கள் முழுதும் இவ்வாறு முடிந்தனவோ?

ஜோதி:—இக்கேள்விக்கு நான் ஏன் பதில் கூறவேண்டும். சரித்திர நூல்கள் விஸ்தாரமாகக் கூறப்போகின்றன.

மான்சிம்மன் இம்மொழி கேட்டு நடு நடுங்கினான், ஒன்றும் தோன்றாதவனாக மௌனத்து

டன் குறுக்கும் நெடுக்குமாகத் திரியவாரம்பித்தான்.

ஜோதிபாய் மேற்றிசையை நோக்கி "ஆகா, எவ்வளவு ரமணீயமான நிழல் பூமிக்கு இறங்கிக் கொண்டிருக்கின்றது. அந்நிழல் ராஜபுதனத்தின் ஒவ்வொரு பாறைகள் மீது எவ்வளவு அழகை உண்டாக்குகின்றது. மேவாடின் சூரியனாகிய ராணா பிரதாபனின் கீர்த்தி போன்றே இனி விளங்கப் போகிறது. அண்ணா! சுய நல ஆசையால் முன் யோசனை சிறிதுமின்றி நீ செய்துவிட்ட பெரும்பிழையால் ராஜபுத்திர வம்சமும் ராஜ்யமும் வேரோடு நாசமாகி இனி இப்பாகங்களில் இருள் கவிழ்ந்துவிடப்போகின்றதே. ஐயோ!" என்று கண்ணீருதிர்த்து நின்றாள்.

# சோம்பல்.

(குகப்ரியை)

சோம்பல் என்றாலென்ன? உலகத்தைக் கெடுக்கும் பலவிதமான கெட்ட குணங்களில் சோம்பலும் ஒன்று. ஆனால் சோம்பலாயிருப்பவர்கள் தாங்கள் சோம்பேறி என்று ஒரு நாளும் உணருவதில்லை. சோம்பலை எல்லாவற்றையும்விட இழிவாகவே நாம் கருதுகிறோம். இதனாலேயே "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்றார் ஔவையார்.

உலகில் சோம்பலே எல்லாவிதமான கெடுதிகளுக்கும் காரணமாய் இருக்கிறது. சோம்பலுள்ளவர்கள் தங்களுடைய நன்மை தீமைகளையோ பிறருடைய நன்மை தீமைகளையோ பகுத்தறியச் சக்தியின்றிப் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகிய கட் குடிப்பவன் எந்த நிலைமையிலிருப்பானோ அந்த நிலைமையை அடைந்து விடுகிறார்கள். ஆனால் அச்சோம்பல் என்னும் கொடிய பேய் நம்மைப் பிடித்து வெகு நாட்களாகி விடவில்லை. அப்பேய் நம்மருகில் வரும்போழுதே நமக்கு எல்லாவற்றின் மேலும் ஒருவிதமான அசட்டை ஏற்படுகிறது. நீர் மேல் குமிழிபோல் அழிந்து விடக்கூடிய இந்த சரீரத்தின் மேல் அபரிமிதமான ஆசையும் பிரேமையும் உதித்து, எழுந்தால் கால்நோகுமோ, வேலை செய்தால் கைநோகுமோ, பேசினால் வாய் நோகுமோவென்றும் எண்ணச்செய்கிறது. எது எப்படியானால் தனக்கென்ன, யார் எப்படிப்போனால் தனக்கென்ன என்று தான், தான் என்கிற அகம்பாவமும் மேலெழ ஆரம்பிக்கிறது. பிறகு கர்வமும், அசட்டையும் வளரத் தொடங்குகின்றன. கர்வமும் சோம்பலும் சேர்ந்து பிறர் நம்மை எவ்வளவு தூரம் இகழக்கூடுமோ அவ்வளவு கூத்திற்கும் ஆளாக்கி விடுகிறது.

சோம்பலுள்ளவர்கள் எவ்வளவு செல்வமுள்ளவர்களாயிருந்தாலும், ஆரோக்கியமுள்ளவர்களாயிருந்தாலும் எல்லாம் அதிசீக்கிரத்தில் அவர்களை விட்டு அகன்று சுறுசுறுப்பும் சுத்தமும் உள்ள இடத்தை நாடிச் செல்லுகின்றன. ஆதலால் சோம்பல் ஆரோக்கியத்திற்கும் செல்வத்திற்கும் விரோதியாய் இருக்கிறது.

நாம் சாதாரணமாய் எந்த வீதியின் வழியே சென்றாலும் தோட்டி முதல் தொண்டமான் வரை எல்லாரும் தங்கள் தங்கள் தொழிலிலேயே கவனமாய் இருக்கிறார்களேயன்றி ஒருவராவது வீணாய் உட்கார்ந்திருப்பதில்லை. பெரிய லக்ஷாதிகாரியாயிருக்கும் தனவானும் தன் தொழிற் சாலையில் அங்குமிங்கும் போய்க்



கொண்டும் ஆட்களை வேலை வாங்கிக்கொண்டுமிருக்கிறானேயன்றி தான்தான் லக்ஷாதிகாரியாயிற்றே என்று உட்கார்ந்திருந்தால் தொழில் எப்படி நடக்கும். ஈ எறும்பு முதல் சகல ஜீவ ராசிகளும் ஒவ்வொரு விநாடியிலும் ஏதோ அவைகளுக் கேற்பட்ட வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றன. நம்மெல்லாராலும் இகழப்படும் "எச்சிற்கலம்" பொறுக்கும் சோம்பேறிகூட யார் வீட்டில் கலியாணம் எங்கே எச்சிற்கலை கிடைக்குமென்று தேடுகிறானல்லவா.

ஆனால் நாமோ, உண்பதும், உடுப்பதும் சோம்பலாய்ப் படுத்திருப்பதுமே பெரிதாய் எண்ணி, நாம் யார், எங்கிருந்து வந்தோம், இனி எங்கு செல்லப்போகிறோம், நமது கடமை என்ன, நாம் என்ன செய்யவேண்டும் என்பதைக் கருதாது சோம்பலுக்கு அடிமைகளாகவும், நித்திரா தேவியின் ஆலயம் போலவுமிருக்கிறோம். சோம்பலுள்ளவர்களின் முகத்தில் சுறுசுறுப்புள்ள முகத்தைப் போல் வசீகர சக்தி இருப்பதில்லை. பொலிவு குறைந்து ஒளி மழுங்கி இருப்பதை நாம் அநுபவத்திலும் கண்டிருக்கலாம். அழகும் பொலிவும் வேறு புகலிடம் தேடவே திருமகளும் கலைமகளும் வேறிடம் தேடிப்போகத் தொடங்குகிறார்கள்.

பிறகு நாம் அக்கொடிய சோம்பற் பேயின் வசப்பட்டு அதன் இஷ்டப்படி ஆடிப்பாடி ஓய்ந்து முடிவில் நடைபிணமாகவே திரிகிறோம் என்பது பலரும் அறிந்த விஷயமே. ஆதலால் சகோதரிகளே! சோம்பல் என்னும் பேய் வருமுன் சுறுசுறுப்பு என்னும் இரட்சையை மனதில் கெட்டியாய்க் கட்டிக்கொள்ள வேண்டும். அந்த இரட்சையானது பூமகளையும், நாமகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டது. சோம்பல் என்னும் பேயை வெகு தூரத்துக்கப்பால் துரத்தக்கூடியது. சுறுசுறுப்பில்லாதவர் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய சாதனங்களைத் தேடுதல் முடியாது. ஆகையால் இவ்வளவு மகத்துவம் வாய்ந்த அரிய பெரிய இரட்சையை நாம் எப்பொழுதும் கைவிடாதிருந்து சோம்பல் என்னும் பேயைத் துரத்துவதற்கு எங்கும் நிறைந்த பரம்பொருள் அருள் செய்வாராக.

சுபம்.

# பர்வத குமாரி.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(277-வது பக்கத் தொடர்ச்சி)

ஒன்பதாம் அத்தியாயம்.

ஆசை அரும்புதல்.

அதே நாள் இரவு பதினொரு மணிக்குச் சுசீலகுமாரனுக்கு நரேசனிடத்திலிருந்து இன்னொரு தந்தி வந்தது. அதில்—"பூபேந்திரனோடு இன்று மெயிலில் புறப்பட்டாயிற்று. நாளைக் காலையில் ஸ்டேஷனில் வந்திருக்கவும்" என்றிருந்தது. அன்றிரவு சுசீலனுக்கு நன்றாய் நித்திரை கொள்ளவில்லை. அவன் விடியற் காலம் நாலு மணிக்கே எழுந்து பரபரப்பாய்த் தந்த சுத்திசெய்துகொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டான். வெளியில் நாற் சந்திக்கு வந்து அவன் ஒரு வாடகை வண்டியில் ஏறிக்கொண்டு சற்று நேரத்துக்கெல்லாம் ஸியால்தஹ ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தான். உரிய நேரத்தில் மெயில் வண்டித் தொடர் ஸ்டேஷனண்டை வந்து நின்றது. நரேசன் ஒரு முன்

வகுப்பு வண்டியின் சாளரத்திலிருந்து முகத்தை வெளியில் நீட்டிச் சுசிலனை அழைத்தான். சுசிலன் விரைவாய் அந்த வண்டியின் எதிரே போய் நின்றான். நரேசன் வண்டியிலிருந்து இறங்கினதும் சுசிலன் கையைப் பற்றிக் குலுக்கினான். பூபேந்திரனும் வண்டியிலிருந்து இறங்கி வந்து சுசிலகுமாரனைக் கை கூப்பி வணங்கினான். பூபேந்திரனுடைய ஆயுதபாணிகளான அங்கரக்ஷகர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் வேலைக்காரர்களும் வண்டியிலிருந்து சாமான்களை இறக்கலானார்கள். பூபேந்திரன் அவர்களை "ராஜ நிவாஸ"த்துக்கு வந்து சேரும்படி கட்டளையிட்டு விட்டு, சுசில நரேசர்களுடன் ப்ளாட்ப்ஹாரத்தை விட்டு வெளியே போய்விட்டான்.

பூபேந்திரன் ப்ளாட்ப்ஹாரத்தை விட்டு வெளியில் வரும்போதே, அவனுடைய கல்கத்தாக் காரியஸ்தன் வந்து வணங்கி, "தங்களுக்காக காடி காத்திருக்கிறது" என்றான். பூபேந்திரன் அவனை நோக்கி, "சரி, நீர் சாமான்களை யெல்லாம் சரியாய்ப் பார்த்தெடுத்துக் கொண்டு வந்து சேரும். நாங்கள் புறப்பட்டுப் போகிறோம்" என்று சொல்லி விட்டு "நம்முடைய தந்தி உமக்கு எப்போது கிடைத்தது?" என்று கேட்க, காரியஸ்தன் "மஹாராஜ், நேற்று ராத்திரி பதினொரு மணிக்கு" என்று சொல்லி விட்டு ப்ளாட்பஹாரத்தை நோக்கிச் சென்றான்.

பூபேந்திரனும், நரேசனும், சுசிலனும் ஆகிய மூவரும் காடியில் ஏறி அப்பர் ஸர்க்யுலர் ரோட்டிலுள்ள 'ராஜ நிவாஸம்' போய்ச் சேர்ந்தார்கள். 'ராஜ நிவாஸம்' என்பது ஓர் இடமகன்ற தோட்டத்தின் மத்தியில் கட்டப்பட்ட மாளிகை. தோட்டத்தைச் சூழ மதிற் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. அவற்றின் ஓரமாய்த் திவ்யமான பல விருட்சங்கள் வளர்ந்திருந்தன. நடுவில் ஒரு பூஞ்சோலை இருந்தது. இதைப் பூஞ்சோலைக்குள்ளே அங்கங்கே சலவைக் கற்களாற் செய்யப்பட்ட பல மனோகரமான உருவங்கள் பலவகை ஹாவ பாவங்களைக் காட்டிக் கொண்டிருந்தன. மத்தியில் ஒரு செயற்கை யூற்று இருந்தது; அதினின்று இடைவிடாமல் நீர்த் தாரை பொழிந்து கொண்டிருந்தது.

காடியிலிருந்து இறங்கியவுடன் மூவரும் மாளிகையின் மேலறைக்குச் சென்று உட்கார்ந்தார்கள். அக்கணமே வேலைக்காரன் தேநீரும் சிற்றுண்டிகளும் கொண்டு வந்து வைத்தான்.

நரேசன் தேநீர் பருகிக்கொண்டே சுசிலனை நோக்கி, "கலியாணத்துக்குத் தயாராக வேண்டியதெல்லாம் சரியாய்ச் செய்து முடிந்து போயிருக்குமே?" என்று கேட்டான்.

சுசிலன் சிரித்துக்கொண்டு சொன்னான்: "இந்த சொற்ப அவகாசத்துக்குள் எவ்வளவு ஆகக் கூடுமோ, அவ்வளவும் செய்து முடித்திருக்கிறேன்."

நரேசன்—"சுசிலா, இப்போதைக்கு இந்த சாமர்த்தியத்தை யெல்லாம் ஒரு பக்கமாய்க் கட்டிவை. சொற்ப அவகாசமென்ற சாக்குச் சொல்லி பூபேந்திரனையும் ஏய்த்து விடலாம்! எனக்கும் பூரி, போளி, லாடு, பாயஸங்களைப் பூஜ்ஜியம் பண்ணிவிடலாமென்று நினைத்தாயானால், அது சாயாது. நான் இப்போதே சொல்லி வைக்கிறேன். இல்லையானால், பிற்பாடு நமக்குள் இது விபரீதமாய் முடியும்."

சுசிலன் சிரித்துக்கொண்டே சொன்னான்: "இதைப் பற்றி நீ சிந்திக்க வேண்டியதில்லை. உன் பூரி லாடுகளுக்கு ஒரு மோசமும் வராது."

இப்படிச் சிறிது நேரம் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்து விட்டு, நரேசன் பூபேந்திரனை நோக்கி, "அண்ணா, இது ஒரே நாளைக்



கலியாணமென்று உனக்குத் தெரிந்தே இருக்கிறது. கலியாணம், நலங்கு, பாட்டுக் கச்சேரி, ஊஞ்சல், ஊர் கோலம் எல்லாம் நாளைக்கே ஆகவேண்டும். பாட்டுக் கச்சேரிக்கும் ஊர் கோலத்துக்கும் வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் இப்போது முதற்கொண்டே செய்து தயாராய் வைத்துக் கொள்ளவேண்டும். பாட்டுக் கச்சேரிக்கு முதல் தரமான பாடகர்களை வரவழைக்க வேண்டும். ஊர்கோலத்துக்கு ஏராளமான வாஷிங்டன் லைட்டுகள் 'ஆர்டர்' பண்ண வேண்டும். பாண வேடிக்கை கண் கொள்ளாக் காட்சியாயிருக்கும்படி ஏற்பாடு பண்ண வேண்டும். நல்ல வேளையாய் நாம் சீர்திருத்த அபிமானிகளாதலால், சதிர்க் கச்சேரி வைக்க வேண்டிய சிரமம் ஒழிந்தது. ஆனால் கல்கத்தாவில் உனக்குப் பரிசயமாயுள்ளவர்களை யெல்லாம் முகூர்த்தத்துக்கும் ஸங்கீதக் கச்சேரிக்கும் அழைக்கவேண்டும்."

பூபேந்திரன் சிரித்துக்கொண்டு சொன்னான்: "இதை யெல்லாம் என்னோடு ஏன் சொல்லவேண்டும்? இன்று முழுதும் ஒழிந்தே இருக்கிறது. செய்ய வேண்டியதை யெல்லாம் செய்து முடிக்க வேண்டியது உன் பொறுப்பு. இதிலிருந்து நீ தப்பித்துக்கொள்ள முடியாது"

நரேசன் தலையைச் சொறிந்துகொண்டே புன்னகை செய்து, "எனக்கு ஒரு தரம் டல்டாங்காவுக்குப் போய்வரவேண்டியிருக்கிறது" என்று மெதுவாய்ச் சொன்னான்.

பூபேந்திரன் சிரித்துக்கொண்டு சொன்னான்: "மாமனார் அகத்துக்குப் போகவேண்டுமாக்கும்! சுசில பாபு, இந்த அநியாயத்தைப் பாரும்! இங்கே வந்து இன்னம் அரை நாழிகை கூட ஆகவில்லை. இதற்குள்ளே மாமனாரகத்து ஜபம் பண்ண ஆரம்பித்துவிட்டார்.

"நரேசா, இச் சமயம் மாமனாரகத்துக்கும் போகிறதை நிறுத்திக்கொள்ளு. வருஷத்தில் பன்னிரண்டு மாசமும் மாமனாரகத்திலேயே இருக்கிறாய். அப்படியிருந்தும் உன் வயிறு நிறையவில்லை! அதிசயக்கான்! எப்படியானாலும் இன்றைக்கு உன்னை இங்கிருந்து அசையவும் விடமாட்டேன்."

நரேசன் கூறினான்: "சரி, உன் இஷ்டம் போலவே ஆகட்டும். இந்த சமயம் உன் பிடியில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். தப்பித்துக்கொள்ள ஒரு வழியும் காணோம். 'பரோபகாரம் பண்ணினாலொழிய தனக்கு உபகாரம் எதிர்பார்க்க முடியாது' என்கிற நீதி சாஸ்திர உபதேசமும் இப்போது என் நினைவுக்கு வருகிறது."

இப்படி சம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில் பண்டித மஹேசசந்திர ஸ்மிருதிரத்நமும் பூபேந்திரன் வம்சத்தைச் சேர்ந்த ஒரு பெரியவரும் வந்து சேர்ந்தார்கள்.

நரேசன் அவர்களைப் பார்த்தவுடனே "இதோ ஸ்மிருதிரத்ந மஹாசயரும் ராய மஹாசயரும் கூட வந்துவிட்டார்கள். வழியில் ஒன்றும் உங்களுக்குக் கஷ்டமில்லையே?"

ஸ்ம்ருதிரத்ந மஹாசயர் சொன்னார்: "அப்படி விசேஷமாய் ஒன்றும் உண்டாகவில்லை."

நரேசன் ஒரு பரிசாரகனைக் கூப்பிட்டு, "இவர்களுக்குக் கை கால் அலம்பிக்கொள்ள ஜலம் கொடுத்து, ஸ்நானத்துக்கு வெந்நீர் எடுத்து வை" என்று திட்டம் பண்ணினான்.

"இன்றைக்கு நாங்கள் கங்காஸ்நானம் பண்ணப்போகிறோம். ஆகையால் எங்கள் ஸ்நானத்துக்காக இங்கே ஏற்பாடு பண்ணவேண்டிய அவசியமில்லை" என்று ஸ்ம்ருதிரத்ந மஹாசயரும் ராய மஹாசயரும் சொன்னார்கள்.

நரேசன், "சரி, உங்கள் இஷ்டம்போலே கங்காஸ்நானமே பண்ணிவிட்டு வாருங்கள்" என்றான்.

பூபேந்திரன் ஏதோ காரியமாய் அங்கிருந்தெழுந்து இன்னொரு அறைக்குப் போய் விடவே, நரேசன் கபிலனை ஏகாந்தமாய் அழைத்துக் கொண்டுபோய்ச் சொல்லலானான்: "கபிலா, நான் என்னென்ன தந்திரமெல்லாம் பண்ணி இந்த யதாநுபாவனை இங்கே அழைத்துக் கொண்டு வந்தேனென்பது அதன் சாமானிய விவரம் என் கடிதங்கள் மூலமாய் நீ தெரிந்து கொண்டிருப்பாய். அதை விஸ்தாரமாய் இன்னொரு சமயம் எப்போதாவது உனக்குச் சொல்லுகிறேன். அதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க இப்போது அவகாசமில்லை. பூபேந்திரநாதன் ஏதோ காரியமாய் கல்கத்தாவுக்குப் போகிறான் என்று இவ்வளவு மட்டுமே இந்த விஷயத்தில் இவனுக்குத் தெரியும். இங்கே பிரதிமையின் விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்திருக்கிற சங்கதி இதுவரையில் அவருக்குத் தெரியாது. பூபேந்திரன், நான், ஸ்மிருதிரத்னம், ராய மஹாசயர் இந்த நாலு பேருக்கும் தவிர வேறொருவருக்கும் இது தெரியாது. பூபேந்திரனோடு கூட நரேசனும் ஸ்மிருதிரத்னமும், ராய மஹாசயரும் போயிருக்கிறார்களென்று இவனுக்குத் தெரியாதிருந்தபோதிலும், அவன் மகா துஷ்டன், அசாத்தியன். பூபேந்திரனைப் பற்றிய ஒவ்வொரு சங்கதியும் அவன் தெரிந்து வைத்திருக்கிறான். ஆகையால் அவன் எங்கள் பின்னாலேயே ஒற்றர் யாரையாவது அனுப்பியிருந்தாலும் ஆச்சரியமில்லை. இன்றைக்கு நாம் விவாக சங்கதியை ரகஸ்யமாய் வைத்திருக்கலாம். நாளைக்கு நிச்சயமாய் அது எவ்விதத்திலும் ரகஸ்யமாய் இருக்கமுடியாது; ஆனால் நாளைக்கு ஒரு பயமும் இராது. நாளைக்குக் கலியாணப்பெண் வீட்டுக்குச் சீர்வரிசைகளெல்லாம் சிறப்பாய் வந்து சேரும். இந்தக் கலியாணம் சந்தடியில்லாமல் கன்னத்தனமாய் நடந்துவிட வேண்டுமென்பது பூபேந்திரனுடைய கருத்து. ஆனால் அப்படிச் செய்வது சரியாகாதென்று எனக்குத் தோற்றியது. கலியாணம் மங்கள வாத்திய கோஷத்தினிடையே நடப்பதுதான் பிரதிமைக்குச் சிரேயஸ்கரம். இங்கே பூபேந்திரனுக்கு எத்தனை மித்திரர், பந்துக்கள், பரிசயமுள்ளவர் இருக்கிறார்களோ அத்தனை பேருக்கும் இன்றைக்கே முகூர்த்தப் பத்திரிகை அச்சிட்டனுப்பவேண்டும். நாளை அவர்களெல்லோரையும் கூட்டமாக இங்கே அழைத்து வரவேண்டும். அதற்காகவே பாண்டு வாத்தியம் ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கிறேன். நீயும் போய் உங்கள் பந்துமித்திரர்களை அழைத்துவிட்டு வா. ஆம், நல்ல வேளையாய் ஞாபகத்துக்கு வந்தது. இந்த முகூர்த்தத்தை முன்னிட்டுக் கல்கத்தாவிலுள்ள வித்தியா வாகிசர் முதலிய நாலைந்து பிரதான பண்டிதர்களை அழைக்க மறந்துபோகக்கூடாது. அழைக்கும்போது அவர்களுடைய வீடுகளிலே நெய், சக்கரை, புஷ்பம் முதலிய லாமக்கிரியைகளோடு விலையுயர்ந்த பாத்திரங்களும், சுமங்கலிகளுக்காகச் சிவப்புக்கரைச் சேலை, வாசனைத் தைலம், மஞ்சள், குங்குமம், கண்ணாடி, சீப்பு முதலிய மங்களத் திரவியங்களும் கொடுக்கும்படி அனுப்பவேண்டும். வித்தியா வாகிசமஹாசயரோடு கூடவே நீயும் அவர்களை அழைப்பதற்காகப் போய் முகூர்த்தப் பந்தலில் அவசியம் வந்திருக்கும்படி பிரார்த்திக்க வேண்டும். நாளைக் காலையிலேயே ஊருக்கு வழங்கவேண்டிய திரவியங்களை அனுப்பி, அழைக்க வேண்டியவர்களை அழைத்தாக வேண்டும். இதில் தவறுதல் நேரக்கூடாது. எனக்கு இங்கே நடக்க வேண்டிய காரியங்களுக்கெல்லாம் தக்க ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. மேலும் பூபேந்திரனைவிட்டு எங்கும் அசைவதற்கில்லை. பூபேந்திரனே என்னை 'படல் டாங்கா'வுக்குப் போய் வரும்படி சொன்னாலும், நான் போகமாட்டேன். இவான்



விஷயத்தில் எனக்கு மிகப் பயமாயிருக்கிறது. அவன் எந்த சமயத்தில் என்ன செய்வானோ தெரியாது. நீ இப்பொழுதே புறப்பட்டுப்போ, தாமசம் பண்ணாதே. நான் சொன்னதையெல்லாம் பூராவாகச் செய்தாகவேண்டும்." இப்படிப் பேசிவிட்டு நரேசன் சற்று புன்னகையோடே "படல் டாங்காவுக் கென்னவோ என்னால் போக முடியவில்லை; ஆனால் நீயே நான் கல்கத்தாவுக்கு வந்திருக்கும் செய்தியை உன் பக்கத்து வீட்டாருக்குத் தெரிவிக்க மறந்துபோகக்கூடாது" என்றான்.

கபில குமாரன் சிரித்துக்கொண்டு சொன்னான்—"அப்படிப்பட்ட பெரும் பிழையை நான் ஒருபோதும் செய்யமாட்டேனென்று நீ நம்பி யிருக்கலாம்."

## பத்தாம் அத்தியாயம்.

## இரண்டு தோழிகள்.

மனோரமைக்கு இரண்டு மூன்று நாளாகத் தன் கணவனிடத்திலிருந்து ஒரு கடிதமும் வாராமையால், அவள் இன்று கணவனது க்ஷேம சமாசாரம் தெரிந்துகொள்ள மிகவும் கவலைப் பட்டுக்கொண்டிருந்தாள். பிரதிமை விஷயத்தில் இராஜ குமாரனது மனோபாவம் இப்பொழுது அவளுக்குச் சில நாளாகத் தெரிய வாராமலிருந்தபடியால், அவளுடைய கவலை இன்னம் அதிகமாயிற்று. அவள் இன்றைக் காலைத் தபாலில் கபில பாபுவுக்கு நரேசனிடமிருந்து ஏதாவது கடிதம் வந்திராதாவென்று தெரிந்துகொண்டு போவதற்காகப் பிரதிமையின் அறைக்கு வந்தாள்.

அப்பொழுது பிரதிமை ஸ்நானம் செய்துவிட்டு ஏகாக்கிரசித்தத்துடன் ஒரு புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். அவளது பவித்திரமான முகமண்டலத்தையும் திவ்விய சௌந்தரியத்தையும் கண்டு மனோரமை வியப்புற்றாள். பிரதிமை படித்துக்கொண்டிருப்பதைத் தடுக்க அவளுக்கு இஷ்டமில்லை. என்றாலும் அவளுக்குத் தன்னையும் அறியாமல் தும்மல் வந்துவிட்டபடியால், பிரதிமையின் படிப்புக்குத் தடை நேர்ந்தது.

பிரதிமை திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கவும் தன் தோழி நின்றிருப்பதைக் கண்டு சிறிது வெட்கினவளாய், "சகி, எத்தனை நேரமாய் நீ இங்கே பேசாமல் நின்று கொண்டிருக்கிறாய்? என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா?" என்று கேட்டாள்.

மனோரமை சிரித்துக் கொண்டே சொன்னாள்—"சகி, நான் வந்து அதிக நேரம் ஆகவில்லை. இப்போதுதான் வந்தேன். நீ படித்துக் கொண்டிருந்தபடியால் உன்னைத் தொந்தரவு பண்ண எனக்கு இஷ்டமில்லை. உன் தமையன் அகத்தில் இருக்கிறாரா?"

பிரதிமை:—"இல்லை, அவர் இன்றைக்குப் பொழுது விடிகிறதற்கு முன்னமே எங்கேயோ புறப்பட்டுப் போனார், நான் ஸ்நானம் பண்ணி விட்டுத் தேநீர் போடப் போகையில், ராமசந்திரன் வந்து, பாபு விடியற் காலமே எழுந்து எங்கேயோ போனாரென்று சொன்னான்."

மனோரமை: "இன்றைக்குக் காலைத் தபாலில் உன் தமையன் பேருக்கு ஏதாவது கடிதம் வந்ததா?"

"எனக்குத் தெரியாதே. நீ இங்கே உட்கார்ந்து கொண்டிரு. நான் என் தமையன் அறைக்குப் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று சொல்லிப் பிரதிமை கபிலன் அறைக்குள் சென்றாள்.

அவள் சற்று நேரத்துக் கெல்லாம் திரும்பி வந்து, "இல்லையே, அண்ணாவின் மேஜையில் ஒரு கடிதமும் காணோம். தபால் இன்னும் வரவில்லையாக்கும்" என்றாள்.

மனோரமை: "நன்றாய் இருக்கிறது. தபால் வந்து எத்தனையோ நேரமாயிற்றே. தபாற்காரன் காலைத் தபாலை அப்போதே பட்டுவாடா செய்தாய் விட்டதே" என்று சொல்லி விட்டுச் சிறிது நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

பிரதிபை: "சகி, அண்ணா பேருக்குக் கடிதம் வந்திருக்கிறதா இல்லையா என்று இன்றைக்கு ஏன் கேட்கிறாய்?"

மனோரமை சிரித்துக் கொண்டே சொன்னாள்: "இதற்குக் காரணம் நான் சொல்லாமலே நீ தெரிந்து கொள்ள முடியாதா? சரி, சொல்லுகிறேன் கேள். உன் அத்திம்பேரிடமிருந்து கொஞ்ச நாளாகக் கடிதம் வரவில்லை. ஆகவே அவருடைய யோக க்ஷேமத்தைப் பற்றிக் கவலையாயிருக்கிறது. கபில பாபுக்கு ஏதாவது கடிதம் வந்திருந்தால் பார்த்து விட்டு வரலாமென்று நினைத்தேன்."

பிரதிபை மனோரமையின் பொருட்டு மிகவும் வருந்தினாள். அப்பொழுது கீழே கபில குமாரனுடைய குரல் கேட்டது. அவன் செவிலித் தாயினிடம், "அம்மா, கொஞ்சம் மேலே புறப்பட்டு வா. ரொம்ப அவசரமான வேலை இருக்கிறது" என்று சொல்லி விட்டுத் தன் அறைக்குள் வந்தான்.

பிரதிபை மனோரமையினிடம் சொன்னாள்: "சரி, இதோ அண்ணா வந்து விட்டார். சற்றே இரு. நான் இப்போதே அவரைப்போய்க் கேட்டு விட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டுத் தமையன் அறைக்குச் சென்று "அண்ணா, இன்றைக்கு நரேச பாபுவிடத்திலிருந்து உனக்கு ஏதாவது கடிதம் வந்ததா?" என்று கேட்டாள்.

கபிலன் சிறிது ஆச்சரியமடைந்து பிரதிபையின் முகத்தைப் பார்த்து "ஏன், நரேசனுடைய கடிதத்தைப் பற்றி ஏன் கேட்கிறாய்?" என்றான்.

பிரதிபை சற்று வெட்கினவளாய்ச் சொன்னாள்: "இல்லை அண்ணா நான் கேட்கவில்லை,—என் தோழி கேட்கிறாள்."

கபிலன் சிரித்துக்கொண்டு சொன்னான்: "சரி, உன் தோழி கேட்கிறாளா? அப்படியானால் சொல்லுகிறேன் கேள். நரேசனுடைய கடிதமேன்? இன்று காலமே அவனே நேராகக் கல்கத்தாவுக்கு வந்திருக்கிறான். அவன் பூபேந்திரனுடைய ராஜநிவாஸத்தில் தங்கி யிருக்கிறான். பூபேந்திரனும் வந்திருக்கிறான். செவிலியம்மா, செவிலியம்மா, நீ என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்? சீக்கிரமாய் மேலே வர மாட்டாயா?"

செவிலித்தாய் பரபரப்புடன் கபிலனுடைய அறைக்குள் வந்து, "ஏன் எதற்குக் கூப்பிட்டாய்? என்ன காரியம்?" என்றாள்.

கபிலன் பிரதிபையை அங்கிருந்து போகும்படி சைகை செய்துவிட்டு, "உனக்குக் காரியம் சொல்ல வேண்டுமா? அப்படியானால், நாளைக்குப் பிரதிபைக்குக் கலியாணம். கலியாணத்துக்கு வேண்டியதெல்லாம் தயாராக வேண்டும்!" என்றான்.

கபிலனுடைய வார்த்தையைக் கேட்டதும் செவிலித்தாய் திடீரென்று இடி இடிப்பதைக் கேட்டாற்போல் திடுக்கிட்டுப் பிரமித்துச் சற்றுநேரம் வரையில் ஒன்றும் பேசாமல் ஸ்தம்பித்திருந்தாள். பிறகு அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்: "நாளைக்குப் பிரதிபைக்குக் கலியாணமா? நீ என்ன சொல்லுகிறாய், எனக்கு விளங்கவில்லையே!"

கபிலன் சிரித்துக் கொண்டே சற்று உரத்த குரலில் சொன்னான்: "நான் சொல்லுகிறது உன் காதில் விழவில்லையா? நாளைக்குத்தான் பிரதிபைக்குக் கலியாணம். பூபேந்திரன் வந்து



விட்டான்; கலியாணப் பிள்ளையைச் சேர்ந்தவர்களெல்லாம் வந்து விட்டார்கள். அவர்கள் சம்பந்தமான காரியங்களெல்லாம் முடிந்து சித்தமாயிருக்கின்றன. விவாகம் நாளைக்கே நடக்கவேண்டும். இப்போது எல்லாம் சரியாய்க் காதில் விழுந்ததா?"

இதைக் கேட்கவும் கிழவியான செவிலித்தாயின் கண்களிலிருந்து ஆநந்த பாஷ்பம் தாரை தாரையாய்ப் பெருகிற்று. கபிலன் கண்களிலும் நீர் ததும்பியது. ஆயினும் அவன் தன் ஆநந்தமேலீட்டை அடக்கிக்கொண்டு, "அம்மா, இது அழுவதற்குச் சமயமன்று. இப்போது நீ வேலைக்கு இழுத்துக் கட்டிக்கொண்டு தயாராயிருக்கவேண்டும். இந்த சமயம் ஒன்றல்ல, இரண்டல்ல, ஓயாமற் செய்தாலும் வேலை இருந்து கொண்டேயிருக்கும்; மனோரமையையும் உனக்குச் சகாயமாய் வந்து வேலை செய்ய வேண்டிக்கொள். இந்த சமயத்தில் விசேஷமாய் அவாள் எல்லோருடைய உதவியும் நமக்கு வேண்டும்" என்று சொல்லி விட்டுச் செவிலித்தாயினிடம் மெல்ல மெல்ல வேறு பல செய்திகளும் சொன்னான். அப்பொழுது மற்றோர் அறையில் பிரதிபையும் மனோரமையும் கபிலன் வார்த்தைகளைக் கேட்டு முதலில் மிக வியப்புற்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். மனோரமையின் கண்களும் பிரதிபையின் கண்களும் தம்மிற் கலக்கவும், மனோரமையின் முகத்தாமரை ஆநந்தத்தால் அலர்ந்தது. அவள் மிக்க ஆர்வத்துடன் பிரதிபையைத் தன் இரு கரங்களாலும் தழுவி அன்புடன் முத்தமிட்டாள். பிரதிபை நாணத்தினால் கூச்சமுற்றுக் கீழ் நோக்கிப் பார்த்த வண்ணமாயிருந்தாள். மனோரமை மொழிந்தாள்: "இத்தனை நாள் கழித்து இன்றைக்கு என் எண்ணம் நிறைவேறிற்று. சகி, நாளைக்கு உன் கலியாணம் நடக்கப்போகிறதென்று நமக்கு ஸ்வப்நத்திலாவது தெரியுமா? சகி, சகி, என் பிராண சகி, நான் இன்றைக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது யார் முகத்தில் விழித்தேன்! பிரதிபா, இவ்வளவு நல்ல சுப விசேஷம் நாம் எப்போதும் கேட்டதில்லை. சகி, இன்றைக்கு என் ஆநந்தத்துக்கு அளவேயில்லை. சந்தோஷம் பொறுக்க மாட்டாமல் மார்பு வெடித்துப்போம் போலிருக்கிறது." இப்படிப் பேசி மனோரமை ஆநந்தக் கண்ணீர் வடித்துப் பிரதிபையை மறுபடியும் இறுகத் தழுவிக்கொண்டாள்.

இவ்வளவில் செவிலித்தாய் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வந்து சேர்ந்தாள். சற்று நேரம் கழித்து அவள் மனம் சரியான நிலைக்கு வரவும், "ஸ்வாமி, பகவானே, என் மனோரதத்தை நிறைவேற்றுவாய்; நாளை இவ்விருவர் கைகளையும் ஒன்றாய்ச் சேர்த்து வைப்பாய். இதைப் பார்த்து விட்டு நான் சந்தோஷமாய் உன் திருவடிகளை அடைவேன்" என்றாள்.

பிரதிபை கீழே தலை குனிந்த வண்ணமாகவே நின்றிருந்தாள். அவள் மனோரமையையும் செவிலித்தாயையும் கண்ணெடுத்துப் பார்க்க முயன்றும் முடியவில்லை.

(தொடரும்)

## ஆலயந்தொழுவது சாலவும் நன்று.

(ஸ்ரீமதி செ ராசம்மாள்)

முற்காலத்தில் மகரிஷிகள் நிறைந்த ஞானங்கமழ்ந்த அறிஞர்கள் மலிந்த இப்பரத கண்டத்தை முத்தமிழ் வல்ல உத்தமர்களாய், சத்திய சீலர்களாய் அருளொழுகு மன்

யையே உடைமையாகப் பெற்று செங்கோல் வழுவாது ஆண்டு வந்த மன்னர்கள் ஆலய தரிசனஞ் செய்யப் புகுந்தால் எழ்மை நிலையுடையவராய்த் தான், தனது என்னும் அகங்காரத்தை யொழித்து ஆண்டான் அடிமை என்ற சம்பந்தத்தோடு ஆடம்பரமற்றவராய் சுவாமி தரிசனஞ் செய்து வருவது வழக்கம். நம் முன்னோர்களும் அரசனெப்படி குடிகளப்படி என்ற முதுமொழிக் கிணங்க அனைவரும் அப்படியே ஆலய வழிபாடு செய்து வந்தனர்.

நவநாகரிகப் பேய் பிடித்தலைக்கு மிக்காலத்தில் நம் முன்னோர்கள் நடந்து காட்டிய ஒழுக்க வழிகளை எல்லாம் விடுத்துக் காலத்திற்குத் தகுந்த கோலமாக ஆலயத்தினுட் புகும்போது ஆண்டானடிமையென்னு மறிவாற்றலில்லாதவர்களாய், அழகிய ஆடைகளாலும் நறுமணங்கமழும் பூக்களாலும் பரிமள வாசனைகளாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டு எம்பிரான் சந்நிதியை ஓர் நாடகசாலையாக எண்ணி நடப்பது அந்தோ பரிதாபம்! பரிதாபம்!

இவர்கள் சுவாமியின் அர்ச்சனைக்காக ஏதாவது சில பழம், வெற்றிலை பாக்கு முதலியவைகளைக் கொண்டுபோனால், பட்டுக் குட்டை வைத்திருக்கும் தங்கள் கைக்கு பங்கம் வந்து விடுமென எண்ணியோ அன்றி அநாகரிகமென எண்ணியோ வேலைக்காரரையே இதற்கும் நியமிக்கின்றனர். நம் முன்னோர்கள் சுவாமி தரிசனஞ் செய்யப் புகுந்தால், படைத் தழித்துக் காக்க வல்ல பரம்பொருளைக் கண்களினாலே கண்டு நாத்தழும்பேறத் துதித்து உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்த பரவசங்கொண்டு நமஸ்காரஞ் செய்து வந்தனர். தற்காலத்திலோ சுவாமி தரிசனஞ் செய்வதென்னும் வாய்ப் பேச்சோடு ஏதோ இரண்டொரு முறை நமஸ்கரிக்கும் பொழுதும் தங்கள் ஆடையில் அழுக்குப் படிந்து விடுமோ எனனும் எண்ணமே மிகுதியாயிருக்கிறது. இன்று இருந்து நாளை இறக்குந் தொழிலுடைய மனிதர் புரியும் அநியாய ஆடம்பரத்தை என்னென்போம்! 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே' என்றும், 'பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே'* எனறும் பெரியோர் கூறியவைகளை அறிந்தும் அறியார்போல் நடப்பதே ஆச்சரியம். மேல் நாட்டு அநாகரிகம் நம் தேசத்தை விட்டகன்று பண்டைய நாளைப்போல் நாம் சேமமுற ஈசன் திருவருள் கிடைப்பது என்னாளோ!

ஆணவங்கள் போகாம னன்னெறியைக் காட்டி யெமை
யாளவந்த கோலங்கட் கன்பு வைப்ப தென்னாளோ.

சுபம்!

---

*மனையாளு மைந்தரும் வாழ்வுந் தன் வாசன் மட்டே
இனமான சுற்ற மயான மட்டே—வழிக்கேது துணை
தினையாமள வெள்ளள வாயினுமுன்பு செய்த தவம்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே.

# மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்த நாராயணய்யர்)

(305-ம் பக்கத் தொடர்ச்சி)

## இருபத்திரண்டாம் அத்தியாயம்.

இந்தியரின் கப்பல்கள்—ஜிபங்கு—கூப்ளே கான் ஜிபங்குவைப் பிடிக்கச் செய்த பிரயத்தனம்—அதன் முடிவு—ஜெர்சா சீனக்கடல்—கைனன் வளைகுடா—ஆனிபா—தோலமான்.



இனி நாம் இந்தியாவைப் பற்றிப் பிரஸ்தாபிப்போம். முதலில் அவர்களது கப்பல்களைப் பற்றிப்பேசுவோம். அவைகள் வியாபாரிக்குஒன்றுவிதம், இருபது அறைகளுள்ள ஒரு மேல்தட்டுடையனவாய் தேவதாரு மரத்தினுல் கட்டப்படுகின்றன. அவைகளுக்கு ஒரு நல்ல சுக்கானும் நான்கு பாய்மரங்களும் சமயம் போல் உயர்த்தவும் தாழ்த்தவுங் கூடிய வேறிரண்டு பாய்மரங்களுமுண்டு. இக்கப்பல்களினும் சற்று பெரிய கப்பல்களும் அவர்களிடமுண்டு. அவற்றில் பதின்மூன்று அறைகள் மாத்திரம் இருக்கும். ஆனால் அவை ஒன்றுக்குள்ளொன்றாக இழைக்கப்பட்ட இரட்டைப் பலகைகளினால் கட்டப்பட்டு, பழைய வடக் கயிறுகளிலிருந்து பிரிக்கப்பட்ட மஞ்சிகளினாலும் இருப்பாணிகளினாலும் பிணிக்கப்பட்டிருக்கும். அவைகள் எப்போதாயினும் திமிங்கிலத்தினால் அடிபட்டாவது, அல்லது பாறைகளின் மேல் மோதியாவது பிளவுண்டு, அப்பிளவின் வழியே ஜலமும் அவற்றின் உட்சென்றால் அந்த ஜலம் பிளவுபட்ட பாகத்தை விட்டு அப்புறம் செல்வதில்லை. ஆகவே அவர்கள் உடைந்துபோன பாகத்தை உடனே கண்டுபிடித்து துவாரத்தை யடைத்து விடுகின்றனர். அவர்களது தேசத்தில் தார் கிடைப்பதில்லை யாதலால் அவர்கள் தங்களது கப்பல்களுக்குத் தார் அடிப்பதில்லை. அதற்கு பதிலாக அவர்கள் சுண்ணாம்பையும் சணலையும் நன்றாக இடித்து, ஒரு வகை மர எண்ணெயில் குழைத்து அக்குழம்பைக் கப்பல்களின் மேல் பூசுவார்கள். இந்தப் பூச்சு தாரினும் சுண்ணாம்பினும் அதிகக் கெட்டியாக விருக்கின்றது.

பெரிய கப்பல்களில் முன்னூறு மாலுமிகள் இருப்பார்கள். சிறிய கப்பல்களில் அவைதனின் பெருமனுக்கும், பளுவான ஐயாயிரம் அல்லது ஆருயிரம் மிளகு மூட்டைகளைச் சுமந்து செல்லும் சக்திக்கும் தக்கபடி இருநூறு அல்லது நூற்றைம்பது மாலுமிகள் இருப்பார்கள்.

முற்காலத்தில் அவர்களது கப்பல்கள் இன்னும் பெரியவையாயிருந்தன. நாளடைவில் நாடுகளும் தீவுகளும் கடலுக்கிரையாகி, கடலும் ஆழங்குறைந்துபோய் விட்டதினால், அவர்கள் இப்போது சிறு கப்பல்களே கட்டி வருகின்றனர். இக்கப்பல்களை அவர்கள் துடுப்புக்கொண்டு ஓட்டுவார்கள். ஒவ்வொரு துடுப்பையும் தள்ளுவதற்கு நான்கு ஆட்கள் இருப்பார்கள்.

பெரிய கப்பல்களுடன் ஆயிரம் மூட்டை மிளகையும், அறுபது அல்லது அதற்கு மேற்பட்ட மாலுமிகளையும் கொண்டு செல்லக் கூடிய இரண்டு அல்லது மூன்று கப்பல்களும் செல்லும். இச்சிறு கப்பல்கள் பெரிய கப்பல்களைக் கரை சேர்க்கவும் நீரில் இறக்கவும் உதவுகின்றன.

மீன் பிடிக்கவும் வேறு சந்தர்ப்பங்களில் உதவவும் பெரிய கப்பல்களின் இரு பக்கங்களிலும் பத்துச் சிறு படகுகள் கட்டப்பட்டிருக்கும். அவற்றைக் கப்பற்காரர்கள் தங்களுக்கு இஷ்டம் வந்தபொழுது தண்ணீரில் இறக்குவார்கள்.

தங்களது கப்பல்கள் வலிவு குறையாமல் இருக்கு நிமித்தம் அவர்கள் அவைகளுக்கு ஒரு வருஷம் பழகியபின் மரச் சட்டங்களை யடித்துப் போர்த்துவார்கள். அப்போது அவைகளுக்கு மூன்று சட்டங்களாகும். இவ்வாறு சட்டத்துக்கு மேல் சட்டமடித்து ஆறு சட்டங்கள் ஆகும் வரை அக்கப்பல்களை உபயோகித்துப் பின் அவர்கள் அவற்றை உடைத்து விடுவார்கள்.

இனி இந்தியாவைப் பற்றிப் பேசுவோம். முதலாவது—அதைச் சேர்ந்த சிறு தீவுகளின் விருத்தாந்தங்களாவன :—

மங்கியின் கரையிலிருந்து ஆயிரத்தைந்நூறு மைல்தூரத்துக் கப்பால் ஜிபங்கு அல்லது ஜப்பான் என்னும் ஒரு பெரிய தீவு இருக்கின்றது. அங்குள்ள ஜனங்கள் வெண்ணிறத்தவர்; சாந்தமான ஸ்வபாவமுடையவர்கள் ; விக்கிராராதனைக்காரர்கள். அவர்களுக்கு ஒரு அரசனுண்டு.

அங்கு தங்கம் அதி விசேஷமாகக் கிடைக்கின்றது. அத்தீவின் அரசன் அத்தங்கத்தைப் புற நாடுகளுக்குச் செல்ல விடுவதில்லையாதலால் அங்கு வியாபாரிகள் விசேஷமாகப் போவதில்லை.

அங்கு வியாபாரஞ்செய்து வந்தவர்கள் அத்தீவின் அரசனது அரண்மனைக்கு, நமது கோவில்களுக்கு ஈயத் தகடு போர்த்தப்பட்டிருப்பதுபோல், தங்கத் தகடு போர்த்தப்பட்டிருக்கிறதென்றும், அதன் ஜன்னல்களுக்கும் தரைக்குங் கூட தங்கத் தகடு அடிக்கப்பட்டிருக்கிறதென்றுஞ் சொல்லுகிறார்கள். அங்கு முத்தும் விசேஷமாக உண்டாகின்றது.

இவ்வளவு செல்வங்களுள்ள அத்தீவைப் பிடிக்க வேண்டுமென்று நினைத்துக் குப்ளேகான் 1264-ம் வருஷத்தில் தனது பிரபுக்களில் இருவராகிய அப்பகா, வென்லான்கின், என்பவர்களை ஒரு பெரிய கப்பற் படையுடன் அனுப்பினார். அவர்கள் ஜெட்டுமிலிருந்தும் குயின்ஸெயிலிருந்தும் புறப்பட்டு ஜப்பானுக்கு வந்து, கருமத்திற் கண்ணுயிராமல், தாங்களே ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டு கடைசியாய் ஜப்பானிலுள்ள பட்டணங்களில் ஒன்றை மாத்திரம் பிடித்து, அங்கிருந்த ஜனங்களில் எட்டுப் பெயர் தவிர மற்றையோரைக் கத்திக் கிரையாக்கினர். அந்த எட்டுப் பெயர்களும் மாயா சக்தியுள்ள ஒரு ரத்தினத்தை ரகஸ்யமாகத் தங்களது வலக் கையில் வைத்துத் தைத்துக்கொண்டிருந்ததினால் அவர்களுக்கு இவர்களது கத்தியினால் காயமுண்டாகவில்லை. அதை யறிந்த பிரபுக்கள் அவர்களை மர வுலக்கையினால் புடைத்துக் கொல்வித்தனர்.

ஒரு நாள் வட திசையினின்றும் பலமாக அடித்த காற்றினால் இவர்களது கப்பல்களிற் சில சமுத்திரத்தில் மூழ்கிப் போயின. மற்றுஞ் சில நெடுந் தூரத்திற்கு அடித்துக்கொண்டுபோகப்பட்டன. மீந்தவையில் மேற் குறித்த இரண்டு பிரபுக்களும் வேறு சில பெரிய மனிதர்களும் ஏறித் தங்களது சொந்த தேசத்திற்குத் திரும்பிச் சென்றனர்.

உடைந்துபோன பல கப்பல்களிலுமிருந்து சிலர் மாத்திரம்—முப்பதினாயிரம் பெயர்!—அக்கப்பல்களைச் சேர்ந்த பலகைகளின் உதவியைக் கொண்டு நீந்தி ஜிபங்குவுக்கு நான்கு மைலுக்கப்பாலிருந்த நிர்மானுஷ்யமான ஒரு தீவை யடைந்தனர். அவர்களது கையில் உண்ணச் சோறு பிடிக்கக் கத்தியா ஒன்றும் இருக்கவில்லை. புயல் நின்றபின் ஜிபங்குக்காரர் அவர்களைத் தாக்குமாறு ஒரு சேனையுடனும் அனேகம் கப்பல்களுடனுஞ் சென்று, ஆங்காங்கு திகைத்து நின்ற தார்த்தார்களைப் பிடிக்கும்பொருட்டுச் சிறிதும் ஒழுங்கில்லாமல் மனம் போனபடி அவர்களைத் தொடர்ந்தனர். அவர்களும் இத்தீவின் மத்திம பாகம் மேடாக உயர்ந்திருப்பதை யறிந்து, அந்த மேட்டைச் சுற்றி யோடி, ஜப்பானியருக்குத் தெரியாமல் காவலில்லாமலும் கொடி பறந்துகொண்டிருந்த அவர்களது கப்பல்களிலேறி ஜிபங்குவின் பிரதான நகரத்திற்குச் சென்றனர். அப்போது அங்கு ஸ்திரீகளே அதிகமாகவும் ஆண்மக்கள்



மிகச் சிலராகவும் இருந்தனர். அவர்கள் இவர்களை விரோதிகள் என்று சந்தேகிக்காமல் இவ்வூரில் இறங்க இடந்தந்தனர். இதை யறிந்த ஜிபங்கு மகாராஜன் அந்நகரத்தை ஆறு மாத காலம் முற்றுகை யிட்டார். அதுவரை தங்களது உதவிக்கு ஒருவரும் வாராமற்போனது கண்டு தார்த்தார்கள் அவ்வரசனுக்குக் கீழ்ப்படிந்தனர்.

தமது தளகர்த்தர்கள் இவ்விஷயத்தில் தவறியதற்காக குப்ளேகான் அவர்களில் ஒருவனைச் சிரச்சேதம் செய்து மற்றவனை ஜெர்காவென்னும் ஒரு நிர்மானுஷ்யமான தீவிற்கு அனுப்பிவிட்டார்.

ஜெர்காத் தீவுதான் சீன தேசக் குற்றவாளிகளின் கொலைக்களம். கொலையாளிகள் குற்றவாளிகளின் கைகளைக்கட்டி, அவர்களைப் புதிதாக உரித்த எருமைத் தோலில் சுற்றித் தைத்து விடுவார்கள். அத்தோல் உலர உலரக் குறுகி உள்ளே யிருக்கும் குற்றவாளிகளைப் பலவிதமாக இம்சித்துக் கடைசியில் அவர்களது உயிரை வாங்கிவிடும்.

இத்தீவிலும் (ஜப்பானிலும்) இதையடுத்தாற்போலிருக்கும் தீவுகளிலும் மாடு, பன்றிகளைப்போலவும் நாய்களைப்போல் தலையுள்ளவும் இன்னும் அதிக கோரமுமான விக்கிரகங்கள் இருக்கின்றன. உதாரணமாக சில விக்கிரகங்களுக்குத் தோளில் தலையிருக்கும். வேறு சில நான்கு, பத்து, அல்லது நூறு கைகளுடையனவா யிருக்கும். இவைகளுக்குச் சக்தி அதிகமென்று நம்பி இங்குள்ள ஜனங்கள் இவைகளை விசேஷமாக வழிபடுகின்றனர். இது அவர்கள் பாம்பரையாகச் செய்து வரும் வழக்கமாம்.

அவர்கள் ஓரோர் சமயங்களில் தங்களது விரோதிகளைக் கொன்று அவர்களை "பக்ஷணம்" தின்பதுபோல் வெகு குதூகலத்துடன் தின்று விடுவார்களாம்.

இத்தீவைச் சுற்றி யிருக்கும் கடலுக்குச் சீனக் கடல் அல்லது மங்கி தேசத்திற்கெதிரில் இருக்கும் கடல் என்று பெயர். இத்தீவின் பாஷையில் மங்கி யென்னும் பதத்திற்குச் சீனவென்று பொருள். அந்தக் கடல் மிகப் பெரியது. அங்கு யாத்திரை செய்யுங் கப்பற்காரர்கள் அக்கடலில் ஏழாயிரத்து நானூற்று நாற்பது தீவுகள் இருப்பதாகவும், அவைகளில் பெரும்பான்மையானவற்றில் ஜனங்கள் வசிப்பதாகவும் சொல்லுகின்றனர். அத்தீவுகளில் வாசனை மரங்களே வளருகின்றனவென்றும், வேறு மரங்கள் இல்லை யென்றும், வாசனை மரங்களிலும், அகில், கருமிளகு, வெண் மிளகு ஆகிய இவைகளே விசேஷமென்றும் அவர்கள் சொல்லுகின்றனர்.

ஜெட்டுமிலிருந்து புறப்படும் கப்பல்கள் திரும்பி வர ஒரு வருஷமாகின்றது. அவைகள் காற்றோட்டத்தை யனுசரித்துக் குளிர் காலத்திற் புறப்பட்டுச் சென்று வெயிற் காலத்தில் திரும்பி வருகின்றன.

இந்தப் பிரதேசம் (சீனக் கடலிலுள்ள தீவுகள்) இந்தியாவிற்கு வெகு தூரத்திலிருக்கின்றன; அது குப்ளேகானுக்குச் சேர்ந்ததுமல்ல, நான் அங்கு சென்றதுமில்லை. ஆதலால் நாம் அதை விட்டு விட்டு ஜெட்டுமுக்குத் திரும்புவோம்.

ஜெட்டுமிலிருந்து ஆயிரத்தைந்நூறு மைல் தூரம் தென்மேற்காக யாத்திரை செய்த பின் இரண்டு மாத காலம் வடக்கு நோக்கிச் சென்று கைனன் என்னும் வளைகுடாவைக் கடந்து வந்தால், மங்கியின் தென் கிழக்குக் கரையோர மிருக்கும் ஆனியா, தோலமான் முதலிய முன் சொல்லிய மாகாணங்களைச் சேரலாம்.

அவ்வளைகுடாவில் ஒருவாறு மனித சஞ்சாரமுள்ள தீவுகள் அனேகம் இருக்கின்றன. அவற்றில் ஏராளமான தங்கம் அகப்படுகின்றது. அங்குள்ள ஜனங்கள் வியாபாரிகள்.

(தொடரும்)

# பாலிகா நாடக மஞ்சரி-மலர் 1.

## சுகன்யை சரித்திரம்.

(ஸ்ரீமதி குகப்ரியை)

நாடக பாத்திரங்கள்.

சர்யாதி மன்னன்—சுராஷ்டிர அரசன்.
கமலினி—அவன் மனைவி.
சுகன்யை—அவன் புதல்வி.
சுபுத்தி—மந்திரி.
ச்யவனர்—ஒரு ரிஷி.
அசுவினி தேவர்கள்—சூரியன் மக்கள் (தேவ வைத்தியர்கள்)
கண்மணி, தேவகி—சுகன்யையின் தோழிகள்.
விதூஷகன், சாஸ்திரிகள், சன்னியாசி, இரங்கம், லக்ஷ்மி முதலியவர்கள்.

கதை நிகழுமிடம்—நகரத்திலும் அதை அடுத்த காட்டிலும்.

### முதல் அங்கம்

### முதற் காட்சி

இடம்—அரண்மனை நந்தவனம்.
பாத்திரங்கள்—அரசனும் அமைச்சனும்.

அரசன்.—இவ்வளவு பெரிய ராஜ்யத்துக்கு அரசனாயிருந்தும் என் மனம் கொஞ்சங்கூட நிம்மதியா யில்லையே!

சுபு.—ஆம், அரசே. இவ்வளவு செல்வத்தையும் சுகத்தையும் கொடுத்த கடவுள் ஒரு குழந்தையைக் கொடுக்காமற்போனது ஆச்சரியந்தான். இருந்தாலும் எங்களுக்கெல்லாம் தங்களுக்குப்பிறகு குடிகளை இவ்வளவு கன்றாய் யார் இரட்சிக்கப் போகிறார்கள் என்றே கவலையாயிருக்கிறது.

அர.—சுபுத்தி, நாம் செய்யக்கூடியதென்ன இருக்கிறது? அவனன்றி தூணும் அசையாது என்றபடி அந்தப் பரம்பொருளைத் தோத்தரிப்பதைவிட வேறென்ன செய்யக் கூடும்.

சுபு.—அரசே. தாங்கள் சொல்வதும் நியாயந்தான். இருந்தாலும் அரசமரம் வைத்தல், குளம் வெட்டுதல் முதலியவைகளைச் செய்து எவ்வளவோ பெயர்கள் புத்திரப்பேறடை—

அர.—சுபுத்தி, தெரியாதவன் போல் பேசுகிறாயே. நம் இராஜதானியில் கட்டியிருக்கும் குளங்களுக்கும் சாவடிகளுக்கும் மடங்களுக்கும் மேம்பட்டது இந்த ஜம்பூத்வீபத்திலேயே இல்லை என்று பன்முறை நீயே சொல்லியிருக்கிறாய்.

சுபு.—அரசே, நான் அவைகள் செய்தும் கிட்டவில்லை என்று சொல்ல வந்ததை இடைமறித்துத் தாங்களே சொல்லிவிட்டீர்கள்.

அர.—சுபுத்தி, சூரிய வம்சத்தில் இதுவரையில் புத்திரர் இல்லை என்பதே கிடையாது. நான் இவ்வாறிருப்பது அந்த பகவானுக்குத் தெரியவில்லையோ?

[வருந்துகிறான். பெருமூச்செறிகிறான்.]

சுபு.—அரசே. வருந்தவேண்டாம். எல்லாம் தெரிந்தவராகிய தாமே வருந்தினால் நாங்கள் என்ன செய்வது.

ஒன்றை நினைக்கினது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அது வரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்

என்றபடி நம்மால் என்ன செய்யமுடியும்?

(ஒரு சன்னியாசி வர, இருவரும் எழுந்து வணங்குகிறார்கள்.)



அர.—பதிக்திரரே, தங்கள் வரவால் நான் தன்னியனானேன். ஸ்வாமி, இந்த ஆசனத்தில் உட்காரும் (பணிந்து ஆசனத்தைக் காண்பித்து), தங்கள் திருவடியினால் இவ்வாசனத்தை புனிதமாக்கும். (சுபுத்தியை நோக்கி) சீக்கிரம் அந்தப்புரம் சென்று தேவியை இவ்விடம் வரச்சொல். (மனத்துள்) ஆஹா! என்ன? இவரைக் கண்டவுடன் என்னையும் அறியாமல் ஓர் இன்பமுண்டாகிறது. எங்கேயோ நெருங்கிப் பழகிய முகம்போல் தோன்றுகிறது. ஆ! என்ன அழகு, என்ன தேஜஸ், என்ன! என் வலது கண்ணும் வலது புஜமும் துடிக்கின்றனவே. (வெளிப்படையாக) ஸ்வாமி, எங்கள் முன்னோர்செய்த தவப்பயனே தாங்கள் அடியேன் குடிலுக்கு எழுந்தருளும்படி செய்ததோ. மழைகாணாப் பயிர் போல் வாடும் எனக்குத் தங்கள் வரவு அமிர்த சஞ்சீவிபோல் தோன்றுகிறது.

[அரசியும், சுபுத்தியும் வருகிறார்கள்.]

கமலினி—ஸ்வாமி! தங்களுடைய பாததூளியால் அடியாளைப் புனிதமாக்கும்.

[பணிகிறாள்.]

சன்.—வத்ஸே, உன் மங்கலம் செழித்தோங்குக. அரசனே, நீங்கள் இருவரும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமுமாய் வாழ்வீர்கள். உங்கள் மனோபீஷ்டம் சீக்கிரம் நிறைவேறும்.

[அரசனும் அரசியும் பணிய சன்னியாசி மறைகிறார்.]

அர.—(எழுந்து) ஆ! ஆ! யதீச்வரரைக் காணோமே, எங்கே சென்றிருப்பார்? (ஆச்சரியத்துடன் அங்குமிங்கும் பார்த்தல்.)

கம.—நாதா, அது யதீச்வரரன்று. பகவானன்றோ அவ்வாறு வந்திருக்கிறார்.

[துதிக்கிறார்கள்.]



நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய்
நிராமயமாய் நீங்காச்
சுத்தமுமாய் தூரமுமாய் சமீபமுமாய்
துரிய நிறை சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்ற வொன்றை சுகாம்பரப்
பெருவெளியைச் சிந்தை செய்வாம்.

[திரை விழுகிறது.]

### முதல் அங்கம்.

### இரண்டாங் காட்சி.

(இடம்—ஒரு தெரு.)

பாத்திரங்கள்—சாஸ்திரிகள் நின்றுகொண்டிருக்கக் கையில் பெரிய தட்டுடன் விதூஷகன் வருகிறான்.

வி.—அடாடா. என்னால் தூக்கவே முடியவில்லையே. இதென்ன கூத்து! ராஜாவுக்குக் குழந்தை பிறந்தால் அதற்கு இவ்வளவு அமர்க்களமா!

சா.—என்ன விதூஷகரே. என்ன தூக்க முடியவில்லை என்கிறீரே.

வி.—சந்தர்ப்பணை போஜனம், நிமந்தரண போஜனம் என்று காலம் தள்ளும் உமக்கு என் கஷ்டம் என்ன தெரியும்.

சா.—உமக்கென்ன கஷ்டம், கொஞ்சம் சொல்லுமே.

வி.—சாஸ்திரிகளே. என் கஷ்டம் உமக்கென்னமாய்த் தெரியும்? சத்ர போஜனம், மடா நித்திரை என்று சௌக்யமாய் இருக்கிறீர், என்னைப் பற்றி உமக்கென்ன கவலை, தனக்கு வந்தால் தெரியும் தலை வலியும் திருவலியும்.

சா.—என்னமோ. கேட்டதை விட்டு விட்டு என்னென்னமோ சொல்லிக்கொண்டு போகிறீரே.

வி.—ஐயா, உம்மிடம் சொல்ல வேண்டாமென்றுதான் பார்த்தேன். சொல்லத் தான் வேண்டும் போலிருக்கிறது.

சா.—என்ன அது, சீக்கிரம்தான் சொல்லித் தொலையுமே.

வி.—அப்படிச் சொல்லி விட்டால் நீர் சீக்கிரம் ஜாதகம்பார்த்து விடுவீர். போதும், எனக்கு நீர் ஜாதகம் பார்த்துக் கலியாணம் செய்து வைத்ததே போதும், போதுமென்றாய் விட்டது. இன்னமும் ஜாதகம் பார்த்து இருக்கிறவர்களையும் கெடுத்து விடாதேயும்.

சா.—என்ன விதூஷகரே, கோபித்துக் கொள்ளாதேயும். சமாசாரத்தைச் சொல்லும்.

வி.—அதற்குள் போசனை வந்து விட்டதா? கோபம் சண்டாளமாயிற்றே. நான் கோபித்தால் நீர் ஸ்நானஞ் செய்ய வேண்டுமே என்று அப்படி எல்லாம் நீர் சொன்னாலும் நான் கோபிக்கமாட்டேன்.

சா.—கையிலிருக்கிற தட்டில் என்ன?

வி.—சாஸ்திரிகளே. உன்னைப் பொறுத்தது, இன்னைப் பொறுக்கவில்லை என்று எங்கள் பாட்டி சொல்வாள். அதுபோல் ரொம்ப அவசரப்படுகிறீரே. அவசரப்பட்டவன் அவலமாவான் என்பது பெரியோர் மொழியாயிற்றே. அது கூடத் தெரியாதா உமக்கு?

சா.—இல்லை விதூஷகரே. நீர் தான் சீக்கிரம் சொல்லுமே.

வி.—சரி, சொல்லுகிறேன் கேளும். ராஜாவுக்கு ஒரு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் பிறந்திருக்கின்றன. அதற்காக இந்தத் தட்டு நிறையக் கற்கண்டு கொடுத்து என்னைத் தின்னச் சொன்னார்கள். அது தான் தூக்கவே முடியவில்லையே, தின்ன முடியுமா முடியாதா என்று ஒரு ஜோஸியம் கேட்க உங்களைத் தேடினேன். அதற்குள் நினைத்துக் கொண்டேன்.

சா.—என்ன, ஐயா, நினைத்துக் கொண்டீர்?

வி.—அந்த வெட்கக் கேட்டை சொல்லவேண்டுமா! நாம் தான் பிரதி தினம் சண்டை பிடித்துக்கொண்டு நிற்கிறோமே. வேண்டுமென்றே 'முடியாது'என்பீர். போட்டிக்காக நான் 'அவசியம் முடியும்' என்று எல்லாவற்றையும் தின்று விடுவேன். உடம்புக்காகாமல் நான் சீக்காய் விழுந்தால் உமக்கென்ன ஐயா!

[இருவரும் சிரிக்கிறார்கள். திரை விழுகிறது]

## முதல் அங்கம்.

## மூன்றாங் காட்சி.

இடம் பூஞ்சோலை.

பாத்திரங்கள் —கன்னையும் சகிகளும்.

சக.—தோழிகாள். இங்கே வாருங்கள். தேவகி, இந்த சண்பக மரத்தைப் பார்த்தாயா? எவ்வளவு அழகாய் இருக்கிறது!

தேவ.—வெகு அழகாகத் தான் இருக்கிறது. இரு, நான் கொஞ்சம் சண்பகபுஷ்பம் பறிக்கிறேன். தலையில் வைத்துக்கொண்டு பிறகு விளையாடுவோம்.

ச.—சரி. என்ன விளையாட்டு விளையாடலாம், சொல்லு.

தேவ.—கண்ணாமூச்சி ஆடலாமா.

கண்ணகி.—பந்தாடுவோம் வா.

சக.—சரி. கொஞ்சம் புஷ்பம் பறித்துப் பந்து கட்டுவோம்.

(பூக்களைக் கொய்து பந்து கட்டுகிறார்கள்.)

சக.—இந்தக் கலவைப்பூச்செண்டு நன்றாயில்லை. அல்லி இதழும், குண்டுமல்லிகையும் கலந்து கட்டுவோம்.



தேவ.—சகி, நீ வெகு அழகாய்க் கட்டியிருக்கிறாய், வா விளையாட.

கண்.—நீ பந்தாடுவதற்கு ஒரு பாட்டுச் சொன்னால்தான் நான் வருவேன்.

தேவ.—ஏன், நீதான் முதலில் சொல்லேன்.

கண்.—நீதான் முதலில் சொல்லேன்.

சக.—சரி, சரி. நீங்களிருவரும் சண்டையிட வேண்டாம். நான் பாடுகிறேன்.

பலஸித பாப பா ரீக மாதபாமகா என்ற சங்கராபரண கோட் மெட்டு.

பந்தாடுவோம் வா சகியே, பந்தாடுவோம் வா.

1. நந்தவனந்தன்னிலே—சுந்தரமாய் நாமுமே
பந்தைக்கைதனில் எடுத்து—அந்தமாய் விளையாடு
[வோம் ‖ ப ‖

2. மல்லகை முல்லையுடனே—அல்லியும் கலந்த
[சென்டை
சொல்லரிய சொகுசுடனே—மெல்லியலே
[நாமாடுவோம்

3. கண்ணும் பூச்சி வேண்டாமடி—கண்ணகி நீ வா
[இங்கே
ஓடி நாம் ஆடலாம்—வேடிக்கையாய் பாடலாம்.

[பந்தை எடுத்து ஆடுகிறார்கள்]

தேவ.—சகி, நீ பாடுவது வெகு நன்றாயிருக்கிறது. இப்பொழுதிருந்தே பாடிப் பாடிப் பழகிக்கொண்டால் கலியாணத்தில் உன் கணவருடன் பந்தாடும்போது நன்றாய்ப் பாடலாம்.

சக.—சகி, நீகூட என்னை பரிகசிக்கலாமா? கலியாணம் கலியாணமென்று எப்பொழுதும் கேலி செய்தால் எனக்கு வெட்கமாயிராதா?

கண்.—பார், பார். ஆட்டத்தை விட்டுப்பேச ஆரம்பித்ததால் பந்தைத் தப்பிதமாய் அடித்துவிட்டாய். அதோ பார். எவ்வளவு தூரம் போய்விட்டது. நான் போய் எடுக்கமாட்டேன். நீதான் போய் எடுக்கவேண்டும்.

(பந்து ச்யவனர் புற்றருகில் விழுந்திருக்கிறது.)

சக.—(புற்றருகில் வந்து) சகி, இதோ பார்த்தாயா! பந்து இங்கே வந்து விழுந்திருக்கிறது. (ஆச்சரியத்துடன்) சகி, இங்கே ஓடி வா. இந்தப் புற்றில் என்னமோ இருக்கிறது, பளபளவென்று தெரிகிறது!

(சகி ஓடி வருகிறாள்.)

தேவ.—அது பாம்புப் புத்தாய்த்தானிருக்கும். துவாரத்தின் வழியாய்ப் பார். நாகரத்னம் இருக்கும்.

கண்.—சரி, எங்கள் தோட்டத்தில் ஒரு புற்றில் தீப ஒளிபோல் தெரிந்தது. அதுதான் நாகரத்னம் என்று எங்கள் தாத்தா சொன்னார்.

சக.—சகி, நீ வந்து பார், இதில் ஒரு வேளை பாம்பிருந்தாலும் இருக்கும்.

கண்.—நான் கிட்டவே வரமாட்டேன். பாம்பிருந்தாலும் சரி, தேள் இருந்தாலும் சரி. நீயே பார்த்துக் கொள்.

(கண்ணகி ஓடுகிறாள்).

சக.—சரி, இதற்குள் பாம்பு தானிருக்கும். குச்சியை எடுத்துக் குத்தினால் ஓடி விடும்.

(குச்சியினால் குத்துகிறாள்.)

தேவ.—குத்தாதே. பாம்பு சீறிக்கொண்டு கடிக்க வரும். ஓடி வா. அங்கே நில்லாதே. யானையும் பாம்பும் தங்களுக்குத்தீங்கு செய்தவர்களை எத்தனை வருஷமானாலும் மறக்காது. துரத்திக் கடிக்கும்.

சக.—முன்னமே சொல்லக் கூடாதா. குத்தின பிறகு சொல்லுகிறாயே, எனக்கும் பயமாயிருக்கிறது, ஓடுவோம் வா.

(ஓடுகிறார்கள்).

(தொடரும்).

# மருந்தின்மை யென்னும் ஆரோக்கியத்தின் நுட்பம்.

(புதுச்சேரி, இயற்கை இல்லம், ஸ்ரீமான் கி. லக்ஷ்மண சர்மா)

நோயற்ற வாழ்வானது நம் பெண்களுக்கே முக்கியமாய் வேண்டியது என்று சொல்ல வேண்டுமோ? ஆனால் இது வரை நோயற்ற வாழ்வைப் பற்றிய கல்வி சிறிதும் பரவாமலிருந்து வந்ததை நான் ஒரு நன்மை யென்றே நினைக்கின்றேன். தப்பான முறைகளைத் தெரிந்துகொள்வதைக் காட்டிலும், ஒன்றுமே தெரிந்துகொள்ளாமலிருந்து விடுவது எவ்வளவோ உத்தமம்.

இக்காலத்தில் நகர வாசிகளால் ஆதரிக்கப்பட்டுவரும் வைத்திய முறைகள் நன்றல்லவென்று தாராளமாய்க் கூறலாம். மகாத்மாவென்று போற்றப்படும் காந்தியும் இதே அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கிறார் என்றால் இதை ஆட்சேபிக்கிறவர் அதிகமாயிருக்கமாட்டார்களென்றே நம்புகிறேன்.

தற்காலம் அதிகமாய் ஆதரவு பெற்று வரும் வைத்தியர்களை நம்பி வாழும் குடும்பங்களிலேயே நோயும் பலவீனமும் குடிகொண்டிருப்பதை நாம் நேரில் பார்க்கிறோம். ஆகையால் இவ்வைத்திய முறைகளில் ஏதோ பெரும் குற்றங்களிருக்கின்றனவென்று சொல்லவேண்டுமல்லவா.

இப்போது பிரபலமாகப் பரவியிருக்கும் வைத்திய சாஸ்திரத்தைப் பெண்கள் கற்றுக் கொள்வது சாத்தியமும் அல்ல, நன்மையுமல்ல. ஆரோக்கியத்தின் மூல தத்துவங்களை இயற்கை வைத்திய சாஸ்திரத்தின்படி கற்றுக் கொள்வது மிகவும் எளிதாயிருப்பதும் தவிர அதன் பயன்களும் எண்ணிறந்தவை. இதற்கு சாட்சிகள் இக்காலத்திலேயே அநேகர் உண்டு. இயற்கை வைத்திய அநுஷ்டானமுள்ள குடும்பங்களில் ஆரோக்கியம் அதிகமாயிருப்பது பிரத்தியட்சம். அவர்கள் குழந்தைகளில் மரணம், நீடித்த நோய் இரண்டும் கிடையாதென்றே சொல்லலாம்.

இயற்கை வைத்தியத்திற்கும் இதர வைத்தியத்திற்கும் மகா விரோதம். ஆகையால் இயற்கை வைத்தியத்தின் கொள்கைகள் சத்தியமாயும், அதன் முறைகள் நன்மையாயும் இருப்பது உண்மையானால், மற்ற வைத்தியமெல்லாம் தப்பென்றுதான் முடிவாகும். இயற்கை வைத்தியம் தப்பென்று சொல்ல முன்வருவார் ஒருவரும் இல்லை—இக்காலத்தில். ஆகவே, செயற்கை வைத்தியமாகிய "ஆயுர் வேதம்," "ஸித்த வைத்தியம்" முதலியவை தப்பென்று முடிவு செய்கிறோம்.

இந்தத் தப்பான வைத்திய தந்திரங்களைக் கற்றுப் பிழைப்பவர்கள் செய்யும் போதனைகள் எப்படி நமக்கு நன்மை தரும்?

இவ்வைத்தியர்கள் மருந்துகளை நோய்க்குப் பரிகாரம் என்று திடமாய் நம்பியிருக்கிறார்கள். மேலும் இவர் கையாடும் மருந்துகள் நம் தேகத்தின் இயல்புக்கு முற்றிலும் சத்துருத் தன்மையுள்ளவைகளேயாகின்றன.

மருந்துகளால் செய்யும் வைத்திய முறைகளில் தேர்ச்சி பெற்ற அநேக வைத்தியர்கள் இதைக் கண்டிக்கிறார்கள். ஸர் உவில்லியம் ஆஸ்லர் என்பவர் இயற்கை வைத்தியத்தைப் புகழ்ந்து எழுதியிருப்பதுடன், தம் சொந்தமான வைத்தியக் கட்சிக்காரரைக் கண்டபடி நிந்தித்துமிருக்கிறார். இதே மாதிரி ஹோம்ஸ் என்ற டாக்டரும் பல மேலான ஆங்கில நூல்களை எழுதியவருமான ஒருவர் மருந்துகளைப் பற்றி இகழ்ந்து எழுதியிருக்கிறார். இதுபோல் இன்னும் அநேகர் எழுதியிருக்கிறார்கள்.



மருந்து கொடாமல் கொடுப்பதுபோல் ஏமாற்றம் செய்து வரும் ஹோமோபதி என்னும் வைத்தியக் கட்சியார் பிழைத்து வருவதற்குக் காரணம் மருந்துகளே நோயில் தேவையில்லையென்பதைக் காட்டுகிறது.

ஆரோக்கியத்திற்கு ஆதாரமானவை ஐந்து: இவை இளைப்பாற்றம், ஓடும் வாயு, சூரிய வெளிச்சமும் உஷ்ணமும், மிதமான முறைகளில் சுத்த ஜலத்தில் ஸ்நானபானம், பத்தியமான ஆகாரம். இவ்வைந்தும் நம் தேகத்தின் அம்சங்களாயிருக்கும் பஞ்ச பூதங்களின் உறவைக் குறையாமல் காப்பாற்றும் உபாயங்கள்.

ஐந்து மருந்துகளின் விவரம்.

| | | |
|---|---|---|
| இளைப்பாற்றம் | ... | ஆகாச சக்தி. |
| ஓடும் வாயு | ... | வாயு சக்தி. |
| சூரிய வெளிச்சம் | ... | அக்கினி சக்தி. |
| ஜலம் | ... | அப் சக்தி. |
| உணவு | ... | பூமி சக்தி. |

இந்தப்படி ஐந்து சக்திகள் நம் தேகம், மனம் இரண்டையும் காக்கப்போதுமானவை. இதுவே தெய்வ சங்கற்பம். இவ்வைந்தும் சேர்ந்தே நம் தேகமும் மனமும் உண்டாயிருக்கின்றன. இவற்றைப் பழுது பார்க்க—நோய்களைக் களைய—வேறு அன்னியமான பொருள்கள் தேவையென்போர் மகா மூடர். டாக்டர் ராபர்ட் உவால்ட்டர் என்பவர் இதே அபிப்பிராயத்தை விளக்குகிறார். இதைப் பின்பு எடுத்துச் சொல்லுகிறேன்.

பூமியின் சக்தியானது நம் தேகத்தில் நேரில் சம்பந்தப்படவில்லை. பூமியில் விளையும் ஓஷதிகள், பயிர்கள் இவைகளே நமக்கு உணவு. இவ்வுணவினாலேயே தேகம் உற்பத்தியாகி வளர்ந்துமிருக்கிறது. ஓஷதிகளின் விளை பொருள்களே "ஔஷதம்" எனப்படும். உணவென்பதும் அதுவே. இந்தப்படி வேதமும் போதிக்கின்றது.

இதனால் ஓஷதிகளின் வாயிலாக வாராத பூமி சத்துக்கள்—கடல் உப்பு, சுண்ணாம்பு முதலியவை—நமக்கு நஞ்சாகின்றன. மேலும், ஓஷதிகளிலேயே சில வகைகள் உயிருக்குப் பகையானவை என்பதும் பிரசித்தம். ஆகையால் உணவாகவும் மருந்தாகவும் உதவுவது நஞ்சல்லாத ஓஷதிவகைகளே. மற்றவை மருந்துமல்ல, உணவுமல்ல.

நாம் சமையலில் சேர்க்கும் உப்பானது நம் இரத்தத்தைக் கெடுத்து, நாடிகளையும் பலவீனப்படுத்தி, கடைசியில் தீராத நோய்களுக்கு ஆளாக்குகிறது. இதனால்தான் உப்பில்லாப் பத்தியம் மேன்மையானது. வெற்றிலையுடன் சேர்க்கப்படும் பாக்கும் சுண்ணாம்பும் இதே மாதிரி நோய்களை உண்டுபண்ணுகின்றன. பாக்கு நச்சுப் பொருள், சுண்ணாம்பு கொடிய நஞ்சு. வெறும் வெற்றிலை மட்டில் உபயோகித்தால் கெடுதியில்லை. உதடுகளை சிவக்க வைக்கவேண்டுமென்று நினைக்க வேண்டாம்.

நோயில்லாக் காலங்களில் நோய் வாராமல் காக்கும் மருந்துகள் இவ்வைந்தே. நோய் வந்த போது இவை உபயோகமில்லை. வீரம், பூரம், பாதாலம், கந்தகம் முதலியவை வேண்டுமென்பது, "நோயற்ற வாழ்விலிருப்பவரைக் கெடுக்கும் சரக்குகளே நோயாளிக்கு ஹிதம்," என்று சொல்வதாகும். இது காரணம் பற்றியே மேற் சொன்ன உவால்ட்டர் என்னும் டாக்டர் செயற்கை வைத்தியரை நிந்திக்கின்றார். இவ்வைந்து மருந்துகளே மருந்துகள் என்னும் கட்சியில் இவர் சேர்ந்துவிட்டார். இதே மாதிரி அநேக பட்டம் பெற்ற வைத்தியர்களும் தம் வைத்தியக் கட்சியைவிட்டு, இயற்கைக் கட்சியில் சேர்ந்துவிட்டார்கள்,

இளைப்பாற்றம் என்பது அதிகமாய் உழைத்துத் தளர்ந்திருக்கும் நம் தேகக் கருவிகளை

ஓயும்படி விடுவது. நம் தேகக் கருவிகளுக்குள் அதிகமாக வேலையிடப்பட்டுத் தளர்ந்திருப்பவை நம் வயிற்றுக்குள்ளிருக்கும் ஜீரணக் கருவிகளே. ஆகையினால் இடையிடையே பட்டினி யிருப்பதே முதன் மருந்தாகிறது. இதன் உண்மையை நம் முன்னோர் அறிந்திருந்தார்கள். பிற்கால நாகரிகத்தில் இதை நாம் முற்றிலும் மறந்து விட்டோம். தூங்கும்போது தவிர மற்றெப்போதும் ஏதாவது தின்று கொண்டே யிருப்பதுதான் நாகரிகம் என்றாய் விட்டது. "லங்கனம் பரம ஔஷதம்" என்ற தட்பத்தை உலகத்திற்குத் திரும்பவும் கொடுத்தவர் இயற்கை வைத்தியர்களே.

இயற்கை வைத்தியத்தின் இவ்வைந்து பகுதிகளை விரிவாக இப்பத்திரிகையில் எழுதி வரலாமென்று நினைக்கிறேன். பத்திராதிபர் அனுமதித்தால் அவ்விதம் செய்கிறேன். இவ் வைத்திய சாஸ்திரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டு மென்பவர்கள் புதுச்சேரி, இயற்கை இல்லம், ஸ்ரீமான் கெ. லக்ஷ்மண சர்மா என்ற விலாசத்துக்குப் பதிலுக்காகத் தபால் தலைகளுடன் எழுதவேண்டும்.

நோய்க் காலங்களில் மேற் சொல்லிய இவ் வைந்தையும் தவிர வேறு சாக்குகளை உட்கொள்ளுதல், பசி மந்தமாயிருக்கும்போது உணவு கொள்ளுதல் இவ்விரண்டினாலேயே ஏராளமான அகால மரணங்கள் ஏற்படுகின்றன. இதனால், அநேக வைத்திய நிபுணர்கள் கூறியபடி இம்மூட வைத்தியம் செய்வதைக் காட்டிலும் சும்மா யிருப்பதே நோயைத் தணிப்பதில் நல்ல பயன் தரும் என்பது சித்தாந்தம். மருந்தின்மையே நோயற்ற வாழ்வுக்கு முக்கிய சாதனம். நோயில் பட்டினி, சுத்த வாயு, வெய்யில், ஜலம், பசித்தபோது அனுகூலமான பத்தியம் இவை தவிர வேறு மருந்துகளைத் தள்ளவேண்டும். இப்படிச் செய்தால் அவரவர் தமக்குத் தாமே வைத்தியராகலாம்.

# மனோன்மணி அல்லது மாசற்ற காதல்.

(சிறு கதை)

(ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்)

மாலை சுமார் ஐந்து மணி யிருக்கும். இந்திரபுரியிலிருக்கும் சோமநாதப் பிரபுவின் வீட்டிலிருந்து நமது கதை தொடங்குகின்றது. அவர் தனது "துவாரகை" என்னும் மாளிகையின் வாயிற்புற மண்டபத்திலுட்கார்ந்து, சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார்—அடிக்கடி அவர் எழுந்து அங்குமிங்கும் உலவினர். அவர் மனமோ ஓரிடத்தில் நிலைத்திருக்கவில்லை. அடிக்கடி தான் நல்ல விஷயங்களை எண்ணும் போதெல்லாம் அபசகுனங்களுண்டாவது கண்டு அவர் மனவருத்தப்பட்டார். பின்னர் ஒருவாறு தேறி ஆங்கிருந்த சலவைக் கல்லின் மேலுட்கார்ந்துகொண்டு பெருத்ததோர் மனக் கோட்டையைக் கட்டினர்...... அவர் கண்களில் ஒருவிதப் பிரகாசம் தோன்றிற்று......"ஆ! இவ்விதமாயின் எவ்வளவோ நல்லது!!" என்று உடனே வாய் விட்டுக் கூறினர். அச்சமயம் தும்மல் சத்தம் கேட்டது—இந்த அபசகுன சப்தத்தைக் கேட்டதே அவருக்கு மன வருத்தம் ஒரு புறமும், கோபமொரு புறமும் துக்கத்தை உண்டாக்கிப் பிடித்தன...கோபத்துடன் "யாரடா! இப்படித் தும்முவது!! இங்கே வாடா! உன் மூக்கைத் துளைக்கின்றேன்......இன்னுமிரண்டு துவாரங்களைச் செய்கின்றேன்!" என்று உறுமினர். வேலைக்காரன் பின்புறம் நின்று கொண்டே, "எஜமானே! மன்னிக்கவேண்டும்" எனக் கெஞ்சிய குரலில் கேட்டான். சோமநாதருடைய மனம் சற்று இளகியது. "சரிதான் போடா! உன்னை நோவதாலாம் பயனென்? எல்லா மிறைவன் விதித்தபடி நடக்கிறது" என்று தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டே, "கந்தா! நீ சென்று நம் மனோகரனைக் கூட்டிக்கொண்டு வா!" என்றுத்திரவிட்டார். "தேவரீர் ஆஞ்ஞை!" என்று விளம்பிக் கந்தன் மறுபுறம் சென்றான்.

* * *

மாளிகையின் மற்றொரு புற அறையில் மனோகரனும் அவன் சகோதரியான சரஸ்வதியும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள் :—அது வருமாறு :—

சரஸ்வதி :—என்ன அண்ணா!! நீ கொடுத்த புத்தகம் நன்றாயில்லையே................உம்! அதென்ன? வெறும் வர்ணனை நிரம்பியிருக்கிறது—எனக்கது பிடிக்கவில்லை—வெறும் வர்ணனையில் என்ன விருக்கிறது?

மனோகரன் :—சாசு! என்ன அப்படிச் சொல்லுகிறாய்?......வருணனை என்றால் என்ன? சாமானியமா?—எவ்வளவு அழகாயிருக்கிறது—அவ்வுறையன்றன்னில்லாளை யாரு மற்ற காட்டகத்தே நீங்கும்போது—ஆ! எவ்வளவு அழகாக...கவிராயர் வருணித்திருக்கிறார்—எங்கே, அதைப் படி—கேட்போம்!!

சரஸ்வதி :—இதோ!

போயொருகான்மீளும் புகுந்தொருகான் மீண்டேகும்
ஆயர்கொணர்ந்த வடுபாலின்—றேயத்
சடைவார் தங்கைப்போல வாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம்—

என்ன அர்த்தமிதற்கு?......

மனோகரன் :—சற்று பொறுத்துப் பார்!......உனக்கே விளங்கும்.

சரஸ்வதி :—ஆ! தெரிந்தது!—தெரிந்தது!!—என்ன உவமை! அடாடா! இக்கவியொன்றுக்கு ஆயிரம் பொன்னும் ஈடா!!

(மனோகரன் சமாதியில் ஆழ்ந்தான்—சிறிது நாழிகைக்கப்புறமவன் மனம் பகிர்முகப்பட்டது.)

சரஸ்வதி:—ஆ! மன்னியாரா...ஆ!! அந்த—அந்த—மனோன்மணியா—அம்பல......

மனோகரன் :—ஆம்! நீ ரொம்ப புத்திசாலி!! என்...........இல்லை! உனது மன்னியார் மனோன்மணியாரே!—அவர் அம்பலவாணர் என்ற நவீனப்புரி பிரபுவின் குமாரத்தி—ஆனால் எங்கள் காதல் அவருக்குத் தெரிந்துவிடவே—அவர் இதற்கு ஒப்புவார் என்றெண்ணி யிருந்தோம்—ஆனால் அவர் மனைவி உமா இதற்கு இசையவில்லை—அவளுக்கு மனோன்மணியை மதுசூதனனுக்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்றிருக்கிறது—அதற்கு அப்பிரபுவும் இசைந்து விட்டாராம். இவை யாவும் மணியே எனக்குக் கடிதம் மூலமாய் நான்கைந்து நாட்கட்கு முன் தெரிவித்திருந்தாள்...

சரஸ்வதி :—அண்ணா! இது கிடக்கட்டும்! நான் சொல்லுகிறேன்—மனம் கலங்காதே! அவ்வம்பலவாணர் நமது அத்தை புருஷன்.

மனோகரன் :—பின்னை ஏன்......

சரஸ்வதி :—(இடை மறித்து) சகோதாரிருவருக்கும் சச்சரவுண்டாகவே பகை தொடங்

யெது—இருவரும் பிரிந்து விட்டனர். இஃதுனக்குத் தெரியாதா?

மனோகரன்:—அப்படியாயின் எனக்கு மணியை மணஞ்செய்து கொள்ளப் பூரண சுதந்தரமுண்டு.

கந்தன் உள்ளே வந்து மனோகரனை வணங்கி, "சின்ன எஜமானே! உங்களை பெரிய எஜமானர் அழைக்கின்றார்" என்றான்—உடனே மனோகரன் எழுந்து போனான்.

* * *

தந்தையைக் கண்டதே தனயன் வணங்கி நின்றான்.

"போக்கிரிப்பயலே!—உன்னை நல்லவனென்றெண்ணினேன், நாசமாய்ப்போக! நீ என் குலத்தைக் கெடுக்க வந்தக் கோடரிக்காம்பு ஆனாயே! மகாபாதகம் செய்த எனக்கு மாத்திரமன்று—என் குலத்திற்கே பாதகத்தையு மவதூறையும் அவமானத்தையும் விளைவித்த உன்னை ஏன் சபிக்கக்கூடாது! ஒரே பிள்ளை என்றுன்னைச் செல்லமாய் வளர்த்தேன்—சீரழிந்து போனேன்—ஆ! அதற்கெல்லாமிதுதான் பயனோ? மகாபாவியே! நீ கெட்டாய்!!" என்று சீறி விழுந்தார் பிரபு.

"எனதன்பார்ந்த தந்தையே! யானென்ன தப்பிதமியற்றினேன்? ஏதாவதிருக்கின் மன்னித்தருள வேண்டுகின்றேன்—தேவரீர் முனிக்காலென்கதி யென்ன?—" என்று கண்ணீரோடு முழங்காற் பணியிட்டுக் கைகூப்பிப் பிரார்த்தித்தான் மனோகரன்.

"அடா! மகாபாவி!! தப்பிதம் செய்து விட்டு வாயும் வேறு?—பெருந் தவறியற்றி ஒன்றும் செய்யவில்லை என்கின்றாயே!—உம்!! என்ன மன்னிப்பு—இத்தகைய பாபங்கட்கு மன்னிப்பேது? இன்னிப்பேது? எதற்காக மன்னிப்புத் தரப்படவேண்டும்? இது கூடாது!... இதோ நீ இக்ஷணத்தில் என் மாளிகையை விட்டு வெளியே சென்று விடு—இது தான் முடிவு—இனி உன் முகத்தில் விழிப்பதில்லை, இப்பொழுதே ஓடு—" என்று படபடப்பாய்ப் பதறினார் பிரபு.

"தந்தையே! அத்தகைய பெருந்தவறு என்ன இயற்றினேன்?" என விளித்தான் மனோகரன்.

"ஆ! என் சத்துருவின் மகளைக் காதலித்து, காதலித்து, இதனினும் என்ன தவறு வேண்டியிருக்கிறது. நீ நல்ல பிள்ளையா?...மடையனே! யோசித்துப் பார்! என்ன? அப்படி இல்லை என மறுக்கின்றாயா?" என்று கோபத்தால் முகங்கறுக்க, கண்சிவக்கக் கத்தினார் பிரபு.

"தந்தையே! நான் காதலித்ததுண்மையே! இல்லை என்று பொய் சொல்ல என் மனம் துணியாது!—"

"ஆனால் இப்பொழுதென்ன! காதல்போய் விட்டதா? அப்படியாயின்—என் மனோகரமே! உன்னை என் பூரண இஷ்டத்துடன் ஏற்றுக் கொள்ளுவேன்" என்று தணியப் பெற்ற கோபத்தை உடையவராய் இந்திரபுரி சோமநாதம் பிரபு மகனை உற்று நோக்கினார்.

"தந்தையே! இது அநீதம்—என் உறுதியான காதலை மாற்றமுடியாது—நான் தீர புருஷனன்றோ?" என்று சிறிது கோபத்துடன் தனயன் சொன்னான்.

"நீ இனி அவளைக் காதலித்து என்ன பயன்?—அவளை மதுசூதனனுக்கு..." எனப் பிரபு பரிகாசமாய்ப் பகருவதை யிடைமறித்த மனோகரன், "என்ன! நீர் சொல்வதென்ன? மனோன்மணியா மதுசூதனனுக்குவயப்பட்டு—என் மேல் வைத்த சத்தியமான—உறுதியான காதலை மாற்றுபவள்?—" என்று இடி விழுந்த மாதிரி விசனத்துடன் விழித்தான்.



'அதென்ன நீ அப்படிச் சொல்லுகின்றாய்? உனக்குச் சற்றேதாவது விவேகமிருக்கிறதா? அம்பலவாணன் மனைவி உமா—என்ன! சாமானியப்பட்டவளா? அவள் தான் எடுத்த காரியத்தைச் சாதிப்பவளன்றோ? எல்லாரும் மனோன்மணியை நிர்ப்பந்தப்படுத்தினார்கள்—'

"அப்புறம்—"

"அப்புறமா? கேட்கிறதைப் பார்! வெட்கமின்றி, விவேகங்குன்றி!—அவர்கள் நிர்ப்பந்தம் பொறுக்க முடியாமல் அதற்கு அவள் இசைந்தாள்—இதோ! இன்றைய தினம் இரவே மணம் நடக்கப் போகின்றதாம்—இன்னும் நான்கு மணி நேரத்திற்குள் மதுசூதனனுக்கு அவள் மனைவியாய் விடுவாள்—பின்புன் ஆட்டமெல்லாந் திண்டாட்டந்தான்...... ஏ! பாவியே! உனதெல்லாக் காரியங்களும் இக்ஷணமே அழிவுறட்டும்!! என் வயிறெரியும்படி நடந்த நீ இனி சுகமே வாழாய்! என் சாபமுன்னை மிகக் கொடியதாய் வருத்தட்டும்! உன் தலையிலிடி விழட்டும்—அறிவு கெட்ட துரோகியே! இந்த க்ஷணமே இவ்விடத்தை விட்டுச் செல்! இனி இங்கு தலை காட்டாதே! நானினி உன் தந்தையல்லேன்—நீ என் மகனல்லாய்!—" என்று முழக்கஞ்செய்து ஆரவாரம் செய்தார் பிரபு.

மனமிடிந்த மனோகரன் தனதறை நோக்கி நடந்தான். அவன் இதயம் ஆயிரம் சுக்கலாயது. என்ன! தான் பூரணமாய் நம்பிய மனோன்மணி தன்னை யிப்படி ஏமாற்றுவாளா? கடவுளே! இல்லை! ஒருகாலுமிருக்க முடியாது. அவனதை எப்படி நம்புவான்? பாபம்! இருதலைக் கொள்ளி எறும்பெனத் தவித்தான். அறையுட் புகுந்தான்! பச்சிளங்குழவியே போல் தனது இருகரங்களையும் முகத்தில் வைத்துக்கொண்டு "கோ" வென்றழுதான்.



சரசு என்னவென்று விசாரித்தான்—கதாநாயகனு மவளுக் கனைத்தையும் ஆதியோடந்தமாயழுதபடி கூறினான்.

வாயிற்படியில் காலடி சப்தம் கேட்கப்பட்டதும், ஒரு தந்திச் சேவகன் தோன்றி ஒரு அவசரத் தந்தியைக் கொடுத்தான். பின்பு வந்தவன் வணங்கி வெளியே சென்றான். மனோகரன் அதைப் பிரித்துக் கீழ்க்காணுமாறு படித்தான்:—

நவீன புரி.

இன்று எனது கலியாண நாள். முடிவுடன் உடனே புறப்பட்டு வருக.

"மனோன்மணி."

இதுவரையிலழுத அவனது துக்கம் பறந்தோடி விட்டது. உடலிலொருவகை பூத்தது. பெருந் தைரியம் ஜனித்தது. தீரப் பார்வை கண்களிற்றோன்றியது. சரசு கண்ணீர் விட்டாள்—அவன் வெளியிற் செல்லவேண்டிய காலம் சமீபித்ததை யவளறிவாள்.

"என்னுயிர்ச் சகோதரியே! சரசு!! இனி உன்னைக் காண முடியாது!—நான் இனி இறந்தே தீரவேண்டும்!" என்று தீரமொழி கூறிக் கொண்டே வெளியில் சென்றான். அவன் பார்வையைக் காண அவள் அஞ்சினாள். "ஆ! எனதருமை யண்ணனே!" என்று கதறியவண்ண மவனை வெளிச் செல்லாதபடி தடுத்துக்கொண்டு ஆலிங்கனம் செய்துகொண்டாள். "என் தங்கையே! ஏனிவ் வருத்தம்? காதல் போயிற் சாதலே யாம்!! நான் போகின்றேன்—என்னை மறந்து விடு—நீ சுகமே வாழ். கடவுள் கிருபை செய்வாராக!" என்று சொல்லிய வண்ணம் அவன் பிடியினின்று விலகி வெளியிற் சென்றான்......பாபம்! சரசு அடக்க முடியாத துக்கத்தால் ஸ்மரணையற்று மண்ணில் வீழ்ந்தாள்.

மனோகரன் துணிகரங் கொண்டவனாய் நேரே குதிரை லாயத்திற்குச் சென்றான். ஆங்கு குதிரைக்காரக் குப்பனிருந்தான். மனோகரன் அவனைத் தனது அருங் குதிரையாகிய கண்டகனைக் கொண்டுவரச் சொன்னான். அடுத்த விநாடி அஃதவனெதிரே நின்றது. அவனைத் தட்டிக் கொடுத்து, பின்பு ஒரு முத்தமீந்தான். குதிரைக்காரக் குப்பன் திகைத்தான்.....இது என்ன......பின்பவன் தன் மேலேறிக்கொண்டு குப்பனை நோக்கி, "குப்பா! இனி என்னைக் காண்மாட்டாய்! இதுதான் கடைசித் தடவை! என்னை மறந்து விடு!" என்று கண்ணீர் பெருகக் கூறிவிட்டுக் குதிரையை நோக்கிய வண்ணம், "எனதருமைக் கண்டகமே! எனதருமைச் சிநேகிதன் நீயே!" என்று சொல்லி விட்டு அதைத் தட்டினான்—உடனே அவ்வசுவ ரத்தினமும் அவ்விடத்தை விட்டு நீங்கியது.

ஆ! அவனெங்கு செல்கிறான்? நவீனபுரிக்கே...என்ன துணிகரமான காதல்—கண்டகன் வாயு வேகமும் மனோவேகமும் பின்னிடும்படி ஓடிற்று. அதைக் காட்டிலும் வேகமாய் ஓடுங் குதிரை அந்நாட்டிலே இல்லை. இந்திரபுரிக்கும் நவீனபுரிக்கும் சுமார் பன்னிரண்டு மைல் தூரமிருக்கலாம். அப்பன்னிரண்டு மைல் தூரத்தையும் அது ஒரு விநாடிக்குள் கடந்து விட்டது. அப்பொழுது ஆறரை மணியிருக்கலாம். கதிரவன் மேற் கடலில் குளித்தான். பறவைகள் பாடத் தொடங்கின. மாலை வெளிச்சம் சிறிது வீசிற்று. குதிரையும் நவீனபுரியைச் சமீபித்தது.

நவீனபுரி முழுதும் மனோன்மணியின் கலியாணப் பிரஸ்தாபமே பெரிதாயிருந்தது. அம்பலவாணர் மாளிகையில் விசேஷ தடபுடல்கள் நடந்து கொண்டிருந்தன. பூரண தைரியத்துடனவன் மாளிகைக்குள் நுழைந்தான். யாவரும் அவனைத் தடுக்கத் துணியவில்லை. அவன் முகத்தில் தோன்றிய உக்கிர தீரத்தைக் கண்ட யாரே அவனைத் தடுப்பர்? அவன் கண்டகனை வாயிலிற் கட்டி விட்டு உள்ளே சென்றான். ஆங்கு சுற்றத்தார்களும், நண்பர்களும், விருந்தினர்களும் குழுமியிருந்தனர்.

மனோகரனைக் கண்டதே அம்பலவாணர் கடுங் கோபத்துடன் சீறினார்—அதிக கோபத்தால் அவர் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் கிளம்பின போற்றோன்றியது. நாசியினின்று புகை குபு குபுவென்று கிளம்பியது; மீசை படபடவென்று துடித்தது. பார்த்த முகம் கறுக்க—வாய் பதைக்க, பல்லைக் கடித்துக் கொண்டு—உதடதுக்கி, "உன்னை யாரிங்கு விட்டது? அடே! பாபி!! இந்த க்ஷணமே இவ்விடத்தை விட்டகல். இன்றேலிதே யிடத்தில் பலியிடப்படுவாய்! (தனதுறையினின்று வாளுருவி) ஜாக்கிரதை! பயமிருக்கட்டும்!! பிழைத்தது புனர்சன்மமென்றோடு! இன்றே உன்னைக் கொன்று உன் இரத்தத்தை உறிஞ்சி விடுவேன்—ஏனத்தனை கோபக்காரன்!—ஓடு! ஓடு!! ஓடு!!!" என்றுடலில் வியர்வை பொடிப்ப, பெருமூச்செறிந்து, புருவத்தை வளைத்துக்கொண்டு, உருத்திரன்போற் கோபித்தெழுந்து—யாவரும் நடுங்குங் குரலில் உறக்க—கண்களை உருட்டிப் பார்த்துக் கொண்டே கூறினார்.

மனோகரன்றனது முகத்திற் புன்னகை தழுவ, "இது என்ன? ஏனிப்படிக் கூவுகின்றீர்? மனோன்மணியின் மேலிருந்த என் காதல் தற்சமயம் ஆற்றிற் கரைத்த புளியாயிற்று—அவளென் சோதரியே!...ஆம்!!" என்றடக்கமாய்க் கூறினான்.

அருகிலிருந்து இதைக் கண்ட மணமகனாம் மதுசூதனன் பயத்தால் கிடு கிடு என்று நடுங்கினான்; பாபம்! அவனால் ஒரு சொல் கூடச்



சொல்ல முடியவில்லை—என்ன ஆபத்து விளையுமோ வென்றஞ்சினான்.

அம்பலவாணர் சிறிதுகோபந்தணியப்பெற்று, "ஆ! அப்படியாயின் நீ இங்கு வந்திருப்பதெதற்கு?......சண்டைக்கா? அன்றி சமாதானத்திற்கா? எப்படியும் நானும் நீயுஞ் சமாதானமாக வொருகாலும் முடியாது—அது வீண் எண்ணமே! நீ என் சத்துருவின் மகன். சண்டைக்கு வருவதாயின் உன் கதி......... அதைப் பற்றி யான் சொல்லவே வேண்டியதில்லை" என, மனோகரன் "நானும்முடன் இனி சமாதானமாகவே யிருக்க விரும்புகின்றேன். (முழங்காற் பணியிட்டு வணங்கி) நீரே என் தந்தை!...மணியே என் சோதரி!! இனி என்ன?—" என்றான். மனங்களியப் பெற்ற அம்பலவாணப் பிரபுவானவர் "அங்ஙனமாயின் சரி!......எழுந்திரு!!......இதோ நீயுமிக் கூட்டத்தில் கேளிக்கையிற் சேர்த்துக் கொள்ளப்படுவாய்" என்றார்.

"எந்தையே! மணியை நானென் மனமார நேசித்தேன—அவளுமென்னை நேசித்தனள். ஆனாலதற்கு நீர் சம்மதிக்காததால் அவள் உமது சாபத்திற்கஞ்சி மதுசூதனனுக்குச் சம்மதித்தாள்—இதோ! இமாசலம் போலெழுந்தவென் காதல் சுக்கலாயது—என் செய்வது? கடலின் கொந்தளிப்பைப் போன்றென் மனக் கொந்தளிப்பும் அளவிற்கு மீறி யிருக்கிறது... ஆனால் அதற்காக யான சண்டையிட யிங்கு வரவில்லை—இவ்வளவு நடந்தேறிய பிறகு என்னாலினி என்ன செய்யமுடியும்? உம்முடன் சமாதானமாயிருப்பதற்கே இங்கு வந்தேன்! இனி ஒன்றே யான் விரும்புவது—மனோன்மணியுடன் ஒரு தடவையாவது விருந்துண்டு ஜதையாய் நடனம் ஆடவே இங்கு வந்துள்ளேன. அதற்கு தேவரீர் அருளவேண்டும்—இதோ அழகிய வனிதைகள் நிரம்பப் பெற்ற இவ்வுயர் நாட்டில் சகல குண சம்பன்னனும், மகாவித்துவானும், புஜபல பராக்கிரம தீரனும், தனவானுமான என்னை எவ்வளவோ அழகிய யுவதிகள் காதலிக்கின்றனர்!—எனக்கென்ன குறைவு பின்? மனோன்மணி என்ன அவ்வளவு உச்சிதம்?......" என்று தேனொழுக இனிமையுடன் வணக்கமாகத் தெரிவித்தான் நம் கதா நாயகன்.

மனமிளகப் பெற்ற பிரபு அதற்கிசைந்தார். பின்பு காதலரிருவரும் ஜதை பிரிக்கப்பட்டனர். இது உமாவுக்கு விசனகரமாயிருந்தது. பின்பு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன!—சந்தோஷகரமாயிருக்க வேண்டிய அச்சம்பவம் அவர்களுக் கச்சமயம் துக்கத்தையே ஈந்தது.

தான் முழு இதயத்துடன் காதலித்த வீரன் தன் முன்னிற்பது கண்டு மனோன்மணி சிறிது நாணித் தலை குனிந்தாள். அவளுக்கே அது சிரிப்பை உண்டாக்கியது!—அத்தகையவனை மறந்து வேற்றொருவனைத் தன் காதலுக்கு ஆளாக்கியது பற்றி அவளவன் முன்னிலையிற் சிறிது வருந்தினாள். அவ்வருத்தமே அவளுக்குப் பூரண மன்னிப்பளித்ததெனலாம். மனோகரனது காரியமவளுக்கு நன்றாகத் தெரியும். தன்னுயிரையுந் திரணமாக மதித்து, எங்ஙனமாயினும் தான் காதலித்தவளையே மணப்பது என்னும் திட தீர்மானத்தையவன் நன்கறிந்தாள்—வருத்தமவளை விட்டபாடில்லை! அவன் என்ன முயன்றாலுமவன் முயற்சிகள் வீணே என்றுணர்ந்த அவள் அவன் தன் முயற்சியில் இறக்கவும் வேண்டியிருப்பது பற்றி—பாபம்! அவள் துக்க சாகரத்தில் ஆழ்ந்தாள்—கண்ணீர் விட்டாள்! காதலன் முன் காரிகைதன் உணர்ச்சிகள் பலவிதமாயின—அவர்களைப் பார்த்த அவள் சமீபமிருந்த பெண்கள் தங்களுக்குள் குசுகுசுவென்று "மனோன்மணிக்கும் மனோகரனுக்கும் மணம் நடந்தால் நன்றாயிருக்கும்" என்று பேசிக் கொண்டார்கள்,

இப்படி இருக்கும்போது மனோகரன் மனோன்மணியின் கை நகங்களைத் தீண்டி ஏதோ சொல்பவன் போலவள் செவியருகு சென்று குசுகுசு வென்றான்—பின்பிருவரும் வாயிற்படி அருகிற் சென்றனர். மற்றவர்களும் நடமாடிக் கொண்டிருந்தனர். இவர்களை நன்றாக எவரும் கவனிக்கவில்லை.

வாயிற்படி அருகே சென்றதும் மெதுவாக இருவரும் வாயிலைக் கடந்து சென்றுவிட்டனர். ஆங்கு மனோகரனுடைய குதிரையானது தீரமாய் நின்று கொண்டிருந்தது. மனோகரனதை ஒரு தடவை பலமாகத் தட்டிக் கொடுத்துப் பின்பு மனோன்மணியைத் தனது பலமுள்ள கைகளாற்றூக்கிக் கண்டகன் முதுகின் மேலுட்கார வைத்துத் தானுமதன் மேல் ஐங்கென்று தாவி உட்கார்ந்து கொண்டான். பின்பு சைகை செய்யப்பட்டது. கண்டகன் மனோவேகமுந் தோல்வியுறுமாறு ஓட்டம் பிடித்தது. மனோன்மணி அபகரிக்கப்பட்டாள்! காதலரிருவரும் நெடுந் தூரஞ்சென்று விட்டார்கள். கண்டகன் புதர் மேலும் கற்கள் மேலுமோடவாரம்பித்தது. காதலரிருவரும் கருத்தொருமித்து தைரியத்தையும் துணிச்சலையும் துணையாகக்கொண்டு இருந்தனர். மனோகரன் எல்லாம் வல்ல இறைவனைத் தங்களைக் காப்பாற்றுமாறு மனங்கரைய வேண்டினான்.

மனோன்மணி அபகரிக்கப்பட்டது வெளிப்படவே ஆங்கு குழப்பமுண்டாயிற்று. உமா கோவென்றழுதாள். அப்பலவாணர் தனது மகளையும் மனோகரனையுந் தனது கொடிய சாபத்திற்கு ஆளாக்கினார். ஆங்கிருந்த பிரபுக்கள் தங்கள் குதிரைகளின் மேலேறிக்கொண்டு மனோகரனைத் துரத்த ஆரம்பித்தனர். எங்கும் குழப்பமதிகமாக விருந்தது. ஒருவராலும் காதலர்கள் பிடிக்கப்படவில்லை—பாபம்! நவீனபுரியே அதற்குப் பின்பு மனோன்மணியைக் கண்டதில்லை. காதலிறுதியும் போரிலஞ்சா நெஞ்சம் படைத்த மனோகரனைப் போன்ற வீரனொருவனைப் பற்றியாவது நீங்கள் கேட்டதுண்டா?

## மூன்றாம் பாகம்.

அடுத்த நாள் மாலை ஆறரை மணி யிருக்கும்! சமுத்திரக் கரையிலோர் படகோட்டி உட்கார்ந்திருந்தான். அப்பொழுது கடலில் கொந்தளிப்பதிகமாயிருந்தது. பெரும் புயலொன்றடித்துக் கொண்டிருந்தது. அப்போது குதிரை வரும் சத்தங்கேட்டுப் படகோட்டி திரும்பினான். மறு நிமிடம் இரண்டாட்களவனெதிரே நின்றனர். இருவர்மாத்திரம் யிருந்தவர்களாயிருந்தார்கள்.

அவர்களில் ஒருவனான மனோகரன் “ஏ! மாலுமி!! சற்றுந்தாமதமின்றி—விரைவாய்—உன் படகை—ஓட்டுவாயா?—இதோ!—இப்பொழுது மட்டும் நீ உதவினால் ஒரு பவுன் தருவேன்—ஆ! அது மாத்திரமன்று—மெத்தப் புண்ணியமுண்டு” என்று மிகப் படபடப்பாய்க் கூறினான்.

படகோட்டி:—ஆ! இதென்ன நீ சொல்வது? இத்தகைய சமயத்தில் யார் படகோட்டுவார்கள்? உனக்குப் புத்தியில்லையா? புசலடிக்கிறது பலமாக; கடல் கொந்தளிக்கிறது; இருட்டு ரொம்ப இருக்கிறது—படகை விடவேண்டுமாம்!—உன் பவுன் யாருக்கு வேண்டும்?—அதற்காக ஆசைப்பட்டால் யமபுரத்திற்கு டிக்கட் (Ticket) வாங்க வேண்டியதுதான்—சமுத்திர ராஜனுக்குப் பலியாக வேண்டியதே கதியாகும்! அவ்வளவு அவசரமுனக்கென்ன?

மனோகரன்:—நண்பனே! நான் இந்திரபுரி இராமநாதப் பிரபு குமாரன்—இதோ இவள் நவீனபுரி அம்பலவாணப் பிரபு குமாரத்தி. நாங்களிருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தோம்—ஆனால் இதற்கு அம்பலவாணரும் இராமநாதரும் சம்மதிக்கவில்லை—நாங்கள் ஓடி வந்தோம்—அதோ அவர்கள் துரத்தி வருகிறார்கள்—அவர்களுக்கு முன்னாக—எவ்வளவோ விரைவாய் நாங்கள் வந்தோம். எனதுயிரான கண்டகனெனக்குதவியதைப் போல் யாரெனக்குதவப் போகின்றார்கள்? (கண்டகனிடம் சென்றழுதவண்ணமதற்கு முத்தமீந்து) எனக்குதவிய பிராணியே! உன்னை ஈசன் காப்பானாக!—என்னை மாத்திரம்—ஆ!—அவர்கள் பிடித்திருந்தால் நானவர்கள் கையிற் சிக்கி இருந்தால்—என்னைக்கொன்று மிருந்தால்—என் மனோன்மணியின் கதி எவ்வாறாகும்?—அந்தோ! கண்டகமே!! உன்னைப் பிரிய வேண்டியிருக்கிறதே! கடவுளே! இன்னும் ஏழை மீது கிருபை பிறக்கவில்லையா? அந்தோ! என் செய்வேன்?”

படகோட்டி:—இதோ நானுங்களைக் கூட்டிச் செல்லத் தயாராயிருக்கின்றேன். ஏ! பிரபுவே! உமது ஒரு பவுனுமிற்கு யான் சம்மதிக்கவில்லை. அழகே உருவெடுத்து வந்த உமது காதலிக்கும், பரிதாபகரமான உமக்கும் மனமிரங்கியே யான் சம்மதிக்கின்றேன்! ஆ!—நான் என்னுயிரையும் தியாகம் செய்ய ஆயத்தமாயிருக்கின்றேன்! என்னுயிர் எனக்குத் துரும்பு போல்——நீங்கள் பிழைத்தால் அதுவே எனக்குப் போதும். அதையே யான் கோருவது! புயல் பலமாயடித்தாலும், அலைகள் பேரிரைச்சலுடனுருண்டாலும், நானிதோ உங்களுக்குதவும்பொருட்டுப் படகை ஓட்டுகின்றேன்.

இச்சமயத்தில் புயல் பலமாயடித்துக்கொண்டிருந்தது. கடலலைகள் காது செவிடுபடும்படி இடிமுழக்கஞ் செய்தன. இருள் மிக மூண்டது. இரவுந் தொடங்கியது. குதிரைகள் ஓடிவரும் சத்தத்தையும் அவர்கள் கேட்டார்கள்.

“ஓ! சீக்கிரம்!! சீக்கிரம்!!! யான் மகா கோபியாம் என் தந்தையின் முகத்தில் விழிக்க வெறுக்கின்றேன்!—புயல் எவ்வளவு பலமாயடித்தாலும் சரி! ஓட்டு—படகை—ஓட்டு!! சீக்கிரம் ஓட்டு!!! விரைவாய் ஓட்டு!! நான் என்னுயிரை இக்கடல் மத்தியில்விட நேர்ந்தாலும் என் தந்தையின் கோபமுகத்தில் விழியேன்—இது முழுச்சம்மதம்!” என்றலறினாள் மனோன்மணி.

படகு கரையைவிட்டுப் புறப்பட்டுவிட்டது. கடல் மத்தியிலும் சென்றுவிட்டது—ஆனாலத்தகைய புயலின்முன் அது எம்மாத்திரம்? பாபம்! படகின்கதி அம்பலமாயிற்று!—நடுக்கடலிலவர்கள் யாதொரு உதவியுமின்றித் தத்தளித்து வருந்தினர்.

அம்பலவாணரும் பிரபுக்களுடன் காதலருவர்களையும் சபித்துக்கொண்டே கடற்கரையை அடைந்தார். தன் மகள் படுமவஸ்தையைக் கண்டு, அவளிறப்பாள் என்றறிந்ததே—அந்தோ! அவர் கோபமெல்லாமிருந்தவிடம் தெரியாது ஓடி விட்டது—உடனே அவர் பலமாக அழ ஆரம்பித்தார். பெரும் மரண பயத்தாற் பிடிக்கப்பட்டு அவ்விருளில் நடுக்கடலில் புயலால் அவஸ்தைப்படும் தன் மகளைக்கண்டதே—அந்தோ!—அவர் மென்மேலும் விம்மி விம்மி அழவாரம்பித்தார். அவரால் அழுகையை நிறுத்த முடியவில்லை. மனோன்மணி தனது அழகிய இடது கையால் மனோகரனை அணைத்துக்கொண்டு—அழகிய வலதுகையை உதவியின் பொருட்டு உயர நீட்டி, “பரம்பொருளே! ஆதிமூலமே!” எனக் கதறி நின்றாள்.

"ஆ! என் மகனே! ஐயோ!! என் மகனே!!! வீணே இறக்கின்றையே! என் மனம் துண்டு படுகின்றதே! அந்தோ! என் கண்மணி! திரும்பி வந்துவிடு!—நீங்கள் சுகமாயிருங்கள். நீ சுகமே மனோகரனையே மணந்துகோள்!—திரும்பிவா!—ஐயோ! திரும்பிவா!!" என்றம்பலவாணர் கதறினர்!

எல்லாம் வீணே முடிந்தது! கொடிய அலைகள் படகைக் கவிழ்த்துவிட்டன! படகிலுள்ளோர்கட்கு யாதொரு உதவியும் கொடுக்கப்படவில்லை!! குரூரக் கடலலைகள் படகினுட் சென்று அதைக் கவிழ்த்துவிட்டன!! காலன் அப்படகை நோக்கி நடந்தான்—அடுத்த நிமிடம் அப்படகிலிருந்து, "ஆதிமூலமே" என்ற தொனி கிளம்பி ஆகாயத்தைக் கிழித்தது.

# பலமணிக் கோவை.

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)

(320-வது பக்கத் தொடர்ச்சி)

## 6. நமக்கு மயிர் இருப்பதனால் என்ன பயன்?

விரலில் நகங்கள் போலவே நமது தலையிலும் உடலிலும் மயிர் இருக்கும் விஷயத்தையும் கவனிக்க வேண்டும். தலை மயிரால் நமக்கு அதிகப் பிரயோசனம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் மிருகங்களுக்கு இவ்விதம் ரோமம் இருப்பதனால்தான் அவைகள் வசிக்க சுலபமாகிறது. குளிர்ச்சியும் ஈரமும் பிராணியின் சரீரத்தைப் பாதிக்காமலிருக்கும்பொருட்டு இயற்கையாக ரோமம் ஏற்பட்டிருக்கிறது. மிகக் குளிர்ச்சியான தேசங்களில் உள்ளவர்களுக்கு ரோமம் அதிகமாக இருக்கும். முற்காலத்து மனிதர்களுக்கு ரோமம் அடர்த்தியாக இருந்தது. இக்காலத்திலோ பலவகையான உடுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. பருத்தி ஆடைகளும் கம்பளங்களும் நாம் உபயோகிக்கிறோம். அக்காலத்தில் இவைகள் அதிகம் ஏற்படவில்லை. ஆகவே இயற்கையான ரோம உடுப்பு எவ்வளவு அவசியமாக இருந்திருக்கும். மேலும் நாம் உபயோகிக்கும் கம்பளி, பிளானல், அல்பாக்கா, மெரினோ முதலியவைகள் எல்லாம் மிருகங்களின் ரோமம்தான். ரோமத்தைக் கழுவி நூலாகச் செய்து வஸ்திரமாக்கி நாம் உபயோகிக்கிறோம். தலைமயிரினால் முகத்திற்கு அழகு உண்டாகிறதென்று பொதுவாக நமது எண்ணம்.

## 7. நமக்குப் பசி உண்டாவதெவ்வாறு?

மிருகங்கள் சில விஷயங்களைத் தாமாகவே இயற்கையில் உணர்ச்சியறிவாகத் தெரிந்துகொள்ளும். அதுபோலவே நாமும் ஒன்று இரண்டு விஷயங்களை உணர்ச்சியால் அறிந்துகொள்வோம். பசி என்பது எப்படி என்று வர்ணித்துச் சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொருவனும் அறிந்துகொள்வான். சிறு குழந்தையும் பசி அறிந்து உணவு தேடி வரும். நமது தேக அமைப்பில் இவ்விதம் நம்மைக் கூப்பிட்டு ஆகாரம் தேடிக் கொடுக்கும்படி தூண்டும் சக்தி இருப்பது ஆச்சரியமாகத் தோன்றும். தேகத்தில் உணவு குறைந்துவிட்டது என்றால் ரத்தத்தில் பலம் குன்றிவிட்டது என்று பொருள். நமது வயிற்றில் கபகப என்று ஒருவித உணர்ச்சி உண்டாகிறது. அதுதான் பசி. கற்று அறியாமலும் கேட்டுத் தெரியாமலும் சுபமாகவே ஒருவன் அறிந்துகொள்ளும் சில விஷயங்களில் பசி என்பது ஒன்று.



## 8. பகற்காலங்களில் நட்சத்திரங்கள் எங்கு ஒளிந்துகொள்கின்றன?

நட்சத்திரங்கள் ஒளிந்து கொள்வதில்லை. பகற் காலத்திலும் இரவிற் புலப்படுவது போலவே தெரியும். ஆனால் சூரிய வெளிச்சம் இருப்பதால் நட்சத்திரங்கள் நமக்குப் புலப்படுவதில்லை. சூரியனை ஏதேனும் நன்றாக மறைத்து விட்டால் நட்சத்திரங்கள் தெரியும். சில சமயம் சூரியக் கிரஹணம் ஏற்பட்டுச் சூரிய வெளிச்சம் மறைந்து விட்டபோது நட்சத்திரங்கள் தெரியும். அதாவது சூரிய வெளிச்சம் செவ்வையாக மறைந்து போகவேண்டும். பகற்காலத்தில் நட்சத்திரங்கள் ஒளி சூரிய வெளிச்சத்தில் மூழ்கிப் போகிறது. ஏனெனில் சூரியன் நமக்கு வெகு சமீபம் இருக்கிறது. அதாவது சுமார் ஒன்பது கோடி மைல் தூரம். ஆனால் நட்சத்திரங்கள் வெகு தூரம் உள. ஆழமான சுரங்கங்களில் வேலை செய்பவர்கள் பகல் நேரத்திலுங்கூட ஒரு துவாரம் வழியாக மேலே வானத்தை நோக்கினால் நட்சத்திரங்களைப் பார்க்கிறார்களாம்!

## 9. சூரியனில் வெளிச்சம் எவ்வாறு உண்டாகிறது?

சூரியன் ஒரு நெருப்புப் பந்து என்று சாதாரணமாக நாம் சொல்வது. ஒரு வஸ்து எரிகிறது என்றால் அந்த வஸ்து ஆகாயத்தில் இருக்கும் பிராண வாயுவுடன் கலந்து கொள்கிறது என்று ஞானிகள் கண்டறிந்து சொல்கிறார்கள். அப்படி எரியும் ஒரு வஸ்து சில காலத்திற்குப் பிறகு எரிச்சல் ஓய்ந்து சாம்பலாகி விடும். ஆனால் சூரியனில் அவ்விதம் வஸ்துக்கள் எரியவில்லையாம். மேதாவியான ஞானிகள் கண்டு ஊகித்திருக்கும் விஷயம் வேறு. சூரியன் நாளுக்கு நாள் வருஷத்திற்கு வருஷம் ஒடுங்கிக்கொண்டு வருகிறது. இவ்விதம் சுருங்குவதினால் உஷ்ணமும் வெளிச்சமும் உண்டாகிறது. இந்த பூமி எவ்வாறு சுருக்கமடைந்து ஜலமும் பூமியுமாக மேற்புறத்தில் ஏற்பட்டதோ அவ்வாறே சூரியனும் சுருக்கமடைந்து வருகிறது. பல கோடி வருஷங்களாக இவ்விதம் நடந்து வருகிறது. பூமி உண்டாவதற்குமுன் சூரியன் நெடுந்தூரம் வியாபித்திருந்ததாகவும் பிறகு சுருக்கம் அடைந்து வரும்போது பல கிரகங்கள் ஏற்பட்டதாகவும் சூரியன் சுருங்கி இப்போது உள்ள நிலைமை ஏற்பட்டதாகவும் சாஸ்திர மேதாவிகள் ஊகிக்கின்றனர். இந்த கிரகங்கள் சூரியன் குடும்பம் என்று சொல்வதுண்டு. பூமியும் ஒரு கிரகம்தான். இவ்விதம் சூரியன் சுருங்கும்போது அதில் உள்ள அணுக்கள் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு நெருப்பும் வெளிச்சமும் ஏற்படுகின்றன. சிக்கிமுக்கிக் கல் தட்டும்போதும், இரும்புத் துண்டுகளை அடிக்கும்போதும் உஷ்ணமும் நெருப்புப் பொறியும் உண்டாகிறதல்லவா? சூரிய வெளிச்சம்போல ஏற்பட வேண்டுமானால் எவ்வளவு அணுக்கள் மோதிக் கொள்ளவேண்டும்?

## 10. ஆகாயம் நீலமாயிருப்பதேன்?

இந்த வினாவிற்கு விடையை ஜான் டிண்டல் என்னும் மேதாவி எடுத்துச் சொன்னார். ஆகாயத்திற்கு உண்டாகும் நீல நிறத்திற்குக் காரணம் சூரிய வெளிச்சம்தான். சாதாரணமாக நீல நிறப்பந்தல் என்று ஆகாயத்தை வர்ணிப்பது வழக்கம். வாஸ்தவமாக ஒரு பந்தலுமில்லை. ஆகாயத்தில் சூரியனில்லாதபோது இருட்டாக இருக்கிறது. சூரிய வெளிச்சத்தை முப்பட்டைக் கண்ணாடியில் பார்க்கும்போது வானவில் வர்ணங்கள் உண்டாவது விளங்கும். சூரிய வெளிச்சத்தில் வர்ணங்கள் இருக்கின்றன. ஆகாயத்தில் உள்ள சில அணுக்கள் இந்த சூரிய வெளிச்சத்தில் மற்ற வர்ணங்களை

வெளி விடாமல் நீல நிறத்தை மாத்திரம் வெளிவிடுவதால் ஆகாயத்தில் உள்ள அணுக்கள் எல்லாம் நீல நிறமாகப் புலப்படுகின்றன. ஆகாயத்தில் தூசித்துணுக்குகள் எனும்படியான அநந்தகோடி அணுக்கள் உள. வீட்டின் கூரை துவாரத்திலிருந்து சூரிய வெளிச்சம் விழும்போது தூசி நிறைந்திருப்பதைக் கவனிக்கலாம். இந்த அணுக்கள் சூரிய வெளிச்ச கிரணங்களைப் பிடித்துக் கொள்ளாமல் இருந்தால் சூரிய வெளிச்சம் நமக்கு இன்னும் உக்கிரமாக நேராக வரும்.

11. சங்கீதம் எப்படி உண்டாகிறது?

இந்த வினாவிற்கு விடை சொல்வதற்கு இன்னொரு வினா கேட்கவேண்டும். ஏனெனில் சங்கீதம் என்பது ஒரு வரம்பிற்குட்பட்ட சப்தம். சப்தம் எப்படி உண்டாகிறது என்று தெரிந்து கொண்டால் சங்கீதத்தைப்பற்றி அறிந்து கொள்ளலாம். சங்கீதம் இல்லாத வேறுவித சப்தங்களும் உண்டு அல்லவா? ஒரு சப்தம் இனிமையான கீதமாக இருக்கும். இன்னொரு சப்தம் அப்படியிராது.

12. சப்தம் நமக்கு எப்படித்தெரிகிறது?

ஆகாயத்தில் உள்ள அணுக்களில் சலனம் உண்டாகி அலைகள் மோதுவது போல ஓடுவதால் சப்தம் உண்டாகிறது. குளத்தில் ஜலம் காற்றில் அசைந்து அலைகளாக நகரும். இந்த அலைகளை நாம் பார்க்கிறோம். இந்த அலைகள் ஒன்றின்மீதொன்று மோதுவதனால் சப்தம் ஏற்பட்டு நாம் கேட்கிறோம். ஆனால் சப்தத்தினால் ஆகாய அணுக்கள் அலைகளை நாம் பார்க்க முடியாது. நமது கைகளைத் தட்டும்போதும், வார்த்தைகள் பேசும்போதும் ஆகாயத்தில் அலைகள் உண்டாக்குகிறோம். இந்த அலைகளை நமது காதுகள் ஸ்பரிசிப்பதுபோல அறிந்து கொள்கின்றன. சப்த அலைகள் மிகவும் நுட்பமானவை. அவைகள் பல கோடி வகைப்படும். இந்த நுட்பமான அலைகள் நமது காதில் இருக்கும் மேளத்தில் தாக்கவே நாம் சப்த உணர்ச்சியை அடைகிறோம். இந்த சப்த அலைகளை ஒழுங்காகச் செய்து பழக்கம் செய்துகொண்டபடியால், அந்தப் பழக்க வாசனையினால் நாம் வார்த்தைகளை அறிகிறோம். ஒழுங்கான அலைகளின்றி வெறும் கூச்சல் போட்டாலும் அலைகள் நமது செவியில் மோதுகின்றன. அப்போது அது வெறும் கூச்சல் என்று அறிகிறோம். சங்கீத சப்தமும் இவ்விதம்தான்.

13. நமது தொண்டையிலிருந்து சப்தம் எவ்விதம் உண்டாகிறது?

இதை அறிந்துகொள்வதற்கு ஒரு டோயன் நூலை எடுத்து இறுகப்பிடித்து ஒரு சிலேட்டின்மீது கட்டிவிட்டு அதை மீட்டிப் பார்க்கவேண்டும். அல்லது ஒரு குண்டூசியை மேசையின்மீது அழுத்திக் குத்திவிட்டு அதை சுண்டிப் பார்க்கவேண்டும். அப்போது டிங் டிங் என்று சப்தம் உண்டாகும். சப்தம் உண்டாகும்போது அந்தக் குண்டூசி முன்னும் பின்னுமாகத் துடித்து நடுங்குவதைப் பார்க்கலாம். அவ்விதம் நடுங்கும்போது சப்த அலைகள் ஏற்படும். இன்னும் கெட்டியாக நூலைப்பிடித்து இழுத்துவிட்டு மீட்டினால் இன்னும் கிரீச்சென்ற தொனி ஏற்படும். அப்போது அந்த நூல் அதிசீக்கிரமாகத் துடிக்கும். நாம் பேசும்போது அம்மாதிரியே நமது தொண்டையில் உள்ள சப்தப்பெட்டியில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு சதை நூல்களைத் துடிக்கும்படி செய்கிறோம். பிறகு தொண்டையில் இவ்விதம் ஏற்பட்ட சப்தத்தை வெளிவிடும்போது நாக்கைப் பல வித நிலைமையில் வைத்தும், பற்களைக் கடித்துக்கொண்டும், உதடுகளை வளைத்தும் உருட்டியும் பலவிதமாகச் செய்தால் சப்தம் வெவ்வேறு விதமாக ஏற்படுகிறது.

(தொடரும்.)

# இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924௵ ஆகஸ்டு௴ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்து கொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்பிரவரி௴ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செவிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், பத்திராதிபரால் எழுதப்பட்ட வேமணிபோன்ற பல சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செவிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. இவ் ஆறு தனிப்பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும்.

முதல் வருஷ ஆரம்பத்தின் ஆறு பிரதிகளும் தேவையென (1924 ஆகஸ்டிலிருந்து 1925 ஜனவரிவரை) 500 ஆர்டர்கள் பதிவானதும் அவை அச்சிடப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை.

---

ஸ்ரீமான் க. சா. அ. ராம. சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே!

இப்பவும் தங்களால் நடத்தப் பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தா தாராகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பியிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பி வைக்கக்கோருகிறேன்.

---

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செந்துவில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு பிரதியுபகாரங்கருதாது தம் கடமையை அன்புடன் புரிந்து வரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்தியுள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் 'சித்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டுப் பெண் பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் ஆடவர்கள் தங்கள் தேச நிலையை கவனித்து அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய கருவியாகவும் உதவுமென்பதை அறிவாளிகள் அனைவரும் உணர்வார்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப்பெரும் பேருபகாரத்திற்கும் இந்தியப் பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுங்கால வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

### தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார் :—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபமுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ஸ்ரீரகுவீரனுடைய மகிமையை "ஸுபோதராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமசந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீனென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

### (ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா.

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷப் பிரியங்கொள்ளுகிறார்கள்.

### (ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும், உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

### 4-8-26 ல் F. M. S லிருந்து ஸ்ரீமதி சொர்னலக்ஷ்மி எழுதுவது :—

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமே யல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியினாலேயே ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.



## சிந்தாமணி பைண்ட் வாலியம்கள்.

| | | |
|---|---|---|
| 1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் | ரூ. | 3-8-0 |
| 1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் | ரூ. | 3-8-0 |
| 1926 பிப்ரவரியிலிருந்து 26 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் | ரூ. | 3-8-0 |

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாரர்களுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதார் ஆனவர்களுக்கும் மட்டும் மேற் கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் 3—ரூபாய்க்கு அனுப்பப்படும்.

பைண்ட் வாலியம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் அனுப்பப் படமாட்டாது.

சொற்பப்பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாப்பூர், சென்னை.

## சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

### உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

### ஸுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

### திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேராவலை விளைவிக்கும்.

கேஸரியின்

## லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா' வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

TO LET

## ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராம கிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.



## குழந்தைகளின் மித்திரன்.

## பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜசுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனைவியாகுலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26 பிராட்வே, மதராஸ்.

சீக்கிரம் வெளிவரும்!

அச்சிலிருக்கிறது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேச முன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கானவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதவாராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ. 1—0—0.

ஏற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணா 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"

சலிவன்ஸ் கார்டன் ரோட்.

மயிலாப்பூர் சென்னை.

## சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ. 22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,

31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

## 'தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங்கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

## தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாட்டச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

---

# இதரப் பிரசுரங்கள்.

## இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய தேசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

## ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டா வென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகங்கடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். ஸ்போத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணுவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்,
மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மராட்டி பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மகா ராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் கிடையா. இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

| | |
|---|---|
| பால ராமாயணம் டபிள் கிரவுன் விலை அணா. | 0—6—0 |
| பால பாரதம் ஷை 92-பக்கங்கள் அணா. | 0—8—0 |
| பால பாகவதம் ஷை 87-பக்கங்கள் அணா. | 0—8—0 |

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்
மயிலாபூர், சென்னை என்றெழுதவும்.

# "சிந்தாமணி."

மூன்றாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள்:—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. 6½; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியோகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாபூர், சென்னை.

---

# பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.
3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.
4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகார்ணம்," ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.
5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.
6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.
7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கழித்துக் கொள்ளப்படும்.
9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், பூரா விலாசம் இவைகளுடன் இன்னதுக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.
10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

# தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணு 10.
   **Approved as a Library Book.**

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணு 10.
   **Approved as a Text-book suitable for School use, vide** *Fort St. George Gazette*, **Pa dated 19-5-1925.**

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காச ரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணு 8.
   **Approved as a Text-Book suitable for School use.**

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணு
   **Approved as a suitable Text-Book, vide** *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழு ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூ விலை ரூ. 1—4—0.
   **Approved as a Library Book.**

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. அணு 12.
   **Approved as a Text-Book for Schools and Colleges, vide** *Fort St. George G* **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ் வர்கள் எழுதியது. விலை அணு 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சா யாரவர்கள் எழுதியது. விலை அணு 12.
   **Parts I and II are approved as suitable class-books, vide** *Fort St. George Gazette*, **P page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றி விலை அணு 8.
   **Approved as a Text-book suitable for School use, vide** *Fort St. George Gazette*, **dated 19-5-1925.**

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரிய ஆர். இரங்காசாரியார், M.A., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணு. 10.

11. காளிதாஸன்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணு 12.

**SRINIVASA VARADACHARI & CO.,**
***4, Mount Road, Madras.***

L'

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |

3